# தென் பெண்ணை



...சிரியர்.

...சமாணிக்கனார்.

...M.O.L., PH.D.

...நாகலிங்கம் கம்...பனி

மா. ரா. அரசு
சென்னை-600001

## முகவுரை

பெண்ணையாறு மைசூர் நாட்டில் நந்தி துர்க்க மலைத்தொடரில் தோன்றுகிறது; பெங்களூர் மாவட்டத்தில் பாய்ந்து, சேலம் வடஆர்க்காடு மாவட்டங்கள் வழியாகத் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் புகுந்து, அதன் நடுப்பகுதியில் பாய்ந்து, கடலூருக்கு வடக்கே ஏறத்தாழ நான்கு கல் தொலைவில் கடலொடு கலக்கிறது.

பெண்ணையாறு அகநானூற்றிலும் புறநானூற்றிலும் பின்வந்த இலக்கிய நூல்களிலும் போற்றப் பெற்றுள்ளது; தன் இரு கரைகளையும் அடுத்து வாழும் மக்களுக்குச் செவிலித் தாயாக விளங்கி வருவது.

பெண்ணையம் பேரியாற்றின் போக்கும், அதன் கண் ஆங்காங்கு அமைந்துள்ள அணைகள் ஊற்றுக் கால்கள் இயற்கை நீரூற்றுக்கள் ஆகியவற்றின் பயனும், பெண்ணை நாட்டு வரலாறும், பெண்ணை நாட்டு ஊர்கள் பற்றிய விவரங்களும், பெண்ணை நாட்டு இலக்கியம் பற்றிய செய்திகளும், பெண்ணை நாட்டு நாகரிகமும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

(விழுப்புரம் நண்பர் திருக்குறளார், வி. முனிசாமி (பி.ஏ., பி.எல்.) அவர்களும், திருவதிகை வித்துவான் ந. சண்முகசுந்தரன் அவர்களும், காவேரிப்பட்டணம் நண்பர் மு. காவிரி அவர்

களும் பெண்ணையாறுபற்றி யான் விடுத்த வினாக் களுக்கு அன்போடு விடையளித்தனர். திருவதி கைக் கோவிற் புகைப்படங்களைப் பண்ணுருட்டி வணிகர் திரு. T. K. இராமலிங்கம் அவர்கள் எடுத்து உதவினார்கள். மயிலாப்பூர் வி. ஆறுமுக னார் அவர்கள் இந்நூல் எழுதுவதற்கு இன்றியமை யாத சில நூல்களை உதவினார்கள். இப்பெருமக்க ளுக்கு எனது நன்றி உரியது.

மண்டகப்பட்டு, தளவானூர், பனமலைக் குடை வரைக் கோவிற் படங்களை உதவிய அரசாங்கப் புதைபொருள் ஆராய்ச்சித் துறையினர்க்கு என் மனமார்ந்த நன்றி உரியது.

ஆசிரியர்

# உள்ளுறை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தென் பெண்ணையாறு | ... | 1 |
| 2. | அணைக்கட்டுகளும் கால்வாய்களும் | ... | 14 |
| 3. | பெண்ணை நாட்டு வரலாறு–I | ... | 24 |
| 4. | பெண்ணை நாட்டு வரலாறு–II | ... | 36 |
| 5. | பெண்ணை நாட்டு வரலாறு–III | ... | 44 |
| 6. | பெண்ணை நாட்டு ஊர்கள்–I | ... | 54 |
| 7. | பெண்ணை நாட்டு ஊர்கள்–II | ... | 67 |
| 8. | பெண்ணை நாட்டு ஊர்கள்–III | ... | 80 |
| 9. | பெண்ணை நாட்டு ஊர்கள்–IV | ... | 92 |
| 10. | பெண்ணை நாட்டு நாகரிகம் | ... | 108 |

# நாட்டு வணக்கம்

ஜன கண மன அதி நாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஷ மாங்கே
காயே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே! ஜயஹே! ஜயஹே!
ஜய ஜய ஜய ஜயஹே!

# தேசீய கீதம்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிறாய்
நின் திருநாமம், பஞ்சாபையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.
அது விந்திய ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.
அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப்
பாடுகின்றன;
இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி! வெற்றி! வெற்றி!


தென்பெண்ணையின் தோற்றமும் போக்கும்
வ
மைசூர் இராச்சியம்
சிக்பல்லபுரம்
தேவன்ஹள்ளி
சர்ஜபுரம்
தென்பெண்ணையாறு
வடஆர்க்காடு மாவட்டம்
செங்கற்பட்டு மாவட்டம்
சேலம் மாவட்டம்
திருக்கோவலூர்
திருவெண்ணைநல்லூர்
தென்பெண்ணையாறு
தென்னார்க்காடு மாவட்டம்
கடலூர்
வங்காள விரிகுடா

# 1. தென் பெண்ணையாறு

## இலக்கியத்தில் தென்பெண்ணை

### சங்க நூல்கள்

பாண்டியர் இற்றைக்கு 1700 ஆண்டுகட்கு முன்பு மதுரையில் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தனர். அதனால் 1700 ஆண்டுகட்கு முற்பட்ட காலம் **சங்க காலம்** எனப்படும். தொல்காப்பியம், திருக்குறள், புறநானூறு போன்ற அக்காலத்துத் தமிழ் நூல்கள் **சங்க நூல்கள்** எனப் பெயர் பெறும். இச்சங்க நூல்களின் காலம் ஏறத்தாழக் கி. மு. 300 முதல் கி. பி. 300 முடிய என்று சொல்லலாம்.

அகநானூறு என்னும் சங்க நூலில் **பெண்ணையாறு** பற்றிக் கீழ்வரும் செய்தி காணப் படுகிறது :

" உயர்ந்த தேரினை உடைய **காரி** திருக்கோவலூர்க்குத் தலைவன். அவ்வூரில் எப்பொழுதும் முழவு என்னும் வாத்தியத்தின் ஒலி கேட்டுக் கொண்டே இருக்கும். கொடுங்கால் என்னும் ஊரும் காரிக்கு உரியது. அவ்வூர் **பெண்ணையாற்**றங்கரையில் அமைந்திருக்கிறது. தலைவியின் கூந்தல் அப்பெண்ணையாற்றின் நுண்ணிய கருமணலை ஒத்துள்ளது."

மாறோக்கத்து நப்பசலையார் என்ற புலவர் மலையமான் திருமுடிக்காரியைப் பார்த்து, "**பெண்ணையாற்**றுப் பக்கத்தை உடைய நாட்டை

உடையவனே!'' என்று விளித்துப் பாடிய பாட்டுப் புறநானூறு என்னும் சங்க நூலில் காணப்படுகிறது.

''பெண்ணையம் படப்பை நாடுகிழ வோயே''.

## திருநாவுக்கரசர் தேவாரம்

ஆற்றங்கரையில் உள்ள ஓர் ஊர் மிக்க செழுமையாக இருக்கின்றது என்று அவ்வூரின் செழுமையைப் புலவர் ஒருவர் சிறப்பித்துக் கூறுதல், அந்த ஆற்றின் சிறப்பை மறைமுகமாகக் கூறுவதாகும் அன்றோ? இந்த முறைபற்றிப் பெரியார் பலர் திருக்கோவலூரைச் சிறப்பித்துக் கூறினர். அவர்தம் கூற்றுக்களை இங்குக் காண்போம். கி. பி. 7-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த சைவ சமய குரவராகிய திருநாவுக்கரசர் கூறியுள்ளதைக் கீழே காண்க:

''திருக்கோவலூரில் பெண்ணையாறு தெளிந்த நீர்ப்பெருக்குடன் பாய்கின்றது. குரவ மரங்களும் கோங்கு மரங்களும் திருக்கோவலூரைச் சூழ்ந்துள்ளன. இவ்வூரில் மாந்தோப்புக்கள் நிறைந்துள்ளன. அவற்றில் உள்ள மரங்களில் மாம்பழக் குலைகள் தொங்குகின்றன. அக்குலைகளிலிருந்து மாங்கனிகள் சிந்துகின்றன.''

## திருஞானசம்பந்தர் தேவாரம்

அதே நூற்றுண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் தம் பாக்களில் இவ்வூரின் சிறப்பைக் கீழ் வருமாறு குறித்துள்ளார்:

''பனை மரங்களும் பைம்பொழில்களும் வயல்களும் திருக்கோவலூரைச் சூழ்ந்துள்ளன. இப்

பதி வளம் பொருந்திய பெண்ணையாற்று நீர்வந்து பாயப்பெற்ற வயல்களால் சூழப்பெற்றது. மலரும் பருவத்திலுள்ள அரும்புகள்மீது வண்டுகள் பாடும் பூஞ்சோலைகள் இங்கு உண்டு. இங்கு உள்ள குரவ மரங்கள்மீது வண்டுகள் ஏறும்; குரவ மலர்கள்மீது குழல் ஒலியும் யாழ் ஒலியும் போன்ற இனிய மெல்லிய ஒலியில் ரீங்காரம் செய்யும்.

## நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

கி. பி. எட்டாம் நூற்றுண்டில் வாழ்ந்த திரு **மங்கையாழ்வார்** பெண்ணையாற்றையும் திருக் கோவலூரையும் பற்றிக் கீழ்வருமாறு கூறி யுள்ளார் :

" பெண்ணையாற்றில் எப்பொழுதும் நீர் பாய்ந்துகொண்டு இருக்கும். அப்பெண்ணையின் தென் கரையில் திருக்கோவலூர் இருக்கிறது. அங்குச் செஞ்சாலி நெல் விளைகின்ற வயல்கள் செழித்து விளங்குகின்றன. அங்கு நீல மலர்களும் புன்னை மலர்களும் மிகுதி. அங்குள்ள கோங்கு மலர்களிலும் குரவ மலர்களிலும் வண்டுகள் இசை பாடும் இனிய ஓசை கேட்டு வயல்களில் உள்ள இனிய கருப்பங் கழிகள் உறக்கம் கொள்ளும். பொழில் அணைந்த அவ்வூரில் தென்றல் வீசும். அங்குக் கமுகு மரங்களும் இருக்கின்றன. அவற் றின் காய்கள் மரகதம்போல் பசுமையாக இருக்கும். அக்காய்கள் பழுத்தவுடன் பவள நிறத்தை அடை யும். அங்குள்ள சோலைகளில் செருந்தி மொட்டுக் கள் மலர்ந்து மணம் வீசும்.

" பெண்ணையாற்று நீர், நிலம் பரந்து வரும் இயல்புடையது. அதன் வெள்ளம் நீண்டு உயர்ந்த

மூங்கில்களை இழுத்துக்கொண்டு வரும். அம் மூங்கில்களில் உள்ள முத்துக்களும் வெள்ளத்தில் வரும். வெள்ளநீர் வயல்களில் பரவி நல்ல விளைச்சலை உண்டாக்கும். அவ்வூரில் அலைமகளும் கலைமகளும் மலைமகளும் கொலுவீற்றிருப்பர்."

## சுந்தரர் தேவாரம்

கி. பி. 9-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த **சுந்தரர்** திருவெண்ணெய் நல்லூர்ப் பதிகத்திலும் திருத்துறையூர்ப் பதிகத்திலும் பெண்ணை ஆற்றின் சிறப்பைக் கீழ்வருமாறு குறித்துள்ளார் :

"பெண்ணையாறு தன் திரைக்கைகளால் பொன், மணி, வைரம் முதலிய நவமணிகளை வாரி இறைத்து, மின்னல்போல் ஒளி வீசிக்கொண்டு வருகின்றது. அதன் நீர்ப் பெருக்கில் மூங்கிலும் வருகின்றது. மலர்களில் உள்ள மகரந்தப் பொடியும் நீரில் கலந்து வருகிறது. பெண்ணை வெள்ளம் மலர் மரங்களை வேரோடு சாய்த்து வருவதனுல், மலர்களைத் தாங்கி வருகிறது. அம்மரங்களிலுள்ள மலர்கள் ஆற்று நீருடன் கலந்து இனிமை தருகின்றன. பெண்ணையாறு நீர்வளம் உடையது.

"பெண்ணையாறு யானை மருப்புக்களையும் முத்துக்களையும் தன் வெள்ளப்பெருக்கில் கொண்டு வருகிறது; அகில் சந்தனம் முதலிய மரங்களையும் ஆற்றுவெள்ளம் சுமந்து வருகிறது; மல்லிகை, செண்பகம் முதலிய செடிகளை வேரோடு அகற்றிக் கொண்டு வருகிறது; பலவகை விலங்குகளையும் பலா, கொன்றை, வன்னி முதலிய மரங்களையும் தள்ளிக்கொண்டு வருகிறது; கோங்கு மரங்களையும் சாடி, அவற்றின் மலர்களை வயல்களில்

கொண்டு வந்து தள்ளுகிறது. வானத்தில் மேகங்கள் நின்று பொழியும் நீரைப் பெண்ணையாறு நிலம் குளிரக் கொண்டுவந்து நாட்டை வளப்படுத்துகிறது.''

## பெரிய புராணம்

கி. பி. 12-ஆம் நூற்றுண்டில் சுந்தரர் முதலிய நாயன்மார்களின் வரலாற்றை எழுதப் புகுந்த **சேக்கிழார்** பெருமான் ஆங்காங்குப் பெண்ணையாற்றின் சிறப்பைக் கீழ்வருமாறு பாடியுள்ளார்:

''பெண்ணையாற்று நீர், மலையில் வளர்ந்த சந்தன மரங்களையும் அகில் மரங்களையும் மயிற் பீலிகளையும் மணமிக்க மலர்களையும் விலையுயர்ந்த மணிகளையும் தன் அலைகளாகிய கைகளால் தள்ளிக்கொண்டு வரும். திருமுனைப்பாடி நாட்டைத் தன் நன்னீரால் வளப்படுத்தும் பெண்ணையாறு, மூங்கில்களில் உள்ள முத்துக்களோடு முல்லைக் கொல்லைகளிலிருந்து மணமுடைய புது மலர்களைத் தன் அலைகளென்னும் கரங்களால் சுமந்து கொண்டு, அவற்றை இரு கரைகளிலும் எரிந்து, வயல்களில் பரந்து உலாவும். நீர்வளம் மிகுதலால் உழவர்கள் மிக்க மகிழ்ச்சியோடு தம் வயல்களை உழத் தொடங்குவர். பெண்ணையாற்றுக் கால்களில் வரால் மீன்கள் இருக்கும். கரும்புக் கணுக்களில் தேன் சிந்தும்; கால்வாய்களின் பக்கங்களில் பயிர்களையுடைய நெல் செழித்திருக்கும்; அடர்ந்த சோலைகளில் குலை மிகுந்த கமுகு மரங்கள் உண்டு; படைச்சால் மிகுந்த இடங்களில் முத்துக்களின் தொகுதி உண்டு; குளங்களில் செங்கழுநீர் மலர்கள் மிகுதியாக உண்டு.

"பெண்ணையாற்றின் நீர்வளத்தால் திருமுனைப்பாடி நாட்டு வயல்களில் நெல்லும் கரும்பும் பயிராகின்றன. ஊர்களில் உழவர்களால் வெட்டப்படும் கரும்புக் கழிகளிலிருந்து சாறு பொழியும். அக்கரும்புகளின் இடையில் கட்டப்பட்டிருந்த தேன்கூடுகள் கிழிதலால் தேன் ஒழுகிப் பாயும். இவ்வாறு பொழியும் சாறும் ஒழுகும் தேனும் ஒன்று கூடிப் பக்கங்களில் பரவும். அக்கலவை மீது வண்டுகள் மொய்த்து ரீங்காரம் செய்யும். அக்கலவை வெள்ளம் மடையை உடைக்கும். மள்ளர்கள், அங்ஙனம் உடைபட்ட மடைகளை, அந்தக் கருப்பஞ்சாறு கொண்டு காய்ச்சப்பட்ட வெல்லக் கட்டிகளால் அடைப்பார்கள்.

"கருங்கதலியின் பெரிய நீண்ட குலைகள் யானைகளின் நீண்ட துதிக்கை உடைய முகங்கள் போல் விளங்கும். அக்கதலியின் பக்கத்தில் வளரும் கதிர்களையுடைய நெற்பயிர்கள் வெற்றியுடைய குதிரைகளின் முகங்கள் போலத் தோற்றம் அளிக்கும். விளைச்சலைத் தாங்கப்பெற்ற வண்டிகள் தேர்களைப் போல விளங்கும். உழவர்கள் காலாட் படையினர் போலக் காட்சி அளிப்பர். இத்தகைய காட்சி நிறைந்த மருதநிலத் தோற்றங்கள், நெருங்கிய நால்வகைப் படைகளை ஒத்திருக்கும்.

"நவமணிகளை அணிந்த கழுத்திேைடு கூந்தலின் சுமையைப் பொறுக்க முடியாது அலையும் மகளிரைப் போலப் பாக்குக் குலைகளையுடைய கமுகு மரங்கள், காற்றில் அசைந்தாடிக்கொண்டிருக்கும். பெண்ணையாற்றில் வரும் மலர்களில் உள்ள தேனை உண்ண விரும்பி மிக்க அழகு பொருந்திய மேனியை உடைய வண்டுகள் மலர்கள்மீது ரீங்

காரம் செய்யும். பெண்ணை ஆற்று அலைகள் க்முகு மரங்கள்மீது ஏறும்.

"பெண்ணையாற்று நீர் குளங்களை நிரப்பும்; கரிய கடலுள் படியும் உருவுடைய மேகங்கள் போல மணம் பொருந்திய மலர்களை மேய்வதற் காகக் கரிய எருமைகள், குளத்து நீரில் நெருங்கிப் புகும்; அப்பொழுது பெருவண்ணமும் செங்கண் ணும் உடைய வரால் மீன்கள் அவற்றின் மடியில் முட்டும். அங்ஙனம் முட்டவே, எருமைகள் தம் கன்றுகளை நினைந்து பாலினைக் குளத்தினுள் சொரியும்; அங்ஙனம் பால் சொரியும் எருமை களால் குளங்களில் உள்ள நீர் அலைகளுடன் கரை யில் புரளும்."

## தென் பெண்ணையாறு

### தோற்றம்

மைசூர் நாட்டில் பெங்களூர், கோலார், தும் கூர், மைசூர், ஹாசன், கடூர், ஷிமோகா, சித்தல் துர்க்கம் என எட்டு மாவட்டங்கள் உள்ளன. ஒவ் வொரு மாவட்டத்திலும் பல வட்டங்கள் (தாலுக் காக்கள்) உண்டு. கோலார் மாவட்டத்தில் சிக் பல்லபூர் என்னும் பெயர் கொண்ட வட்டம் ஒன்று கும். அவ்வட்டத்தில் **நந்தி துர்க்க மலைத்தொடர்** இருக்கின்றது. அத்தொடரில் திப்பகிரி, பிரமகிரி, சென்னகேசவமலை, அரிகரேசுவரமலை, கலவர துர்க்கம், நந்திதுர்க்கம் எனப் பல மலைகள் உண்டு.

**சென்ன கேசவமலை** கடல் மட்டத்திற்குமேல் 4762 அடி உயரமுள்ளது. இம்மலை நந்திதுர்க்கத்

திற்கு வடமேற்கிலும் சிக்பல்லபூர்க்குத் தென் மேற்கே ஐந்துகல் தொலைவிலும் உள்ளது. இதன் உச்சியில் அடர்ந்த காடுகள் உள்ளன. இம்மலையின் வடபகுதியில் தோன்றும் ஆறு உத்தர பிநாகினி என்பது; தென்பகுதியில் தோன்றும் ஆறு **தட்சிண** பிநாகினி என்பது. இவை முறையே வடபெண்ணையாறு என்றும், **தென்பெண்ணையாறு** என்றும் தமிழில் பெயர்பெறும்.

**பெயர்க் காரணம்**

சிவனது வில்லுக்குப் 'பிநாகம்' என்பது பெயர். இவ்விரண்டு ஆறுகளும் வில்லைப்போல் வளைந்து வளைந்து செல்வதால் 'பிநாகினி' எனப் பட்டன. ஆனால் தமிழகத்தில் ஓடும் தென் பிநாகினி, **தென்பெண்ணை** அல்லது **பெண்ணையாறு** என்றே அழைக்கப்படுகிறது.

'பெண்ணை' என்னும் சொல் பனை மரத்தைக் குறிக்கும். பனைமரக் காடுகள் வழியே ஒரு காலத்தில் பாய்ந்து சென்ற காரணத்தால் இவ்விரண்டு ஆறுகளும் 'பெண்ணை' என்று பெயர் பெற்றிருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர். இந்நூலுள் தென் பெண்ணையாற்றைப் பெண்ணையாறு என்றே நாம் அழைப்போம்.

## பெண்ணையின் போக்கு

**மைசூர் நாட்டில்**

கோலார் மாவட்டத்தில் தோன்றும் பெண்ணையாறு, பெங்களூர் மாவட்டத்தில் **தேவன்ஹள்ளி, ஹாஸ்கோட்டை*** வட்டங்களில் தெற்கு நோக்கிப்

* ஹாஸ்கோட்டை—புதுக்கோட்டை

பாய்கிறது; இவ்விரு வட்டங்களிலும் ஜங்கம் கோட்டை, ஹாஸ் கோட்டை ஏரிகளை நிரப்புகிறது. ஹாஸ்கோட்டை ஏரி மைசூர் நாட்டிலேயே மிகப் பெரிய ஏரியாகும்.

இவ்வாறு ஏரிகளை நிரப்பிச் செல்லும் பெண்ணையாறு, வழியில் பல சிற்றாறுகளைத் துணையாகப் பெற்று நீர்ப்பெருக்குடன் தெற்கே சென்று, **சர்ஜபுரம்** என்னும் ஊருக்குக் கிழக்கே பகலூர்ப் பண்ணையை அடைகிறது; அங்கிருந்து கிழக்கே திரும்பிக் கிழக்குத் தொடர்ச்சி மலைகள் வழியே சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கிருஷ்ணகிரி வட்டத்தை அடைகிறது.

**கிருஷ்ணகிரி வட்டத்தில்**

கிருஷ்ணகிரி வட்டத்தில் பெண்ணையாற்றில் இரண்டு அணைகள் கட்டப்பட்டுள்ளன. அவை **கிருஷ்ணகிரி அணைக்கட்டு, நெடுங்கல் அணைக்கட்டு** எனப் பெயர்பெறும். மகாராச கடமலைகளில் தோன்றும் சிற்றாறுகள், சில குளங்களை நிரப்பிக்கொண்டே வந்து, காவேரிப்பட்டணத்திற்கு அருகில் பெண்ணையாற்றில் கலக்கின்றன.

**வட ஆர்க்காடு மாவட்டத்தில்**

இங்ஙனம் கிருஷ்ணகிரி வட்டத்திற் பாயும் பெண்ணையாறு, வட ஆற்காடு மாவட்டத்தில் கல்ராயன் மலைகளுக்கும் தென் மலைகளுக்கும் இடையில் உள்ள **செங்கம்** கணவாய்க் காடுகள் வழியே பாய்கிறது. செங்கம் வட்டத்தில் உள்ள சாத்தனூர்க்கு அருகில் ஆற்றின் குறுக்கே அணைகட்டி நீர்த் தேக்கம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இது **சாத்தனூர் நீர்த்தேக்கம்** எனப்படும்.

**தென் ஆர்க்காடு மாவட்டத்தில்**

செங்கம் வட்டத்து வழியாகச் செல்லும் பெண்ணையாறு, தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கள்ளக்குறிச்சி வட்டத்தின் வடகோடிப் பகுதியில் நுழைந்து பாய்ந்து, திருக்கோவலூர் வட்டத்தை அடைகிறது. வடஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருவண்ணமலை வட்டத்தில் தோன்றும் **துரிஞ்சிலாறு** என்னும் சிற்ருறு திருக்கோவலூருக்கு அருகில் பெண்ணையாற்றிற் கலக்கிறது.

திருக்கோவலூர்க்கு நான்கு கல் கிழக்கே ஆற்றின் குறுக்கே ஓர் **அணை** கட்டப்பட்டுள்ளது. அதற்குத் **திருக்கோவலூர் அணைக்கட்டு** என்பது பெயர். அணைக்கு அப்பால் பெண்ணையாறு விழுப்புரம், கடலூர் வட்டங்களைப் பிரிக்கும் எல்லையாக அமைந்து, கடலூருக்கு ஏறத்தாழ நான்கு கல் வடக்கே வங்கக் கடலில் கலக்கிறது.

கிருஷ்ணகிரி வட்டத்தில் உள்ள காவேரிப் பட்டணத்தில் பெண்ணையாற்றின் குறுக்கே வண்டிகள் செல்லத்தக்க **பாலம்** ஒன்று கட்டப்பட்டுள்ளது. அதன் நீளம் ஏறத்தாழ அறுநூறு அடி; அகலம் பதினெட்டு அடி. அது **முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்**கீழ் 1953-இல் இரண்டு லட்ச ரூபாய் செலவிட்டுக் கட்டப்பட்டது.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள சேந்தனூர், திருத்துறையூர் நிலையங்கட்கு இடையில் பெண்ணையாற்றின்மீது **இரயில் பாலம்** ஒன்று கட்டப்பட்டுள்ளது. பாலத்தின் நீளம் ஆயிரத்து எழுநூறு அடி. விழுப்புரத்திலிருந்து திருச்சிராப் பள்ளிக்குச் செல்லும் குறுக்குப் பாதையில் திரு

வெண்ணெய் நல்லூர் ரோடு, கண்டமானடி என்னும் இரயில் நிலையங்களுக்கு இடையில் ஓர் இரயில் **பாலம்** கட்டப்பட்டுள்ளது. கடலூரிலிருந்து புதுச்சேரிக்குச் செல்லும் பெருவழியில் அழகிய **பாலம்** ஒன்று கட்டப்பட்டுள்ளது. விழுப்புரத்திற்குத் தென் மேற்கே ஆறுகல் தொலைவில் பிடாகம் என்னும் சிற்றூருக்கருகில் **புதிய பாலம்** கட்டப்பட்டுள்ளது. பெண்ணையாறு அகன்றது; மணல் நிறைந்தது. இதன் கரைகள் தாழ்ந்தவை.

பெண்ணையாற்றின் முழு நீளம் 260 கல்; மைசூர் நாட்டில் இதன் நீளம் 53 கல்; சேலம் மாவட்டத்தில் 110 கல்; வட ஆர்க்காடு மாவட்டத்தில் 21 கல்; தென்னார்க்காடு மாவட்டத்தில் 76 கல்; இந்த ஆற்றில் திடீரென்று வெள்ளம் வரும். அதனால் 'வெண்ணெய் உருகுவதற்குள் பெண்ணையில் தண்ணீர் ஏறும்' என்னும் பழமொழி தென் ஆர்க்காடு மாவட்டத்தில் நிலவி வருகிறது.

**மலட்டாறு**

மலட்டாறு என்பது பெண்ணையின் **கிளையாறு** என்று சொல்லலாம். இந்த ஆற்றின் தென் கரையில் திருவெண்ணெய் நல்லூர் இருக்கின்றது. கி. பி. 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவ சமய குரவராகிய **சுந்தரர்** இந்த ஆற்றைப் பெண்ணையாறு என்றே தம் பாடல்களில் குறித்துள்ளார்:

> " வைத்தாய் பெண்ணைத் தென்பால்
> வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள் "

என்பது சுந்தரர் தேவாரம்.

பெண்ணையாற்று வெள்ளம் இயல்பாகவே மலட்டாற்றிற் கலக்கிறது. மிகுதியாக வரும் வெள்ள நீரைத் தடுத்து மலட்டாற்றில் விட " இடையர் அணை "* என்ற ஒன்று கட்டப்பட்டுள்ளது. மலட்டாற்று நீர் அதற்குத் தெற்கே பாயும் **கெடிலம்**† என்னும் ஆற்றிலும் கலக்கிறது. எனவே, மலட்டாற்று வழியே பெண்ணையாற்று நீரும் கெடிலத்திற் கலக்கிறதென்று கூறுதல் பொருத்தமாகும்.

## பெண்ணையின் சிறப்பு

பெண்ணையாறு சமயச் சிறப்பு வாய்ந்தது. தைத்திங்கள் முதல் ஐந்து நாட்களில் கங்கை நீர் பெண்ணையாற்றில் கலக்கிறது என்று மக்கள் நம்பு

---

* இந்த அணைக்கு அருகில் **இடையாறு** என்னும் சிற்றூர் இருக்கிறது. இது திருவெண்ணெய் நல்லூருக்கு மேற்கே மூன்று கல் தொலைவில் மலட்டாற்றின் தென்கரையில் அமைந்திருக்கிறது. இங்குள்ள சிவன் கோவில் சுந்தரரால் பாடப் பெற்றது. **திரு இடையாறு** என்பது இவ்வூரின் பெயர். இதற்கு அருகில் கட்டப்பட்டுள்ள அணை **இடையாற்று அணை** என்று வழங்கப்பெற்றிருத்தல் வேண்டும். இப் பெயர் நாளடைவில் ' இடையர் அணை ' என்று திரிந்து வழங்கலாயிற்று.

†கெடிலம் கள்ளக்குறிச்சி வட்டத்தில் தோன்றிப் பெண்ணையாற்றுக்குத் தெற்கே திருக்கோவலூர், கடலூர் வட்டங்களிற் பாய்ந்து, பெண்ணையாறு கடலொடு கலக்கும் இடத்திற்கு ஏறத்தாழ இரண்டு கல் தெற்கே கடலொடு கலக்கின்றது. இதன் கரையில் திருவதிகை என்னும் சிவத்தலம் இருக்கிறது. பெண்ணையாறும் கெடிலமும் கடலூர் வட்டத்தில் மிக நெருங்கிப் பாய்கின்றன. திருவதிகை, பண்ணுருட்டி போன்ற ஊர்கள் கெடிலத்தை அடுத்திருப்பினும், பெண்ணையாற்றுப் பாய்ச்சலைப் பெறுகின்றன. எனவே, அவையும் பெண்ணை நாட்டு ஊர்கள் என்றே நாம் கொள்ளுதல் வேண்டும்.

கின்றனர். அப்போது நீராடுதல் நற்பயன் அளிக்கு மென்பது மக்கள் நம்பிக்கை. அந்த ஐந்து நாட் களிலும் பெண்ணை ஆற்றங்கரை ஊர்களிலுள்ள கோவில்களில் விழாக்கள் நடைபெறும். திருக் கோவலூர் வட்டத்திலுள்ள மணலூர்ப்பேட்டைக் குத் திருவண்ணுமலையிலிருந்து கடவுளர் திருமே னிகள் கொண்டுவரப்பட்டு நீராட்டப்படும். இந் நிகழ்ச்சி மிகச் சிறந்த விழாவாகக் கொண்டாடப் படுகிறது.

பொங்கல் கழிந்த மூன்ரும் நாள் விழுப்புரத்தி லும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள மக்கள் உணவு மூட்டையுடன் ஆறு கல் தொலைவிலுள்ள பெண்ணையாற்றுக்குச் சென்று இன்பமாய்ப் பொழுது போக்குவர்; பம்பையாற்றங்கரைக்கும் சென்று பொழுது போக்குவர். அந்த நாள் 'ஆற் றுத் திருவிழா நாள்' என்று கூறப்படுகிறது.

## 2. அணைக்கட்டுகளும் கால்வாய்களும்

**அணைக்கட்டுகளின் நோக்கம்**

மலையில் பெய்யும் மழை நீர் பெருகி ஆறுகப் பாய்கிறது. அந்த ஆற்றின் சுற்றுப்புறங்களிலுள்ள மலைகளிலும் மேட்டுப் பாங்கான இடங்களிலும் பெய்யும் மழை நீர் பல சிற்றாறுகளாக உருவந் தாங்கி முதலில் கூறப்பெற்ற பெரிய ஆற்றில் கலக்கின்றன. இத்துணை ஆறுகளால் நீர்ப் பெருக்கத்தை மிகுதியாகப் பெற்ற பேரியாறு, தன் மனம் போன போக்கில் பாய்ந்து இறுதியில் கடலில் கலக்கிறது. இங்ஙனம் ஆற்றுநீர் ஆண்டில் சில மாதங்களே உயர்ந்த முறையில் விளங்கும். பல மாதங்களில் ஆற்றில் தண்ணீர் இராது. கோடைக்காலத்தில் ஆற்றில் மணலே காட்சியளிக்கும்.

ஆண்டில் நான்கு மாதங்களில் மட்டுமே நல்ல வருவாயைப் பெறும் ஒருவன், வேலையற்ற மற்ற எட்டு மாதங்களிலும் உணவுக்குத் துன்பப்படாமல் இருக்க, நான்கு மாத வருவாயில் பெரும் பகுதியை மீதம் பிடித்துவைப்பது இயற்கை அன்றோ? அதைப்போலவே ஆற்றில் நீர் பெருகி வரும் காலத்தில் அதன் நீரைத் தேக்கி வைக்க ஆற்றின் குறுக்கே **அணைகள்** கட்டப்படுகின்றன. இங்ஙனம் தேக்கப்பட்ட நீரைப் பயிர் நிலங்களுக்கும், குளங்களுக்கும் கொண்டு செல்ல அணையில் ஆற்றின் இரு கரைகளிலும் பல கல் நீளமுள்ள **கால்வாய்கள்** வெட்டப்படுகின்றன.

அணையில் எந்த அளவு நீர் தேக்கப்படலாமோ அந்த அளவுக்கு மேற்பட்ட நீரைத் திறந்து விடு

தற்கு அணையில் **கதவுகள்** பொருத்தப்படுகின்றன. இவ்வாறே கால்வாய்களிலும் வேண்டும் அளவு நீரை விடக் கதவுகள் பொருத்தப்படுகின்றன. இந்த ஏற்பாட்டினுல் ஆற்று நீர் வீணே கடலிற் கலக்க வழியில்லை; பயிருக்குப் பயன்படுத்தப் படுகிறது.

இத்தகைய அணைக்கட்டுகள் தென்பெண்ணை ஆற்றிலும் சில இடங்களில் கட்டப்பட்டுள்ளன என்பது முன்பு கூறப்பட்டது. இங்கு அவை பற்றிய விவரங்களைக் காண்போம்:

## கிருஷ்ணகிரி அணைக்கட்டு

பெண்ணையாறு மைசூர் நாட்டைக் கடந்து, சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கிருஷ்ணகிரி வட்டத்தில் நுழைந்து பாய்கிறது என்பதும், அந்த வட்டத்தில் அதன் குறுக்கே இரண்டு அணைகள் கட்டப்பட்டுள்ளன என்பதும் முன்பே கூறப்பட்டன அல்லவா? கிருஷ்ணகிரி வட்டத்தில் கட்டப்பட்டுள்ள முதல் அணைக்கட்டுக்குக் **கிருஷ்ணகிரி அணைக்கட்டு** என்பது பெயர். இது காவேரிப் பட்டணத்திற்கு வடமேற்கில் நான்கு கல் தொலைவில்—இரண்டு மலைகளுக்கு இடையில் அரைக்கல் அகலமுடன் ஆறு பாயும் இடத்தில்—கட்டப்பட்டுள்ளது. இந்த அணைக்கட்டினுல் தேக்கப்பட்டுள்ள நீர் 7500 ஏக்கர் பரப்புள்ள நிலங்கட்கு விடப்படுகிறது. இத் தேக்கத்திலிருந்து ஆற்றின் இடப்புறம் ஒரு கால்வாயும் வலப்புறம் ஒரு கால்வாயும் செல்கின்றன. இடப்புறக் கால்வாய் பெண்ணையாற்றின் இடக்கரை நிலங்களுக்கு நீரை உதவுகிறது. வலப்புறக் கால்வாயின் நீர் பெண்ணை

யின் வலக்கரையிலுள்ள நிலங்களுக்குப் பயன் படுகிறது.

1875-ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத் தலைவராயிருந்த திரு. **தாம்சன்** என்பவர் இது பற்றி ஒரு திட்டம் தீட்டினார். ஆனால் அஃது அப்பொழுது செயற்படவில்லை. நாடு உரிமை பெற்றபின்பு இந்த நீர்த்தேக்கம் **முதல் ஐந்தாண்டுத் திட்டப்படி** அமைக்கப்பட்டது. இவ் வேலை 1955 மார்ச்சுத் திங்களில் தொடங்கப்பெற்றது ; 1959 மார்ச்சுத் திங்களில் முடிவுற்றது. சென்னை முதலமைச்சரால் வேலை தொடங்கும் விழா நடத்தப் பெற்றது. நீர்த்தேக்கத் திறப்புவிழாவும் அவராலேயே நிகழ்த்தப் பெற்றது. இத் திட்டத்திற்கான செலவு ஒரு கோடியே எண்பத்து நான்கு லட்ச ரூபாயாகும்.

இந்த அணையின் உயரம் 75 அடி ; நீளம் 3251 அடி. இத்தேக்கத்தில் இருநூற்று நாற்பத்தொரு கோடி கன அளவுள்ள நீரைத்தேக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

இந்த நீர்த்தேக்கத்தின் மேற்குக் கரையில் (ஆற்றின் வலக்கரையில்) ஏறத்தாழ நான்கு லட்ச ரூபாய் செலவிட்டு அரசினர் எழில் மிகுந்த **பூங்கா** ஒன்றை அமைத்துள்ளனர்.

## நெடுங்கல் அணைக்கட்டு


இது காவேரிப் பட்டணத்திற்குக் கிழக்கில் ஏறத்தாழ ஐந்துகல் தொலைவில் **நெடுங்கல்** என்னும் இடத்தில் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. இதன் வேலை 1877-இல் தொடங்கப்பெற்று 1888-இல் முடிக்கப்பெற்றது. இதற்கான செலவு ஏறத்தாழ நான்கு இலட்சத்து மூவாயிரம் ஆகும்.

அணையின் நீளம் தொள்ளாயிரத்துப் பன்னிரண்டு அடி. அணைக்கட்டிலிருந்து ஆற்றின் இடப்புறம் ஒரு கால்வாய் ஏழுகல் தொலைவு சென்று, **பாரூர்** ஏரியை நிரப்புகிறது. இக் கால்வாயில் பதினேழு மதகுகள் உள்ளன. அவை குளங்களுக்கும் பயிர்களுக்கும் நீரை உதவப் பயன்படுகின்றன. வலக் கால்வாயின் நீர் நெடுகப்பாய்ந்து தேவரஹள்ளிக் குளத்தில் கலக்கிறது.

பாரூர் ஏரி, அறுநூற்று எண்பத்தெட்டு ஏக்கர் பரப்புள்ளது. இதிலிருந்து இரண்டு கால்வாய்கள் நீரைக் கொண்டு சென்று வயல்களுக்கு உதவுகின்றன. கிழக்குக் கால்வாயின் நீளம் பத்தரைக்கல்; மேற்குக் கால்வாயின் நீளம் இரண்டரைக்கல்.

## திருக்கோவலூர் அணைக்கட்டு

இங்ஙனம் கிருஷ்ணகிரி வட்டத்திற்குப் பயன் படும் பெண்ணையாறு, வடஆர்க்காடு மாவட்டத்தி லுள்ள செங்கம் கணவாய்க் காடுகள் வழியே பாய்ந்து தென்னாற்காடு மாவட்டத்தை அடைகிறது. அங்குத் திருக்கோவலூர்க்குக் கிழக்கே நான்கு கல் தொலைவில் ஆற்றின் குறுக்கே ஓர் **அணை** கட்டப்பட்டுள்ளது. அது 1864-இல் கட்டப்பட்டது. அப்பொழுது அதன் நீளம் 1200 அடி. 1874-இல் உண்டான ஆற்று வெள்ளம் அதன் வட பகுதியை அழித்துவிட்டது. அதனால் அடுத்த ஆண்டில் அவ்வணை பலமாகப் புதுப்பிக்கப் பட்டது. இப்பொழுது அதன் நீளம் 1791 அடி. அந்த அணைக்கட்டிலிருந்து ஆற்றின் தென்கரையில் நான்கு கால்வாய்கள் நீரைக்கொண்டு செல்கின்றன. அவை இராகவையன் வாய்க்கால், வட



சாத்தனூர் அணைக்கட்டு

மருதூர் வாய்க்கால், சித்தலிங்கமடம் வாய்க்கால், மலட்டாற்று வாய்க்கால் எனப்பெயர் பெறும். ஆற்றின் வடகரையில் பதினொருகல் நீளமுள்ள **பம்பை வாய்க்கால்** நீரைக்கொண்டு செல்கிறது. பம்பையாறு முதலில் காட்டாருக இருந்தது. அஃது அணைக்கட்டுடன் தொடர்பு படுத்தப்பட்டு இன்று பம்பை வாய்க்காலாகக் காட்சியளிக்கிறது.

இவ்வைந்து கால்வாய்களுக்கும் மதகுகள் உண்டு. இக் கால்வாய்களின் நீர் கோவலூர் வட்டம், கடலூர் வட்டம், விழுப்புரம் வட்டம் ஆகிய மூன்று வட்டங்களுக்கும் பயன்படுகிறது. இந் நீரினுல் ஏறத்தாழ இருபத்தையாயிரம் ஏக்கர் நிலம் விளை நிலமாக இருக்கிறது. பெண்ணையாற்றின் கால்வாய்கள் கோவலூர், ஆநாங்கூர், பாக்கம், வளவனூர் முதலிய ஊர்களிலுள்ள ஏரிகளை நிரப்புகின்றன. இந்த ஏரிகளின் நீரால் ஏறக்குறைய ஐயாயிரம் ஏக்கர் நிலம் பயிர் நிலமாக விளங்குகிறது.

## சாத்தனூர் அணைக்கட்டு

செங்கம் வட்டத்தில் **சாத்தனூர்** என்னும் சிற்றூர்க்கு நான்கரைக்கல் தொலைவில்—சின்ன பூண்டி மலைக் கணவாயின் இடையில்—ஒரு **நீர்த்தேக்கம்** அமைக்கப்பட்டுள்ளது. அணையின் நீளம் 2583 அடி ; உயரம் 147 அடி ; 700 கோடி கன அடி அளவுள்ள நீர் தேங்க வசதி செய்யப்பட்டுள்ளது.

அணை கட்டப்பட்டுள்ள இடத்தில் ஆற்றின் இருமருங்கிலும் வாய்க்கால் வெட்டமுடியாத அளவுக்குப் பாறைகளே நிறைந்திருப்பதால், தேக்கப்

பட்ட நீர் ஆற்றிலேயே நாலரைக்கல் தொலேவிற்கு விடப்படுகிறது. நாலரைக்கல் தொலேவில் ஆற்றின் குறுக்கே மற்ருேர் அணே கட்டப்பட்டுள்ளது. அது அந்த நீரை வாய்க்கால்களில் திருப்புவதற்காகவே கட்டப்பட்டது. அந்தப் புதிய அணேயிலிருந்து ஒரு கால்வாய் நீரைக்கொண்டு செல்கின்றது. அது செங்கம், திருவண்ணமலே வட்டங்களில் 22 கல் நீளம் சென்று, ஏறத்தாழ 16,700 ஏக்கர் பரப்புள்ள புதிய நிலங்களே வளப்படுத்துகிறது.

இந்த அணேயிலிருந்து திருக்கோவலூர் அணேக்கட்டுக்கும் தண்ணீர் விடப்படுகிறது. அதனுல் திருக்கோவலூர் வட்டத்தில் 3138 ஏக்கர் நிலம் மிகுதியாகப் பயன்பெறுகிறது. இத் திட்டம் 1904 ஆம் ஆண்டு தீட்டப்பட்டது; ஆயின் 1954 வரை அது பயனளிக்கவில்லே. 1954-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் வேலே தொடங்கப்பெற்று, 1959 மார்ச்சுத் திங்களில் முடிவுற்றது. நமது சென்னே முதலமைச்சரால் நீர்த்தேக்கத்தின் திறப்புவிழா நிகழ்த்தப்பெற்றது.

## புதிய அணே

விழுப்புரம் வட்டத்தில் உள்ள எல்லிஸ் சத்திரத்திற்கு அருகில் பெண்ணேயாற்றின் குறுக்கே ஓர் அணே கட்டப்பட்டு வருகிறது. இதற்கு ஏறத்தாழ $16\frac{1}{2}$ லட்ச ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த அணேயால் 870 ஏக்கர் பரப்புள்ள புதிய நிலங்கள் நீர்வளம் பெறுமாம்.

**ஊற்றுக் கால்கள்**

பெண்ணையாற்றில் நீர் இல்லாத காலங்களிலும், ஆற்று மணலுக்கடியில் எப்பொழுதும் நீரோட்டம் உண்டு. ஆதலால் ஆற்றில் **பல கால் வாய்கள்** வெட்டப்பட்டு வயல்களுக்கு நீர் பாய்ச்சப்படும்.

"ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா (று)
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்"

என்பது அநுபவ வாக்கன்றோ? கிருஷ்ணகிரி வட்டத்தில் காவேரிப் பட்டணத்திற்குத் தெற்கே ஆற்று மணலில் பல கால்வாய்கள் வெட்டப்பட்டுள்ளன. அக்கால்வாய்களின் நீர் விளைச்சலுக்குப் பயன்படுத்தப்படுகின்றது.

பெண்ணையாற்றிலும் மலட்டாற்றிலும் நீர் இல்லாத காலங்களில், விழுப்புரம் கோவலூர் வட்டங்களில் இந்த ஆற்று மணலில் பல கால்வாய்கள் தோண்டப்படும். அவை பல கல் தொலைவில் ஊற்றுநீரைக் கொண்டு செல்லும். இந்த ஊற்று நீர் ஏறத்தாழ ஐந்நூறு ஏக்கர் பரப்புள்ள நிலங்களுக்குப் பயன்படுகிறது.

விழுப்புரம் வட்டத்தில் மணற்பாங்கான இடங்களில் **இயற்கை ஊற்றுக்கள்** சில காணப்படுகின்றன. அவை பெண்ணையாற்று அடியில் ஓடும் நீரோட்டத்தோடு தொடர்புடையனவாக இருத்தல் கூடும் என்று நிலநூல் அறிஞர் எண்ணுகின்றனர். அந்த இயற்கை ஊற்றுக்களிலிருந்து ஓடும்நீர் சிறிய கால்வாய்களாகப் பாய்ந்துகொண்டிருந்தது. பின்பு ஒவ்வோர் ஊற்றைச் சுற்றிலும் சிறிய குளம் போன்ற அமைப்பு ஏற்பட்டது.

அந்த நீரூற்றுக் கால்வாய்களில் குறிப்பிடத் தக்கவை மூன்று. அவை வழுதுரெட்டி கால்வாய், சின்னபாபு சமுத்திரக் கால்வாய், பில்லூர்க் கால் வாய் என்பன.

**வழுதுரெட்டி கால்வாய்** என்பது எழுபது சதுர கெஜமும் ஆறடி ஆழமும் உள்ள சிறிய குளத்திலிருந்து தோன்றுகிறது. இது விழுப்புரத் திற்கு மேற்கே ஐந்து கல் தொலேவில் இருக்கிறது. இதன் முழு நீளம் இரண்டரைக்கல். இஃது ஏறத் தாழ ஐந்நூறு ஏக்கர் பரப்புள்ள நிலத்திற்கு நீரை வழங்குகிறது.

**சின்னபாபு சமுத்திரக் கால்வாய்** என்பது ஐம்பது சதுர கெஜப் பரப்பும் மூன்றடி ஆழமும் கொண்ட சிறிய குட்டையில் தோன்றுகிறது. இது புதுச்சேரிக்கு அருகிலுள்ள கண்டமங்கலம் புகை வண்டி நிலேயத்திற்கு வடக்கே ஒருகல் தொலேவில் இருக்கிறது. இஃது ஏறத்தாழ நூற்றைம்பது ஏக்கர் பரப்புள்ள இடங்களில் விளேச்சலே உண் டாக்குகிறது.

**பில்லூர்க் கால்வாய்** என்பது சிற்ருற்றூர்த் திருக்கை என்னும் இடத்தில் தோன்றுகிறது. அத் துடன் வேறு இரண்டு சிறு கால்வாய்கள் சேருகின் றன. இம் மூன்றின் நீர் ஏறத்தாழ இருநூற்றெழு பது ஏக்கர் பரப்புள்ள நிலங்களுக்குப் பாய்கிறது.

## பெண்ணேத் தாய்

இங்ஙனம் பெண்ணேயாற்று நீர் ஏரிகளில் தேக்கப்படுகிறது; அணேகட்டித் தேக்கங்களில் தேக்கப்படுகிறது. இவ்வாறு தேக்கப்பட்ட நீர் கால்வாய்கள் வழியே விளேச்சலுக்குப் பயன்படுத்

தப்படுகிறது. ஆற்றில் நீர் இல்லாத காலங்களில் ஆற்றுமணலிற் கால்வாய்கள் வெட்டப்படுகின்றன. ஊற்றுநீர் அக்கால்வாய்களிற் பாய்கின்றது. ஆற்றை அடுத்த மணற்பாங்கான இடங்களில் இயற்கை நீர் ஊற்றுக்கள் தோன்றி நீரைக் கால்வாய்கள் வழியே விடுகின்றன. இப்பல வழிகளாலும் பெண்ணையாறு என்னும் **தாய்,** தன்னை நம்பியிருக்கும் குடிமக்களை இன்பமுறக் காத்து வருகின்றாள்.

# 3. பெண்ணை நாட்டு வரலாறு—I

**பெண்ணை நாடு**

பெண்ணையாறு முன்பு கூறப்பெற்றபடி, மைசூர் நாட்டில் ஐம்பத்து மூன்று கல் தொலைவு பாய்கிறது; பின்பு சேலம் மாவட்டத்துக் கிருஷ்ண கிரி வட்டத்தில் நுழைகிறது; பின்னர் வட ஆர்க் காடு மாவட்டத்தைச் சேர்ந்த செங்கம் வட்டத்தில் பாய்கிறது; பின்பு தென் ஆர்க்காடு மாவட்டத்துக் கள்ளக்குறிச்சி, திருக்கோவலூர், கடலூர் வட்டங் களில் பாய்ந்து கடலில் கலக்கிறது.

சேலம், கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்கள் சேர்ந்த நிலப்பகுதி **கொங்கு நாடாகும்**. எனவே, சேலம் மாவட்டத்துக் கிருஷ்ணகிரி கொங்கு நாட்டின் ஒரு பகுதியாகும். செங்கம் **தொண்டை நாட்டுப்** பல்குன்றக் கோட்டத்தைச் சேர்ந்தது. **நடுநாடு** என்பது பாலாற்றுக்கும் சிதம்பரத்திற்கு வடக்கே உள்ள வெள்ளாற்றுக்கும் இடைப்பட்ட நிலப்பகுதியாகும். எனவே, பெண்ணையாறு பாயும் கள்ளக்குறிச்சி, திருக்கோவலூர், கடலூர் வட்டங்கள் நடுநாட்டைச் சேர்ந்தவை.

பெண்ணையாறு பாயும் இந்தப் பல நாடுகளின் தொகுப்பையும் நாம் **பெண்ணை நாடு** என்று அழைப்போம். எனவே, பெண்ணையாறு பாயப் பெறும் மைசூர் நாட்டின் வரலாறு, கொங்கு நாட்டுக் கிருஷ்ணகிரி வட்டத்து வரலாறு, தொண் டைநாட்டுப் பல்குன்றக் கோட்டத்து வரலாறு, நடுநாட்டு வரலாறு என்ற நான்கின் தொகுப்பே 'பெண்ணை நாட்டு வரலாறு' ஆகும்.

**மைசூர் நாட்டு வரலாறு**

சங்கநூல்களில் இன்றைய மைசூர் '**எருமை யூர்**' எனப்பட்டது. அது வடமொழியில் 'மகிஷுர்' எனப்படும். எருமைக்கு வடமொழி யில் 'மகிஷம்' என்பது பெயர். மைசூர் நாடு 'மகிஷ மண்டலம்' என்று வடமொழியிலும், 'எருமை நாடு' என்று தமிழிலும் வழங்கப்பட்டது. 'மகிஷுர்' என்பது காலப் போக்கில் 'மைசூர்' என மாறி வழங்கலாயிற்று.

சங்ககாலத்தில் சிற்றரசர் பலர் எருமை நாட்டை ஆண்டு வந்தனர். அவருள் **எருமை யூரன்** என்பவன் ஒருவன். அவன் பெருவேளிருள் ஒருவன். சேரன், சோழன் என்ற இருபெரு வேந்தரும் சிற்றரசர் ஐவரும் சேர்ந்து பாண்டியன் நெடுஞ்செழியன்மீது போர் தொடுத்தனர். அச் சிற்றரசர் ஐவருள் எருமையூரன் ஒருவன். பாண் டியன் இளைஞன்; வீரவுணர்ச்சியும் மானவுணர்ச் சியும் மிக்கவன். அவன் தன் படைகளுடன் இந்த எழுவரையும் எதிர்த்துப் போராடித் தலையாலங் கானம் என்னும் இடத்தில் முற்றிலும் முறியடித் தான்; அதனால் 'தலையானங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன்' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றான்.

மைசூர் நாட்டில் உள்ள 'அரையம்' என்ற ஊரையும் அதனைச் சேர்ந்த நிலப்பகுதியையும் **இருங்கோவேள்** என்பவன் ஆண்டு வந்தான். பறம்புமலையை ஆண்ட பாரிவேள் இறந்த பின்பு, அவன் நண்பரான **கபிலர்** அவன் மகளிரை அழைத்துக்கொண்டு அரையம் என்ற நகருக்குச் சென்றார்; அங்கு அரசனாயிருந்த இருங்கோ

வேளிடம் பாரிமகளிரை அறிமுகப்படுத்தி, அவர்களை மணந்துகொள்ளும்படி கூறினர். அவன் எக்காரணம் கொண்டோ மறுத்தான். கபிலர் மனம் வருந்தி அவனை விட்டு அகன்ருர். இச்செய்தியைப் புறநானூற்றுப் பாடல்கள் இரண்டு தெரிவிக்கின்றன. மைசூர் நாட்டின் ஒரு பகுதியைப் **பாணர்** என்ற அரச மரபினர் ஆண்டு வந்தனர் என்று மைசூர் நாட்டு வரலாறு கூறுகின்றது.

சங்ககாலத்திற்குப் பின்பு மைசூர் நாட்டைக் **கங்கர்** என்பவர் ஆண்டு வந்தனர். அவர்கள் தலைநகரம் தழைக்காடு என்பது. கங்கர் காலத்தில் தமிழகத்தின் பெரும்பகுதியைப் **பல்லவர்** என்ற புதிய மரபினர் ஏறத்தாழ ஆறுநூற்றுண்டுகள் (கி. பி. 300–900) ஆண்டு வந்தனர். கங்கர் பல்லவருடன் நட்புக்கொண்டு, தமக்கு வடக்கே வனவாசியை ஆண்டு வந்த **கதம்பருடன்** ஓயாது போரிட்டு வந்தனர். கி. பி. 9-ஆம் நூற்றுண்டின் இறுதியில் பல்லவப் பேரரசு மறைந்தது. அத்துடன் கங்கரது செல்வாக்கும் அழிந்தது. சோழப் பெருநாட்டை ஏற்படுத்திய **முதல் இராசராசன்** ஆட்சியில் கங்கநாடு 'கங்கபாடி' என்ற பெயருடன் சோழருக்கு உட்பட்டிருந்தது. கி. பி. பன்னிரண்டாம் நூற்றுண்டில் **ஹொய்சளர்** என்ற புதிய மரபினர் மைசூர் நாட்டை ஆளத் தொடங்கினர். 12, 13, 14-ஆம் நூற்றுண்டுகளில் அவர்களது செல்வாக்குத் தமிழகத்தில் மிகுந்திருந்தது.

மாலிக்-காபூர் படையெடுப்புக்குப் பிறகு ஹொய்சளப் பேரரசு மறைந்தது. ஹொய்சளர் திருவண்ணுமலையைத் தலைநகராகக் கொண்டு

பெண்ணை நாட்டையும் சோழநாட்டையும் சிறிது காலம் ஆண்டு வந்தனர். 14-ஆம் நூற்றாண்டில் மைசூர் நாடு விசயநகர ஆட்சிக்கு உட்பட்டது. சிற்றரசர் பலர் அந்த நாட்டை விசயநகரப் பேரரசுக்கு அடங்கி ஆண்டு வந்தனர்.

பின்பு அந்நாடு ஷாஜி என்ற **மகாராட்டிரர்** ஆட்சியிலும் அவர் மரபினர் ஆட்சியிலும் சிறிது காலம் இருந்தது; பின்னர் **மொகலாயர்** ஆட்சிக்கு உட்பட்டது; பின்பு ஹைதர் அலியாலும் திப்பு சுல்தானாலும் ஆளப்பட்டது; இறுதியில் ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்டது; இன்று இந்தியக் குடியரசின் ஒரு மாநிலமாக இருக்கிறது.

## கொங்கு நாட்டு வரலாறு

கொங்கு நாட்டில் சிற்றரசர் பலர் ஆண்டு வந்தனர். அவருள் தகடூரை (இன்றைய தர்மபுரியை) ஆண்ட அதிகமான்கள் (அதியமான்கள்)* குறிப்பிடத்தக்கவர். தென் ஆர்க்காடு மாவட்டத்தில் பெண்ணையாற்றுக்குத் தெற்கே **திரு அதிகை** என்ற சிவத்தலம் ஒன்று இருக்கிறது. 'அதிகை' என்று அவ்வூர்க்குப் பெயர் வந்திருப்பதை நோக்க, பண்டைக் காலத்தில் அதிகைமான்களது ஆட்சி திருவதிகை வரையில் பரவி இருந்திருத்தல் கூடும் என்று கருதுதல் பொருத்தமாகும். மேலும் கிருஷ்ணகிரிக்கு அண்மையிலேயே இன்றைய தருமபுரி இருத்தலும், அதியமான் ஒருவன் திருக்கோவலூரைத் தாக்கியதும் நோக்க, மலையமானாட்

---

*ஒக்கலிகர் என்பது ஒக்கலியர் என மாறி வழங்குதல் போல 'அதிகமான்கள்' என்பது 'அதியமான்கள்' எனத் திரிந்தது போலும்!

டுக்கு அடுத்த நாட்டையே அதியமான்கள் ஆண்டு வந்தனர் என்று கொள்ளலாம்.

தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட அதியமான்கள் வீரர்; கொடையில் சிறந்தவர். அவருள் ஒருவன் **அதியமான் நெடுமானஞ்சி** என்பவன். அவன் ஔவையாரை ஆதரித்தவன்; பல்லாண்டுகள் வாழ்வளிக்கக்கூடிய நெல்லிக் கனியை ஔவையார்க்கு உண்ணக் கொடுத்து மகிழ்ந்த பெருமகன். அவன் திருக்கோவலூர் அரசனை மலையமானுடன் போரிட்டவன். அவன் மரபினர் கி. பி. 13-ஆம் நூற்றாண்டு வரையில் தொடர்ந்து நாடாண்டு வந்தனர் என்று பிற்காலக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

## தொண்டை-நடுநாட்டு வரலாறுகள்

### கற்கால மக்கள்

செங்கம் வட்டத்தைச் சேர்ந்த **கல்ராயன் மலைகளில்** கல் உளிகள் கண்டு பிடிக்கப்பட்டன. அம்மலைகளில் இன்று வாழும் மக்கள் அவற்றைப் பயபக்தியோடு தம் கோவில்களில் வைத்து வழி படுகின்றனர். இவற்றை நோக்க, கற்காலமக்கள், வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் அம்மலைப் பகுதிகளில் வாழ்ந்தனர் என்று கொள்ளலாம்.

கள்ளக்குறிச்சி வட்டத்திலுள்ள குண்டலூர், கொங்கராய பாளையம், குகையூர் என்னும் இடங் களிலும், திருக்கோவலூர் வட்டத்தில் ஜம்படை என்னும் இடத்திலும் பண்டை மக்கள் புதைக்கப் பட்ட இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஒரு புதை குழி ஆறடி நீளம், நான்கடி அகலம், மூன்றடி

உயரம் கொண்டுள்ளது. அதன் மேற்பகுதியிலும் அடிப்பகுதியிலும் நீண்ட பெரிய கற்பலகைகள் காணப்படுகின்றன. அதனைச் சுற்றிலும் வட்ட மாகக் கற்பலகைகள் மண்ணுள் புதைக்கப்பட்டு நிறுத்தப்பட்டுள்ளன. குழியின் உட்பகுதியில் எலும்புத் துண்டுகள், மட்பாண்டங்கள், இரும்புக் கருவிகள் காணப்படுகின்றன. அவை முறையே இறந்தவர் உடம்பிலிருந்த எலும்புத்துண்டுகளும், இறந்தவர் பயன்படுத்திய மட்பாண்டப் பொருள் களும் இரும்புக் கருவிகளும் ஆகும். திருநெல் வேலி மாவட்டத்திலுள்ள ஆதிச்ச நல்லூர்ப் புதை குழிகளில் கிடைத்தவை போலவே இப்பொருள் களும் காணப்படுகின்றன. எனவே, புதிய கற்கால மக்கள் அப்பகுதிகளில் வாழ்ந்திருத்தல் வேண்டும் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். திருக் கோவலூர்க்கு அருகில் உள்ள **தேவனூர், கொல் லூர்** என்னும் இடங்களில் இப்புதை குழிகள் மிக்குள்ளன. அவை பற்றிய விவரங்களைப் பின்பு படித்துணரலாம்.

**சங்ககாலம்**

சங்ககாலத்தில் செங்கம் வட்டத்தையும் அங் குள்ள மலைகளையும் **நன்னன்** என்பவன் ஆண்டு வந்தான் என்பதை **மலைபடுகடாம்** என்னும் பாடல் தெரிவிக்கின்றது. தென் பெண்ணையாற் றின் வடகரைப்பகுதி அக்காலத்தில் **ஓய்மா நாடு** எனப்பட்டது. **கிடங்கில்** என்பது அதன் தலை நகர். இக்கிடங்கில், இப்போது திண்டிவனம் என்னும் ஊரின் ஒரு பகுதியாக இருக்கின்றது. **திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு கல்**

ராயன் மலைகள் வரையில் பரவியுள்ள நிலப்பகுதி சங்ககாலத்தில் **மலையமான்** நாடு எனப் பெயர் பெற்றது. இந்நாட்டை **மலையமான்கள்** என்ற அரசர்கள் சங்ககாலம் முதல் ஏறத்தாழக் கி. பி. 1300 வரையில் அரசாண்டு வந்தனர்.

## நன்னன் நாடு

வட ஆர்க்காடு மாவட்டத்துச் **செங்கம்** வட்டமே நன்னனது நாடாகும். நன்னனது நாடு மலைநாடு. அது தொண்டை நாட்டு இருபத்து நான்கு கோட்டங்களுள் பல்குன்றக் கோட்டத்தைச் சேர்ந்தது. அம்மலைமீது அவ்வேந்தனது அரண்மனை இருந்தது. அவன் கொடையிற் சிறந்து விளங்கிய சிற்றரசன்; வலிய தோள்களையுடையவன்; அகன்ற மார்பினைக் கொண்டவன்; தன்னை நாடிவரும் புலவர்—பாணர்—கூத்தர் ஆகிய முத்தமிழ்வாணரையும் முழுமனத்துடன் வரவேற்றுப் பரிசில்களை வாரி வழங்கியவன். அவனுடைய நாட்டுச் சிறப்பும் நல்லியல்புகளும் மலைபடுகடாம் என்னும் பழம்பாடலில் நன்கு பேசப்படுகின்றன.

## ஓய்மா நாடு

சங்ககாலத்தில் ஓய்மா நாட்டை **நல்லியக் கோடன்** என்பவன் ஆண்டு வந்தான். அவன் போரிற் சிறந்தவன். அவன் கைகள் மழைபோலப் பயன் கருதாது பரிசிலை வழங்கின. அவன் சிறந்த ஒழுக்கமுடையவன்; 'இல்லை'யென்று இரந்தவர்க்கு, 'இல்லை' யென்று சொல்லாத வள்ளல்.

விண்மீன்களுக்கிடையே முழுத்திங்களைப்போல அவன் எப்பொழுதும் இயல்–இசை–நாடகப் புலவர்களுக்கு இடையே விளக்கமுற்றிருந்தான். அவனைப்பற்றியும் அவனது நாட்டைப்பற்றியும் **சிறுபாண் ஆற்றுப்படை** என்னும் பாடலில் பல விவரங்கள் தரப்பட்டுள்ளன.

**மலையமான் நாடு**

இந்நாட்டை ஆண்ட பரம்பரையினர் மலையமான்கள் எனப்பட்டனர். அவருள் **மலையமான் திருமுடிக்காரி** என்பவன் புகழ்பெற்றவன். அவன் தமிழ் வேந்தருள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சமயத்தில் போரில் உதவி புரிந்தவன்; அந்தணர்க்கு நிலம் கொடுத்தவன்; முத்தமிழ் வாணர்க்குப் பொன்னும் பொருளும் வழங்கியவன். முல்லைக்குத் தேர் ஈந்த பாரி, மயிலுக்குப் போர்வை தந்த பேகன் போன்ற வள்ளல்களுள் காரியும் ஒருவன். அவனது குதிரை சங்கப் புலவரால் பாராட்டப் பெற்றது. அவனைக் கபிலர் என்ற ஆண்பாற் புலவரும், மாறோக்கத்து நப்பசலையார் என்ற பெண்பாற் புலவரும் பாடியுள்ளனர். அப்பெருமகன் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த இராசிபுரம் வட்டத்தை ஆண்டு வந்த ஓரி என்ற சிற்றரசனுடன் கடும்போர் புரிந்தவன். அவனைப்பற்றிய பாடல்கள் புறநானூற்றிற் காணப்படுகின்றன. மலையமான் நாட்டில் முள்ளூர்மலை சிறப்புடையது.

மற்றொரு மலையமான் **சோழிய ஏனாதி திருக்கண்ணன்** என்பவன். திருக்கண்ணன் என்பது இவனது இயற்பெயர். 'சோழிய' என்பது இவ

னுக்கும் சோழனுக்கும் உள்ள தொடர்பைக் காட்டுகிறது. 'ஏனாதி' என்பது சிறந்த படைத்தலைவர்க்குச் சங்ககாலத்தில் வழங்கப்பட்ட பெயராகும். இவன் சோழ அரசனுக்குப் பேருதவி புரிந்தவன்; முத்தமிழ்ப் புலவர்க்கு முறையறிந்து பொருள் உதவி செய்தவன். மாறோக்கத்து நப்பசலையார் என்ற பெண்பாற் புலவர் இவனைப் பாராட்டிப் பாடியுள்ளார்.

### * மலையமான் மக்கள்

மலையமான்கள் அனைவரும் மூவேந்தரோடு எக்காலத்திலும் ஒற்றுமையோடு இருந்தனர் என்று கூறுதல் இயலாது. சங்ககாலத்திலேயே மலையமான் ஒருவன் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனுக்குப் பகைவனானன். அதனால் அச்சோழன், அவனைப் போரில் கொன்றான்; அவன் மக்களாகிய சிறிய ஆண்பிள்ளைகளைக் கைப்பற்றிக்கொண்டான்; யானைக் காலால் இடறச்செய்து அவர்களைக் கொல்லத் துணிந்தான். அரண்மனையின் வெளியிடத்தில் யானை கொண்டு வரப்பட்டது. அரசனும் பிறரும் அங்குக் கூடியிருந்தனர். யானையைக் காணுமுன் தம் தந்தையை நினைந்து அழுதுகொண்டிருந்த அச்சிறு பிள்ளைகள், யானையைக் கண்டதும் வியப்

---

*திருக்கோவலூர் அரசர் மரபு **மலையமான், நத்தமான், சுருதிமான்** என மூவகைப்படும். இம்மூன்று பரம்பரையினரும் இன்றும் இருந்து வருகின்றனர். தஞ்சை மாவட்டத்திலுள்ள கபிஸ்தலம் மூப்பனாரும் அவர் உறவினரும் சுருதிமான் மரபைச் சேர்ந்தவர்கள்.

போடு அதன் தோற்றத்தைப் பார்த்துக்கொண் டிருந்தனர்; அவ்விடத்தில் கூடியிருந்த மக்களே யும் சுற்றிப்பார்த்தனர்; ஒன்றும் புரியாது திகைத்து நின்றனர்.

அவ்வமயம் **கோவூர் கிழார்** என்ற புலவர் அங்கு வந்தார்; சோழனது உட்கருத்தை அறிந் தார்; மனம் வருந்திஞர். அவர் சோழனைப் பார்த்து, "புறவின் துன்பத்தைத் துடைத்த சிபி யின் மரபில் வந்தவனே! பிறர் துன்பங்களை நீக்குவதையே அறமாகக் கொண்ட சோழர் குடியில் வந்தவன் நீ. அறிவால் உழுதுண்ணும் கற்ரோரது வறுமையைப் போக்கத் தம் பொருளை வரையாது வழங்கும் அருள் உணர்ச்சியுடைய மலையமான்கள் மரபில் வந்தவர்கள் இப்பிள்ளைகள்; தம்மைக் கொல்ல வரும் யானையைக்கண்டு அதனை வியப்போடு பார்த்து நிற்கின்றனர்; அவையோ ரைக் கண்டு அஞ்சுகின்றனர். இச் சிறுபிள்ளை களைப்பார்த்து இரக்கம்கொள்வது நல்லது," என்று உள்ளம் உருக உரைத்தார்.

**பாணர் நாடு**

பாலாற்றுக்கு வடக்கே புங்கனூரில் இருந்து காளத்தி வரை உள்ள நிலப்பகுதியைக் கி.பி. 10-ஆம் நூற்ருண்டில் **பாணர்** என்ற அரச மரபினர் ஆண்டு வந்தனர். அவர்கள் ஆண்ட நாடு **பாணப்பாடி** அல்லது **பெரும்பாணப்பாடி** எனப்பட்டது. அவர்கள் பிற அரசர்களைப் போலவே சமயம் வாய்த்த போதெல்லாம் தங்கள் நாட்டை விரிவாக்கிவந்தனர் போலும்! கி.பி. 5-ஆம் நூற்ருண்டில் திருவதிகை, பண்ணுருட்டி,

திருப்பாதிரிப்புலியூர் ஆகிய ஊர்களைச் சேர்ந்த நிலப்பகுதியும் 'பாணராஷ்டிரம்' எனப்பட்டது என்று சமண நூல்கள் செப்புகின்றன. **பாண ராஷ்டிரம்** என்ற பெயரே நாளடைவில் **பண்ணுருட்டி** என மருவி இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இப்பாணர்கள் **மகாபலி** (மாவலி) **பாணன் மரபினர்** என்று கல் வெட்டுக்கள் கூறுகின்றன. வட ஆர்க்காடு மாவட் டத்தைச் சேர்ந்த திருவல்லம் சிவன் கோவிலில் இவர்களைப்பற்றிய கல்வெட்டுக்கள் உண்டு.

பாணர் மரபினர் சங்ககாலத்திலும் இருந்த னர். இந்த மரபரசன் ஒருவனது மகள் **சீர்த்தி** என்பவள். காவிரிப்பூம் பட்டினத்தை ஆண்ட **நெடுமுடிக்கிள்ளி** என்ற சோழ அரசன் பாண அரசன் மகளான சீர்த்தி என்பவளை மணந்து கொண்டான். இவ்விருவருக்கும் பிறந்தவனே **உதயகுமரன்** என்பவன்.

பெண்ணையாற்று வளம்பெற்ற திருவதிகை, பண்ணுருட்டி, திருப்பாதிரிப்புலியூர் என்ற ஊர்க ளடங்கிய நிலப்பகுதி கி. பி. 5-ஆம் நூற்றுண்டில் 'பாணராட்டிரம்' என்று வழங்கப்பட்டதை நோக்க, சங்கத்தை அடுத்த பிற்காலத்தில் அப் பகுதி பாணரது ஆட்சிக்கு உட்பட்டதாய் இருந் திருக்கலாம் என்று கருதுவது பொருத்தமாகும்.

சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற காவியங் களின் காலம் கி. பி. 2-ஆம் நூற்றுண்டின் பிற் பகுதி (கி. பி. 150—200) என்னலாம். இக்காலத் திற்கு முற்பட வாழ்ந்த பேரரசனை "கரிகாலன் வடபெண்ணையாறு வரையில் உள்ள நாட்டைக் கைப்பற்றி ஆண்டான்; காடு கெடுத்து நாடாக்கி


ஞன் ; குளம் தொட்டு வளம் பெருக்கினன் ; வேளாளர் பலரைத் தொண்டை நாட்டிற் குடியேற்றினன்,'' என்று நூல்கள் கூறுகின்றன. அவன் காஞ்சி ஏகாம்பரேசுவரர் கோவிலைப் புதுப்பித்தான் என்று அக்கோவில் வரலாறு கூறுகின்றது. அவன் உருவச்சிலையும் அக்கோவிலில் இருக்கிறது.

மணிமேகலை வாழ்ந்த காலத்திலும், தொண்டை நாடு சோழர் ஆட்சியில்தான் இருந்தது. காஞ்சியில் நெடுமுடிக்கிள்ளியின் தம்பியான இளங்கிள்ளி என்பவன் அரசச் சார்பாளனக (பிரதிநிதியாக) இருந்து தொண்டை நாட்டை ஆண்டுவந்தான் என்று **மணிமேகலை** என்னும் காவியம் கூறுகின்றது. எனவே, கரிகாலன் காலமுதல் தொண்டை நாடும் நடுநாடும் சங்ககாலம் முடியச் சோழப் பேரரசர் ஆட்சிக்கு உட்பட்டதாய் இருந்தன என்று கருதுதல் பொருத்தமாகும்.

# 4. பெண்ணை நாட்டு வரலாறு – II

**பல்லவர்**


சங்க காலத்திற்குப் பிறகு ஏறத்தாழக் கி. பி. 300-இல் பல்லவர் என்ற புதிய மரபினர் காஞ்சியைக் கைப்பற்றித் தொண்டை நாட்டை ஆளலாயினர். அவர்கள் ஏறத்தாழ அறுநூறு ஆண்டுகள் ஆண்டனர். கி. பி. 7-ஆம் நூற்றாண்டிலிருந்து காஞ்சியை ஆண்ட பல்லவரே பல்லவ அரசருள் சிறப்புப் பெற்றவர். அவர்கள் ஆட்சி தெற்கே திருச்சிராப்பள்ளி வரையில் பரவியிருந்தது.



மண்டகப்பட்டு : குடைவரைக் கோவில்

பிற்காலப் பல்லவருள் மிகச் சிறந்தவன் **முதலாம் மகேந்திரவர்மன்**. அவன் மலைச்சரிவுகளையும் குன்றுகளையும் குடைந்து கோயில்கள்


அமைத்துப் புகழ்பெற்றவன். அவன் குடைவித்த கோவில்களுள் இரண்டு தென்னார்க்காடு மாவட்டத்தில் **தளவானூரிலும் மண்டகப்பட்டிலும்** இருக்கின்றன.



தளவானூர் : குடைவரைக் கோவில்

அவன் பெண்ணை நாட்டில் வாழ்ந்த திருநாவுக்கரசு நாயனாருடன் தொடர்பு கொண்டவன். திருநாவுக்கரசர் முதலில் சமணராய் இருந்து பின்பு சைவரானவர். மகேந்திரனும் முதலில் சமணனாய் இருந்து பின்பு சைவனானவன். அரசன் சைவனானதும், திருப்பாதிரிப்புலியூரில் இருந்த சமணப் பள்ளியையும் பாழியையும் இடித்தான், அச்சிதைவுகளைக் கொண்டு தன் பெயரால் குணபர ஈசுவரம் என்னும் சிவன் கோவிலைக் கட்டினான் என்று பெரிய புராணம் பேசுகிறது.

கி. பி. 7-ஆம் நூற்றுண்டின் இறுதியிலும் 8-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்த **இராசசிம்ம பல்லவன்** மிகச் சிறந்த சிவபக்தன். அவன் காஞ்சியில் சிற்பத்திறன் வாய்ந்த கயிலாச



பனமலை : குடைவரைக் கோவில்

நாதர் கோவிலை எடுப்பித்தவன். அவன் விழுப் புரம் வட்டத்திலுள்ள **பனமலை** என்னும் இடத்தில் ஒரு கோவிலைக் குடைவித்தான். அங்குள்ள கல்வெட்டு இதனை உணர்த்துகிறது. திருவதிகைச் சிவன் கோவிலில் பரமேசுவரவர்மன், மூன்றும் நந்திவர்மன் என்பவர் கல்வெட்டுக்கள் காணப்படு கின்றன

பெண்ணையாற்றின் கரையிலுள்ள (மஞ்சக் குப்பத்திற்கு எதிர்க்கரையில்) **பாகூர்** என்னும் சிற்றூர் இருக்கிறது. அங்கு மூன்றும் நந்திவர்மன் மகனான நிருபதுங்கவர்மன் காலத்துச் செப்புப் பட்டயங்கள் கிடைத்துள்ளன. அவன் காலத்தில் அங்கு ஒரு **வடமொழிக் கல்லூரி** இருந்தது. பாகூருக்கு அண்மையிலுள்ள மூன்று சிற்றூர்கள் அக்கல்லூரியின் நடைமுறைக்குத் தானமாக விடப் பட்டன. திருக்கோவலூர்க் கோவிலிலும் பிற் காலப் பல்லவர் கல்வெட்டுக்கள் காணப்படு கின்றன. இவற்றை நோக்கத் தொண்டை நாடும் நடு நாடும் கி. பி. 900 வரையில் பல்லவர் ஆட்சியில் இருந்தன என்பது தெளிவாகிறது.

பல்லவர் காலத்தில் திருநாவலூரைத் தலைநக ராகக் கொண்ட சிறு நிலப்பகுதி **திருமுனைப்பாடி நாடு** எனப் பெயர்பெற்றிருந்தது. அதனை 'முனைய தரையர்' என்ற பெயர் கொண்ட சிற்றரசர் ஆண்டு வந்தனர். இராமன் முனையதரையன் (முனையரையன்), நரசிங்க முனையதரையன் என்று அந்நாட்டு அரசர் பெயர்களைக் கல்வெட்டுக் கள் குறிக்கின்றன. கி. பி. 9-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த **சுந்தரமூர்த்தி சுவாமிகள்** திருநாவலூரில் பிறந்தவர். அவர் நரசிங்கமுனை யரையர் என்ற அந்நாட்டு மன்னரால் வளர்க்கப் பட்டார் என்று பெரிய புராணம் பேசுகின்றது. திருமுனைப்பாடி நாட்டுக்கு உயிர்நாடி பெண்ணை யாறே என்று பெரிய புராணம் புகல்கிறது.

திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்ட மலைநாடு **மலையமான் நாடு, மலாடு, மிலாடு,** சேதி **நாடு** என வழங்கப்பெற்றது. அந்நாட்டையாண்ட

அரச மரபினர் **மலையமான்கள், மலாடுடையார், மிலாடுடையார், மலையகுலராயர், சேதிராயர்** என வழங்கப்பெற்றனர். அவர்கள் பல்லவர் காலம் முழுமையும் தொடர்ந்து ஆண்டு வந்தனர். அவருள் ஒருவரே **மெய்ப்பொருள் நாயனூர்** என்று சுந்தரரால் குறிக்கப்பெற்றவர். இச் சிற்றரசர் அனைவரும் பல்லவர் ஆட்சிக்கு உட்பட்டவரே யாவர்.

பல்லவர்கள் கி. பி. 9-ஆம் நூற்ருண்டு வரையில்—தங்கள் பேரரசு மறையும் வரையில்—மைசூர் நாட்டை ஆண்ட கங்க அரசருடன் நட்புக்கொண்டும் மணவுறவு கொண்டும் வாழ்ந்து வந்தனர்.

**சோழர்**

கி. பி. 9-ஆம் நூற்ருண்டின் இறுதியில் சோழ அரசு ஏற்பட்டது. தஞ்சாவூரை ஆண்ட விசயாலய சோழன் மகனுன **ஆதித்தசோழன்** தன் ஆட்சியை வடக்கே காளத்திவரையில் நிறுவினுன். இவ்வாறு, பல்லவர் ஆட்சியிலிருந்து பெண்ணை நாடு சோழர் கைக்கு மாறியது. அஃது ஏறத்தாழக் கி. பி. 1300 வரையில் அவர்கள் ஆட்சியில் தொடர்ந்து இருந்தது.

ஆதித்த சோழன் மகனுன முதல் பராந்தகன் காலத்தில் (907—946) வடக்கே இருந்த (பம்பாய் மாகாணத்தை ஆண்டுவந்த) இராட்டிரகூட அரசனுன மூன்ரும் கிருஷ்ணன் சோழரைத் தாக்கினுன். அப்படையெடுப்பை எதிர்த்து நிறுத்தப் பராந்தகன் மகனுன **இராசாதித்தன்** திருக்கோவலூர் வட்டத்திலுள்ள திருநாவலூரில் தங்கியிருந்தான். அப்பொழுது அவன் அங்கிருந்த சிவன் கோவிலுள்

தன்பெயரால் ஒரு சிறிய கோவிலைக் கட்டினன். இதனை அக்கோவில் கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. பின்பு நடைபெற்ற போரில் அவன் மூன்றும் கிருஷ்ணனால் கொல்லப்பட்டான். தஞ்சையும் காஞ்சியும் கிருஷ்ணன் கைப்பட்டன. அவன் கல் வெட்டுக்கள் திருநாவலூர், திருக்கோவலூர்க் கோவில்களில் காணப்படுகின்றன.

ஏறத்தாழக் கி. பி. 970-க்குப் பிறகு பெண்ணை நாடு மீண்டும் சோழராட்சிக்கு உட்பட்டது. **முதலாம் இராசராசன்** என்ற சோழப் பேரரசன் வடக்கே துங்கபத்திரையாறு வரையில் தனது ஆட்சியை விரிவாக்கினன். அவனது ஆட்சியில் திருக்கோவலூரை ஆண்ட மலையமான்கள், (திருக்கோவலூர்க்குத் தெற்கே ஏறத்தாழப் பதினன்கு கல் தொலைவிலுள்ள) **கிளியூரையாண்ட மலையமான்கள், ஆடையூரையாண்ட மலையமான்கள்,** திருநாவலூர்க்கு அருகே உள்ள சேந்தமங்கலப் பகுதியை ஆண்ட **காடவராயர்** எனச் சிற்றரசர் பலர் நடு நாட்டில் இருந்தனர்.

மூன்றும் குலோத்துங்கனுக்குப் பிறகு சோழப் பேரரசு நிலை தளர்ந்தது. **மூன்றும் இராசராச சோழன்** (கி. பி. 1216—1246) வலியற்றவன். அவன் காலத்தில் தெற்கே பாண்டியர் வலிமை படைத்தவராய்த் தம் ஆட்சி நிறுவ முனைந்தனர்; அதுகாறும் தம்மை அடிமைப் படுத்திவந்த சோழரைப் பழிவாங்கவும் துணிந்தனர். மேற்கே துவாரசமுத்திரத்தைத் தலைநகராய்க் கொண்டு மைசூரை ஆண்ட **ஹொய்சளர்** பேரரசை நிறுவி வந்தனர். வடக்கே நெல்லூரை ஆண்ட தெலுங்குச் சோழர் சோழப் பேரரசின் வடபகுதியைத் தமதாக்கிக்

கொண்டனர். பல்லவர் மரபில் வந்து **சேந்த மங்கலத்தை** ஆண்டு வந்த காடவராயர் சோழரைப் பழிதீர்த்துக்கொள்ளும் சமயத்தை எதிர் பார்த்து இருந்தனர்.

பாண்டிய நாட்டை ஆண்டுவந்த **மாறவர்மன் சுந்தரபாண்டியன்** (கி. பி. 1216—1238) சோழப் பெருநாட்டின்மீது படையெடுத்தான். உறையூரும் தஞ்சையும் நெருப்புக்கு இரையாயின. சோழன் ஓடி ஒளிந்தான். பாண்டியன் வெற்றிப் பெருமிதத்துடன் பொன்னமராவதியில் தங்கியிருந்தான். அப்பொழுது மூன்றும் இராசராசன் தன் மனைவி மக்களோடு அங்குச் சென்று, தன் நாட்டை அளிக்கும்படி குறையிரந்து நின்றான். பாண்டியன் அருள்கூர்ந்து சோழநாட்டை வழங்கினான். இக்காரணம் பற்றியே பாண்டியன், "சோணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டிய தேவர்" என்று கல்வெட்டுக்களில் குறிக்கப்பெற்றான்.

பாண்டியனது முதல் படையெடுப்புக்குப் பின்பு சோழப் பெருநாட்டில் குழப்பங்கள் மிகுந்தன. மைசூரை ஆண்ட ஹொய்சளர் சோழனுக்கு உதவியாய் இருந்தனர். சோழன் தனக்கு அடங்கிக் கப்பம் கட்டத் தவறியதால், பாண்டியன் மீண்டும் சோழ நாட்டின்மீது படையெடுத்தான்; பல ஊர்களை எரித்தான்.

இராசராசன் பாண்டியனிடம் தோற்றுத் தன்னைச் சூழ்ந்தாருடன் வடக்கு நோக்கி வரும்பொழுது, சேந்தமங்கலத்தை ஆண்டுவந்த **கோப் பெருஞ்சிங்கன்** என்ற காடவராயன் தன் பேரரசனை இராசராசனைப் பிடித்துச் சேந்தமங்கலக் கோட்டையுள் சிறைப்படுத்தினான்.

சோழனுட்டுத் துன்பநிலையைக் கேள்வியுற்ற ஹொய்சள அரசனுன **நரசிம்மன்** கோப்பெருஞ்சிங்கன்மீது படையெடுத்தான்; அவனது ஆட்சிக்கு உட்பட்ட திருவதிகை முதலிய ஊர்களை அழித்தான். இறுதியில் கோப்பெருஞ்சிங்கன் தோல்வியுற்ருன். இராசராசன் விடுதலை பெற்ருன்.

மூன்ரும் இராசராசனுக்குப் பின்வந்த **மூன்ரும் இராசேந்திரன்** என்ற சோழ வேந்தனும் திறமையற்றவன். அவன் **இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன்** (கி. பி. 1238–1253) என்பவனிடம் பகைமை கொண்டான். சேந்தமங்கலத்தை ஆண்ட கோப்பெருஞ்சிங்கன் சோழனுக்கு எதிராகப் பாண்டியனுக்கு உதவி செய்தான். கோப்பெருஞ்சிங்கன் சிறந்த வீரன்.

**சோழர்க்குப் பின்பு**

சோழப் பேரரசர் வீழ்ச்சிக்குப் பிறகு ஹொய்சளர் ஆட்சி பெண்ணை நாட்டில் பரவியது. 14-ஆம் நூற்ருண்டின் தொடக்கத்தில் மாலிக்-காபூர் படையெடுப்பினுல் ஹொய்சளர் தலைநகரான துவாரசமுக்திரம் ஹொய்சளரால் கைவிடப்பட்டது; திருவண்ணுமலை தலைநகர் ஆக்கப்பட்டது.

கி. பி. 14-ஆம் நூற்ருண்டின் பிற்பகுதி முதல் தென்னிந்தியா விசயநகர ஆட்சிக்கு உட்பட்டது. அதுமுதல் கி. பி. 17-ஆம் நூற்ருண்டு வரையில் பெண்ணைநாடு விசயநகர வேந்தர் ஆட்சியில் இருந்தது. விசயநகரப் பிரதிநிதிகள் செஞ்சிக் கோட்டையில் இருந்துகொண்டு நடுநாட்டை ஆண்டு வந்தனர்.

# 5. பெண்ணை நாட்டு வரலாறு–III

## ஆர்க்காட்டு நவாபின் ஆட்சி

கி. பி. 17-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கோல்கொண்டா சுல்தானும் பிஜாப்பூர் சுல்தானும் தென்ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள செஞ்சிக் கோட்டையை முனைந்து கைப்பற்றினர். அதே நூற்றாண்டின் பிற்பகுதியில் சிவாஜி அக்கோட்டையைக் கைப்பற்றினார்.

1687-இல் ஔரங்கசீபு பிஜாப்பூர், கோல்கொண்டா அரசுகளை அழித்தார்; அடுத்து மகாராட்டிரரைத் தாக்கினார். அதனால் சிவாஜியின் மகனாரான இராமராசர் செஞ்சிக் கோட்டையில் அடைக்கலம் புகுந்தனர்.

ஔரங்கசீபு செஞ்சிக் கோட்டையைக் கைப்பற்றித் தென்னாட்டை ஆள விரும்பினார். அவர் விருப்பப்படி செஞ்சிக் கோட்டை கைப்பற்றப்பட்டது. ஆனால் செஞ்சி தென்னாட்டுக்கு ஏற்ற தலைநகர் அன்று என்பதை முஸ்லிம் தலைவர்கள் உணர்ந்தனர்; அதனால் ஆர்க்காடு என்னும் நகரைத் தலைநகராக்கிக்கொண்டனர்.

ஔரங்கசீபு தமது பெருநாட்டைப் பல மாகாணங்களாக (சுபாக்களாக)ப் பிரித்தார்; ஒவ்வொரு மாகாணத்திலும் அரசப் பிரதிநிதி ஒருவரை நியமித்தார். அப்பிரதிநிதி **சுபதார்** எனப்பட்டனர். விந்த மலைக்குத் தென்பால் அமைந்த பகுதி ஒரு சுபதார் ஆட்சியில் விடப்பட்டது. அச்சுபதார் தென்னாட்டைத் தம் பிரதிநிதியாக இருந்து ஆண்டுவர ஒரு **நவாபை** ஏற்படுத்தினார். அவர்


கருநாடக நவாபு அல்லது ஆர்க்காட்டு நவாபு எனப்பட்டார். இங்ஙனம் பெண்ணைநாடு உள்ளிட்ட தென்னிந்தியா ஆர்க்காட்டு நவாபின் ஆட்சிக்கு உட்பட்டது.

## மேனாட்டார் நுழைவு

கி. பி. 16-ஆம் நூற்றாண்டின் இறுதியில் போர்ச்சுகீசியர் தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள பறங்கிப்பேட்டையில் தங்கி வாணிகத்தைத் தொடங்கினர். சில ஆண்டுகளுக்குப் பிறகு டச்சுக்காரர் அவர்களை விரட்டி விட்டுப் பறங்கிப் பேட்டையில் தங்கினர்; கெடிலம் ஆறு கடலொடு கலக்கும் இடத்திற்கு எழுநூறு கெஜம் வடக்கே ஒரு கோட்டையைக் கட்டிக்கொண்டனர். அவ்விடத்திற்குத் தேவனாம்பட்டினம்* என்பது பெயர். அப்பொழுது செஞ்சியை ஆண்ட மகாராட்டிரரே, டச்சுக்காரர் அங்குத் தங்கவும், வாணிகம் செய்யவும் உரிமை அளித்தனர்.

ஆங்கிலேயர் 1639-இல் தேவனாம்பட்டினத்தருகில் செயின்ட் டேவிட் கோட்டையைக் கட்டினர்; 1674-இல் பிஜாப்பூர் கவர்னராகச் செஞ்சியிலிருந்த முகமதுகானிடம் வாணிகச் சலுகைகளைப் பெற்றுக்கொண்டனர். 1681-க்குப் பிறகு செஞ்சியில் மகாராட்டிரர் ஆட்சி ஏற்பட்டது. அதனால் ஆங்கிலேயர் அவர்களது இசைவு பெற்று வாணிகம் செய்தனர். 1690-இல் செஞ்சி ஔரங்கசீபின் ஆட்சிக்கு மாறிவிட்டது. எனவே, ஆங்கி

* "தெய்வநாயகன் பட்டினம் என்பது இதன் பழைய பெயர். அப்பெயரே பின்பு தேவனாம்பட்டினம் எனத் திரிந்தது" என்று இவ்வூர் முதியவர் மொழிகின்றனர்.


பெண்ணையாறு
தேவனாம்பட்டினம்
உப்பனாறு
உப்பனாறு
செயின்ட்டேவிட் கோட்டை
கெடிலம்
உப்பனாறு
கடல்
வங்கக்
உப்பனாறு
கடலூர்
CITY

லேயர் செஞ்சியில் இருந்த மொகலாய அரசப் பிரதிநிதியின் இசைவு பெற்று வாணிகம் நடத்தினர். 1691-இல் மஞ்சக்குப்பம் டச்சுக்காரரிடமிருந்து ஆங்கிலேயர் கைக்கு மாறியது.

1710-இல் சருப்சிங்கு என்பவர் (தேஜ்சிங்கின் தகப்பனுர்) ஔரங்கசீபின் பிரதிநிதியாகச் செஞ்சிக் கவர்னர் வேலையை மேற்கொண்டார். சருப்சிங்கிற்கும் ஆங்கிலேயருக்கும் போர் ஏற்பட்டது. அப்போர் பிரெஞ்சுக்காரர் இடையீட்டால் சமாதானமாக முடிந்தது. 1740-இல் தஞ்சையில் இருந்துவந்த மகாராட்டிரப் படைகள் கடலூரைத் தாக்கின; மஞ்சக்குப்பத்தைக் கொள்ளை அடித்தன.

## ஆங்கிலேயர்—பிரெஞ்சுக்காரர் போர்கள்

கி. பி. 1744-இல் பிரெஞ்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்கும் ஐரோப்பாவில் போர் மூண்டது. பிரெஞ்சுக் கவர்னரான **டியூப்ளே** ஆங்கிலேயர்க்கு உரிமையான சென்னைக் கோட்டையைக் கைப்பற்றினுர். அப்பொழுது அக்கோட்டையில் எழுத்தராக (கிளார்க்கு) இருந்த **இராபர்ட் கிளைவ்** என்பவர் கடலூரில் இருந்த செயின்ட் டேவிட் கோட்டையில் சரண் புகுந்தார்.

1746-இல் பிரெஞ்சுக்காரர் **பெண்ணை யாற்றைத்** தாண்டி, அதற்கு ஏறத்தாழ ஒன்றரைக்கல் தெற்கே இருந்த செயின்ட் டேவிட் கோட்டையைக் கைப்பற்ற முனைந்தனர். அப்பொழுது கருநாடக நவாபின் பிள்ளைகள் தலைமையில் ஆங்கிலேயர்க்கு உதவியாகத் தனித்தனியே இரண்டு படைகள் வந்தன. அப்படைகளைக் கண்ட பிரெஞ்சுக்காரர்

பெண்ணையாற்றைக் கடந்து ஓட முற்பட்டனர். அதற்குள் நவாபின் படைகள் அவர்களை மடக்க முனைந்தன. பிரெஞ்சுக்காரர் பெண்ணை ஆற்றில் குதித்துக் கரையேறித் தப்பியோடிப் புதுச்சேரிக்கு மூன்று கல் தொலைவிலுள்ள அரியாங்குப்பத்தை* அடைந்தனர்.

ஆங்கிலேயரின் பலம் குறைந்துவிட்டதாக எண்ணிய நவாபு, 1747-இல் பிரெஞ்சுக்காரருக்கு உதவி செய்தார். அதனால் துணிவுகொண்ட பிரெஞ்சுக்காரர் பெண்ணை ஆற்றைத் தாண்டி, செயின்ட் டேவிட் கோட்டையினுட் புகுந்தனர். ஆனால் அவ்வமயம் வங்கத்திற்குச் சென்றிருந்த ஆங்கிலக் கப்பற்படை அங்கு வந்துவிட்டது. அதைக் கண்டதும் பிரெஞ்சு வீரர் ஓடிவிட்டனர். 1748-இல் ஆங்கிலேயர்க்கும் பிரெஞ்சுக்காரர்க்கும் சமாதானம் ஏற்பட்டது. ஆயினும் கடலூரில் இருந்த ஆங்கிலேயரும் புதுச்சேரியில் இருந்த பிரெஞ்சுக்காரரும் சுதேச அரசர்களோடு சேர்ந்து கொண்டு போரிடலாயினர்.

ஔரங்கசீபினால் தக்கணத்தில் நியமிக்கப் பெற்ற சுபதார், டில்லி அதிகாரத்திலிருந்து தம்மை விலக்கிக்கொண்டார்; தாமே ஆர்க்காட்டு நவாபையும் நியமிக்கலானார். அவர் கி. பி. 1748-இல் இறந்தார். அவர் மகன் நாசிர் ஜங்கும் பெயரர் முசபர்ஜங்கும் சுபதார் பதவிக்குப் போட்டியிட்டனர். சந்தாசாகிபு என்பவர் சிறந்த படை வீரர். அவர் தம்மைச் சுபதார் ஆக்கும் முயற்சியில் வெற்றி பெற்றால், தாம் அவரை ஆர்க்காட்டு நவாபாக்குவ

* அரையன்குப்பம் என்பதே இவ்வாறு மாறியதுபோலும்!

தாக முசபர் ஜங்கு அவருக்கு வாக்களித்தார். சந்தா சாகிபின் உறவினரே அதுவரையில் ஆர்க்காட்டு நவாபுகளாக இருந்து வந்தனர். அப்பதவி தமக்கு வரவேண்டும் என்ற விருப்பத்தினுல் சந்தாசாகிபு முசபர் ஜங்கிற்கு உதவ முன்வந்தார். டியூப்ளே அவ்விருவரோடும் சேர்ந்துகொண்டார். இம்மூவரும் பெரும்படையுடன் சென்று ஆம்பூரில் ஆர்க்காட்டு நவாபைப் போரில் கொன்றனர். முசபர் ஜங்கு சுபதார் ஆனுர்; ஒப்பந்தப்படி, சந்தாசாகிபு ஆர்க்காட்டு நவாபானுர். பிரெஞ்சுக்காரர் அந்த இருவரிடமும் மிகுதியான பரிசுகளேப் பெற்றனர். டியூப்ளே அவர்களுக்கு அரசியல் குருவாக அமர்ந்தார்.

ஆம்பூர்ப் போரில் கொல்லப்பட்ட ஆர்க்காட்டு நவாபுவின் புதல்வரான முகமது அலிக்கும், நாசிர் ஜங்கிற்கும் ஆங்கிலேயர் படை உதவி புரிந்தனர். அவ்வுதவியின் பயனுக நாசிர்ஜங்கு சுபதார் ஆனுர்; முகமது அலி கருநாடக நவாபு ஆனுர்.

அக்காலத்தில் திருவதிகைக் கோவில் பாதுகாப்பு மிகுந்த கோட்டையாக இருந்தது. அது முகமது அலிக்கு உரியது. டியூப்ளே அக் கோவிலேக் கைப்பற்றினுர்; அங்குத் தம்மைத் தாக்க வந்த முகமது அலியை ஆர்க்காட்டுக்கு விரட்டினுர். செஞ்சிக்கோட்டை பிரெஞ்சுக்காரர் கைப்பட்டது. பின்பு நடைபெற்ற போரில் நாசிர்ஜங்கு கொல்லப்பட்டார். எனவே, முசபர்ஜங்கு சுபதார் ஆனுர்; சந்தா சாகிபும் கருநாடக நவாபானுர். முகமது அலி திருச்சிராப்பள்ளிக் கோட்டையுள் ஒளிந்து கொண்டார். அவ்வமயம் முசபர்ஜங்கு கொல்லப்பட்டார். டியூப்ளே சலபட்ஜங்கு என்பவரைச்

சுபதார் ஆக்கினர். சந்தா சாகிபும் பிரெஞ்சுக் காரரும் திருச்சிராப்பள்ளிக் கோட்டையை முற்றுகை யிட்டனர். முற்றுகையின் காலம் நீண்டது. அதுதான் தக்க சமயம் என்று கருதிய கிளைவ், ஆர்க்காட்டைக் கைப்பற்றினர். 1752-இல் சந்தா சாகிபு கொல்லப்பட்டார்.

1752-இல் ஆங்கிலேயர் முகமது அலிக்காகச் செஞ்சியைக் கைப்பற்ற முனைந்தனர். ஆனல் டியூப்ளே செயின்ட் டேவிட் கோட்டையைக் கைப் பற்ற முனைந்ததால், ஆங்கிலேயர் முயற்சி பயன் அளிக்கவில்லை. 1754-இல் டியூப்ளே அதிகாரிக ளால் பிரான்சுக்கு அழைக்கப்பட்டுவிட்டார்.

1756-இல் பிரான்சுக்கும் இங்கிலாந்திற்கும் போர் மூண்டது. அதன் பயனுகப் பிரெஞ்சுக்காரர் இங்குக் கடலூரைத் தாக்க முனைந்தனர். அம் முயற்சிக்குச் சற்று முன்பு, டச்சுக்காரரது தேவ னும்பட்டனத்துக் கோட்டை பிரெஞ்சுக்காரர் தாக் குதலுக்கு உதவியாக இருக்கக் கூடாது என்ற எண்ணத்தால், ஆங்கிலேயர் அதனை இடித்துத் தள்ளினர்; அதற்கு ஈடாக மஞ்சக்குப்பத்தில் இருந்த பெரிய வீடு ஒன்றை அவர்கட்குக் கொடுத் தனர்.

பிரெஞ்சுக்காரர் கப்பல்கள் வழியாகப் பீரங்கி களையும் பிறவற்றையும் பெண்ணையாறு கடலொடு கலக்கும் இடத்தில் இறக்கினர். செயின்ட் டேவிட் கோட்டையைப் பீரங்கிகளால் அழிக்க முயற்சி எடுக்கப்பட்டது. கோட்டையின் மதில்மீது இருந்த ஆங்கிலேயரின் பீரங்கிகள் குண்டுகளைப் பொழிந்து பகைவர் முயற்சியைத் தடுக்க முயன்றன. கோட் டையின் நாலாப் பக்கங்களிலும் தக்க பாதுகாப்பு

அமைக்கப்பட்டது. அதைச் சுற்றிலும் வெளியில் ஆங்காங்குப் பீரங்கிகள் வைக்கப்பட்டிருந்தன. 1758-ஆம் ஆண்டு மே மாதம் 16-ஆம் நாள் இரவு பகைவர் கோட்டையைத் தாக்குவர் என்ற செய்தி ஆங்கிலேயருக்கு எட்டியது; அவர்கள் முன் எச்சரிக்கையாக இருந்ததால் கோட்டை பகைவரால் பிடிக்கப்படவில்லை. முற்றுகை பல நாள் நீடித்தது. இருதிறத்தாரும் ஒருவர்மீது ஒருவர் குண்டு மாரி பொழிந்தனர். சூன் திங்கள் முதல் நாள் செயின்ட் டேவிட் கோட்டையில் இருந்த ஆங்கிலேயர் பிரெஞ்சுக்காரருடன் சமாதானம் செய்துகொண்டனர். அதன் பயனாகப் பிரெஞ்சுக்காரர் செல்வாக்கு உயர்ந்தது.

ஆங்கிலேயர் 1760-இல் வந்தவாசியில் நடைபெற்ற போரில் பிரெஞ்சுக்காரரைக் கடுமையாகத் தோற்கடித்தனர். அடுத்த ஆண்டில் புதுச்சேரி ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டது. பிரெஞ்சுக்காரர் ஆதிக்கத்தில் இருந்த திருவண்ணாமலை, பெருமுக்கல், வானூர், விழுப்புரம், வழுதாவூர், திருவதிகை, சிதம்பரம், விருத்தாசலம், கடலூர் என்ற இடங்கள் படிப்படியாக ஆங்கிலேயர் கைப்பட்டன. கடலூரில் ஆங்கிலேயர் முன்பு செய்திருந்த பாதுகாப்புக்கள் யாவும் பிரெஞ்சுக்காரரால் அழிக்கப்பட்டன. செஞ்சியும் தியாகதுர்க்கமும் ஆங்கிலேயர் கைக்கு மாறின. இங்ஙனம் பிரெஞ்சுக்காரர் செல்வாக்கு நடுநாட்டில் ஒழிக்கப்பட்டது. 1765-இல் புதுச்சேரி பிரெஞ்சுக்காரர் கையில் திருப்பித்தரப்பட்டது; ஆனால் 1778-இல் ஆங்கிலேயரால் மீண்டும் கைப்பற்றப்பட்டது. அதன் பாதுகாப்புக்கள் அழிக்கப்பட்டன.

**ஹைதரும் திப்புவும்**

மைசூர் நாட்டு அரசரிடம் செல்வாக்குப் பெற்றிருந்த குதிரைவீரர் **ஹைதர் அலி** என்பவர். அவர் சூழ்ச்சியால் மைசூர் நாட்டுக்கு அரசரானுர். அவர் 1780-இல் செங்கம் கணவாய் வழியாகக் கடலூர்மீது படையெடுத்தார். அவருக்கும் ஆங்கிலேயருக்கும் பறங்கிப்பேட்டையில் கடும் போர் நடந்தது. ஹைதர் முற்றிலும் முறியடிக்கப்பட்டார். பிரெஞ்சுக்காரர் ஹைதர் அலியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு கடலூரைத் தமதாக்கிக் கொள்ள விரும்பினர். ஹைதர் அலியின் மகனுன **திப்புசுல்தான்** பிரெஞ்சுக்காரர் உதவியுடன் கடலூரைத் தாக்கினுர். ஆங்கிலேயர் சரணடைந்தனர்.

1783-ஏப்ரல் திங்களில் புஸ்ஸி என்ற பிரெஞ்சுப் படைத் தலைவர் கடலூரை அடைந்தார். ஆங்கிலப் படைத் தலைவர் ஸ்டுவர்ட்டு என்பவர் அவரைக் கடலூர்க்கு அருகில் தாக்கினுர். பல நாட்கள் போர் நடந்தது; 1785-இல் உடன்பாடு ஏற்பட்டது. அதன்படி கடலூர் ஆங்கிலேயரிடமும், புதுச்சேரி பிரெஞ்சுக்காரரிடமும் ஒப்படைக்கப்பட்டன.

1790-இல் திப்புசுல்தான் ஆங்கிலேயருடன் பல இடங்களில் போரிட்டுத் தோல்வியுற்று ஓடினுர். 1799-இல் திப்புவின் தலைநகரான சீரங்கப்பட்டணம் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டது. அப்பொழுது நடைபெற்ற போரில் திப்புசுல்தான் கொல்லப்பட்டார். ஆங்கிலேயருக்கு நண்பராக நடித்துவந்த முகமது அலியும் அவர் மகனும் திப்புவிற்கு இரகசியமாக உதவி வந்தனர். இதனை அறிந்த ஆங்கிலேயர் அஸ்ஸிம் - உத் - தௌலா

என்பவரை ஆர்க்காட்டு நவாபாக்கினர். அந்த நவாபு கருநாடக நாடு முழுமையையும் ஆங்கிலேயர் ஆட்சியில் விட்டுவிடுவதாக 1801-இல் எழுதிக் கொடுத்தார்.

இங்ஙனம் பெண்ணையாறு பாயப்பெற்ற நிலப் பகுதியும் அதைச் சுற்றியுள்ள பகுதியும் ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்டது.

1947-ஆகஸ்டு முதல் நமது நாடு தன்னுட்சி பெற்று விளங்குகிறது. அதனுல், இன்று பெண்ணை நாடு உள்ளிட்ட நமது நாட்டை நாமே ஆளுகின்ரேம்.

# 6. பெண்ணை நாட்டு ஊர்கள்—I

**முன்னுரை**

தென்பெண்ணையாறு பாயப்பெற்ற எல்லா மாவட்டங்களிலும் இதன் கரைகளை அடுத்துக் குறிப்பிடத்தக்க சில ஊர்கள் அமைந்திருத்தல் இயல்பாகும். மேலும் இதன் கரையோரமாக அமையாது, இதன் பயனைப்பெறும் பல ஊர்கள் இதற்கு ஏறத்தாழ இருபது கல் தொலைவுவரை ஆங்காங்குப் பரவியிருக்கின்றன. இப் பேரியாற்றின் தோற்றுவாயிலிருந்து இது கடலொடு கலக்கும் இடம் முடிய இவ்விருவகை ஊர்களிலும் குறிப்பிடத்தகும் சிறப்பு வாய்ந்த சில ஊர்களைப் பற்றிய விவரங்களை மட்டுமே இங்குக் காண்போம் :

**தேவன் ஹள்ளி**

பெண்ணையாறு கோலார் வட்டத்தில் தோன்றிப் பாயும்போது அதன் அருகில் அமைந்துள்ள முதல் நகரம் தேவன் ஹள்ளி என்பது. இந்த நகரம் பெங்களூர் மாவட்டத்தில் இருக்கிறது. இது தேவன் ஹள்ளி வட்டத்திற்குத் தலைநகரம். இவ் வட்டத்தின் கிழக்கே பாய்வது தென்பெண்ணையாறு. தேவன் ஹள்ளிக்கு அருகில் பல துணையாறுகள் பெண்ணையில் கலக்கின்றன. தேவன் ஹள்ளி வட்டம் பள்ளமான பயிர் நிலங்களையும், மேடான காட்டு நிலங்களையும் உடையது; 16-ஆம் நூற்றுண்டு முதல் சிற்றரசர் ஒருவர்க்குத் தலைநகராய் விளங்கியது; 1749-இல் மைசூர்ப் பேரரசர் ஆட்சிக்கு உட்பட்டது. இந் நகரில் ஒரு கோட்டை

உண்டு. மைசூர்ப் பேரரசர் 1749-இல் இந் நகரத்தை முற்றுகையிட்டார். அப்போதுதான் பிற்காலத்தில் புகழ்பெற்ற ஹைதர் அலி என்பவர் ஒரு சாதாரண குதிரைச்சேவகராய் வந்து பேரரசர்க்கு உதவி செய்தார். அவர் மகனுரான திப்பு இந்த ஊரில்தான் பிறந்தார். தேவன் ஹள்ளி கோட்டைக்கு மேற்குப் பக்கத்தில் ஹைதர் அலி வீடு இருந்ததாக அவ்வூர் மக்கள் ஓரிடத்தை இன்றும் சுட்டிக் காட்டுகின்றனர். மைசூர்ப் பேரரசை வீழ்த்திய பிறகு ஹைதரே மைசூர் நாட்டு மன்னரானுர். அவர் மன்னரான பிறகு தேவன் ஹள்ளி கோட்டையைப் புதுப்பித்தார். அக் கோட்டை 1791-இல் கார்ன்வாலிஸ் பிரபுவினுல் கைப்பற்றப் பட்டது.

**ஹாஸ்கோட்டை**

இது பெண்ணையாற்றின் தென் கரையில் உள்ளது. பெங்களூர் வட்டத்தில் மேற்கிலிருந்து வரும் துணையாறு ஒன்றைக் கட்குடி என்னும் இடத்தில் பெண்ணையாறு பெறுகிறது. இவ்வூரில் ஒரு பெரிய சிவன் கோவில் உண்டு. அங்குள்ள சிவலிங்கத்தின் பெயர் அமிர்தேசுவரர் என்பது. ஆண்டுதோறும் வைகாசியில் தேர்விழா மிக்க சிறப்புடன் நடைபெறுகிறது. அதே திங்களில் முழுநிலா அன்று இங்குத் தருமராயன் கரக விழா நடப்பது வழக்கம். ஆயிரக்கணக்கான மக்கள் அவ்விழாவினைப் பார்த்து மகிழ்வர். இவ்வூரில் ஒரு கோட்டை உண்டு. விசயநகர ஆட்சிக் குட்பட்ட திம்ம கவுடர் என்ற சிற்றரசர் 1595-இல் அக் கோட்டையைக் கட்டினுர். ஹைதர் அலி 1761-இல்

அக்கோட்டையைக் கைப்பற்றினர். ஹைதருக்குப் பின்பு அக்கோட்டை மைசூர் அரசர் ஆட்சிக்கு உட்பட்டது.

## சர்ஜபுரம்

மொகலாயர் ஆட்சிக்காலத்தில் சர்ஜபுரம் உள்ளிட்ட பத்தொன்பது கிராமங்கள் ஒரு ஜாகீராக இருந்தன. மொகலாயப் பேரரசர்க்குப் படை உதவி செய்யவே இந்த ஜாகீர் ஏற்பட்டது. இந்த ஜாகீர் பின்பு நாடாண்ட ஆங்கிலேயராலும் கௌரவிக்கப்பட்டது.

இந்த நகரத்தில் பருத்தியாடைகள், சமக்காளம், நாடா என்பவை சிறப்பாகத் தயாரிக்கப்படுகின்றன. பல்லாண்டுகளுக்கு முன்பு இவ்வூரில் 'மஸ்லின்' என்ற மெல்லிய ஆடையும் நெய்யப்பட்டதாம். இதுவே மைசூர் நாட்டில் பெண்ணையாற்றங்கரையிலுள்ள கடைசி நகரமாகும்.

## காவேரிப் பட்டணம்

இது சேலம் மாவட்டத்தில் பெண்ணையாறு பாயும் கிருஷ்ணகிரி வட்டத்தில், பெண்ணையாற்றின் வலக்கரையில் உள்ளது. இது கிருஷ்ணகிரிக்குத் தெற்கே ஏழரைக்கல் தொலைவில் இருக்கின்றது. முதல் மைசூர்ப் போரில் ஆங்கிலப் படைகள் இந்நகரைக் கைப்பற்றின. ஹைதர் அலி இதனைப் பாதுகாப்பு மிகுந்ததாகச் செய்தார். மூன்றும் மைசூர்ப்போரில் ஆங்கிலேயர் இதனைக் கைப்பற்றினர். திப்பு சுல்தான் இந்நகரை வளைத்துக்கொண்டு ஆங்கிலேயருடன் போரிட்டார்.

இந்நகரத்தில் ஒரு கோட்டை இருந்தது. அது மேலே கூறப்பெற்ற போரில் அழிந்தது. அக் கோட்டை மதிலின் சிதைவுகளும், கோட்டையைச் சூழ்ந்திருந்த அகழிகளின் சிதைவுகளும் பெண்ணை யாற்றுக்கும் தருமபுரி செல்லும் பாதைக்கும் இடையில் இருந்தன. இன்று அகழியின் சிதைவுகள் மட்டும் காணப்படுகின்றன. கோட்டைச் சிதைவுகளிற் கிடைத்த கற்களைக்கொண்டு ஊரார் பெருமாள் கோவிலையும் சிவன் கோவிலையும் கட்டியுள்ளனர். அக் கோவில்கள் உள்ள இடம் கோட்டை கட்டப்பெற்றிருந்த இடமேயாகும். ஆதலால் அவை 'கோட்டைக் கோவில்கள்' என்றே இன்று வழங்கப்படுகின்றன.

இந்நகரிலும் இதன் சுற்றுப்புறத்திலும் உணவுக்கும் நீருக்கும் குறைவில்லை. இங்கு நல்லெண்ணெய் உற்பத்தி மிகுதி. வெற்றிலைத் தோட்டங்களும் மிகுதி. இங்கு மாந்தோப்புக்களும் மிகுதியாக உள்ளன. இங்கு உற்பத்தியாகும் நல்லெண்ணெய், வெற்றிலை, மாம்பழங்கள் அயலூர்களுக்கு அனுப்பப்படுகின்றன. நல்லெண்ணெயின் பெரும் பகுதி மலையாள மாவட்டத்திற்கு அனுப்பப்படுகிறது.

**சென்னை அரசினர் மாதிரிப் பழப் பண்ணை** ஒன்றை இவ்வூரில் நடத்துகின்றனர். அப்பண்ணை பல ஏக்கர் பரப்புள்ளது. அதனில் பலவகை ஒட்டு மாமரங்களும் பிற பழமரங்களும் கொடிகளும் பயிராகின்றன.

**மணலூர்ப்பேட்டை**


திருக்கோவலூர் வட்டத்தில் பெண்ணையாற்றங் கரையிலுள்ள குறிப்பிடத்தக்க முதல் ஊர் **மணலூர்ப் பேட்டை** என்பது. இது பெண்ணையாற்றின் வடகரையில் இருக்கின்றது. ஆண்டு தோறும் தைத்திங்கள் முதல் ஐந்து நாட்களிலும், முன்பு கூறியபடி, இங்குத் திருவிழா நடைபெறுகிறது. திருவண்ணுமலையிலிருந்து கடவுளர் செப்புத் திருமேனிகள் இவ்வூருக்குக் கொண்டு வரப்பட்டுப் பெண்ணையாற்றில் நீராட்டப்பெறுகின்றன. அந்த நன்ளுளில் ஏறத்தாழ இருபதாயிரம் மக்கள் இந் நீராட்டு விழாவில் கலந்துகொள்வர்.

மணலூர்ப்பேட்டை வாணிகத்திற்குப் பெயர் பெற்றது. வெள்ளிக்கிழமை தோறும் இங்குச் சந்தை நடைபெறும். சேலம், வடஆர்க்காடு மாவட்டங்களிலிருந்து கால்நடைகள் இச் சந்தைக்குக் கொண்டுவரப்படும். இவ்வூர் நெசவுக்குப் பெயர்போனது. சேடர், சாலியர் என்பவர் நெசவு வேலையில் ஈடுபட்டுள்ளனர். மிகக் குறுகிய சரிகைக் கரையுள்ள வெள்ளை ஆடைகளும் குறுகிய பட்டுக் கரைகளையுடைய சிவப்பு ஆடைகளும் இங்குத் தயாரிக்கப்படுகின்றன. காஞ்சி நகரத்திலிருந்து பட்டு இங்கு இறக்குமதியாகின்றது.

**அறையணி நல்லூர்**

இஃது இன்று **அரகண்ட நல்லூர்** என்று அழைக்கப்படுகிறது. இது பெண்ணையாற்றின் வடகரையில் அமைந்துள்ளது. இதற்கு நேர் தெற்கே ஆற்றுக்கப்பால் திருக்கோவலூர் இருக்

கிறது. ஆற்றின் வடகரையில் பெரிய பாறை இருக்கின்றது. அப்பாறைமீது பெரிய **சிவன்**



அறையணி நல்லூர் : சிவன் கோவில்

**கோவில்** காட்சியளிக்கிறது. அச்சிவன் கோவில் கோபுரம் எட்டு நிலைகளையுடையது. கி. பி. 7-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த **திருஞான சம்பந்தர்** அக் கோயிலில் உள்ள சிவபெருமான்மீது ஒரு திருப் பதிகம் பாடியுள்ளார். இதனுல் கோவிலின் பழைமை நன்கு தெரிகிறதன்றோ ?

சிவன் கோவிலுக்கு மேற்கே பாறையின்மீது ஐயனர் கோவில் விளங்குகின்றது. அச்சமூட்டத் தக்க தெய்வங்களின் சிலைகள் கோவிலுக்கு வெளிப் புறத்தில் அமர்ந்த நிலையில் காணப்படுகின் றன. இக் கோவிலுக்குக் கிழக்கில் ஒரு சுனை இருக்கின்றது. பீமன் தன் 'கதை' என்னும் போர்க் கருவியால் அச்சுனையை உண்டாக்கினுன் என்று ஊர் மக்கள் உரைக்கின்றனர். சுனையின் மேற்கு முனையில் பாறையில் குகைக் கோவில் ஒன்று குடையப்பட்டுள்ளது. அதன் நீளம்

முப்பதடி ; அகலம் பன்னிரண்டு அடி ; உயரம் ஏழு அடி. அதில் ஐந்து வாயில்கள் இருக்கின் றன. அவற்றைக்கொண்டு ஊரார் அக் குகைக் கோவிலைப் பஞ்சபண்டவர் குகை என்று கூறி வருகின்றனர். அக்குகைக் கோவிலில், பிற குகைக் கோவில்களில் வைத்திருந்தாற்போலவே பல்லவ மன்னரோ பிறரோ தெய்வச் சிலைகள் வைத்திருந் திருக்கலாம் ; நாளடைவில் அவை அகற்றப் பட்டிருக்கலாம்.

அப்பாறைமீது நின்று பார்த்தால் திருவண்ணு மலையின் தோற்றத்தைக் காணலாம். மேலே கூறப்பெற்ற திருஞான சம்பந்தர் திரு அறையணி நல்லூர்ப்பெருமானை வணங்கி அடியார் குழாத் துடன் மலைமீது கோவிலை வலம் வந்தார். உடன் வந்த அன்பர்கள் அப்பொழுது அங்கிருந்த படியே அவருக்குத் திருவண்ணுமலையைச் சுட்டிக் காட்டினர். உடனே சம்பந்தர் அம்மலையைக் கண் ணுற்கண்டு, உள்ளம் உருகிக் கையால் தொழுது, திருவண்ணுமலையில் கோவில் கொண்டுள்ள சிவ பிரான்மீது ஒரு திருப்பதிகம் பாடினர் ; பின்பு தொண்டருடன் திருவண்ணுமலைக்குச் சென்றர். இது பெரியபுராணத்திற் கூறப்பட்டுள்ள செய்தி யாகும்.

## தேவனூர்

இது பெண்ணையாற்று வடகரையில் திருக் கோவலூர்க்கு வடமேற்கில் இரண்டு கல் தொலை வில் உள்ளது. இவ்வூரில் பண்டை மக்கள் அடக் கம் செய்யப்பெற்ற பிணக் குழிகள் நிலத்திற்கடி யில் காணப்படுகின்றன. அவற்றுள் சிலவற்றை

ஆராய்ச்சியாளர் அகழ்ந்து ஆராய்ந்தனர். பதி ளுன் கடி நீளம், எட்டடி அகலம், அரையடிக் கனம் உள்ள பாறைக்கல் ஒரு பிணக்குழிமீது மூடப்பட் டிருந்தது. பிணக்குழி சதுர அறைபோல் அமைந் தது; நாற்புறமும் கற்பலகைகளால் மூடப்பட்டது; ஒவ்வொரு குழியின் கிழக்குப் பக்கப் பாறையில் ஒரு சிறிய வட்டவடிவமான துளை காணப்படுகிறது. அக்குழிகள் உள்ள இடம் பெண்ணையாற்று வெள் ளத்திற்கு உட்பட்டிருந்தமையால், காலப்போக்கில் தரையில் ஆழப்பதிந்துவிட்டன என்று நிலநூல் வல்லார் கருதுகின்றனர். இப்பொழுது அவையுள்ள நிலங்களில் புஞ்சைப் பயிர்கள் வைக்கப்படுகின் றன. அந்த நிலங்கள் உழப்பட்டு வந்ததால் நாளடைவில் பல சவக்குழிகள் அழிந்துவிட்டன.

1875-இல் ஜே. எச். கார்ஸ்டின் * என்பவர் சில சவக்குழிகளை ஆராய்ந்தார். ஒவ்வொன்றிலும் எலும்புத் துண்டுகள், இரும்புத் துண்டுகள், கனத்த களிமண்ணால் செய்யப்பட்ட பிணப்பெட்டி என்பவை இருந்தன. அப்பிணப் பெட்டியின் நீளம் நான்கு அடி; அகலம் பதினைந்து அங் குலம்; உயரம் ஒன்பது அங்குலம். அதனைப் பதினைந்து மண் கால்கள் தாங்கியிருந்தன. புதை பொருள் ஆராய்ச்சியாளரான திரு ரீ† என்பவர் 1877-இல் இத்தகைய புதை பொருள்களைப் பல்லா வரத்தில் கண்டெடுத்தார். பிணப் பெட்டிகளின் அடியில் வரிசைக்கு மூன்று வீதம் ஐந்து வரிசை களைக் கொண்ட மண் கால்கள் இருத்தலைத் தேவ னூர்ப் புதை குழிகளில் இன்றும் காணலாம்.

---

* J. H. Garstin. † Mr. Rea.

ஆயின், அவை தாங்கியிருந்த பிணப்பெட்டிகள் கலப்பையில் அடிபட்டு அழிந்துவிட்டன. அப் புதை குழிகளில் மட்பாண்டங்களும் கிடைக்கின்றன. ஒரு புதைகுழி மேட்டு நிலத்தில் இருப்பதால் அழிக்கப்படாமல் இருக்கிறது. அதன் நீளம் பதின் மூன்றரை அடி; அகலம் ஒன்பது அடி எட்டு அங்குலம். அக்குழியின் ஒவ்வொரு பக்கத்தையும் தனிக் கற்பலகை மூடிக்கொண்டு இருக்கிறது. இவ்வாறே குழியின் அடியிலும் மேலும் தனித்தனிக் கற்பலகைகள் காணப்படுகின்றன.

### கொல்லூர்

இஃது ஒரு சிற்றூர். இது தேவனூர்க்குக் கிழக்கில் மூன்று கல் தொலைவில் உள்ளது. இங்கும் தேவனூரில் உள்ளது போலவே வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட புதை குழிகள் இருத்தலை ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்துள்ளனர். சிறியவையும் பெரியவையுமான மட்பாண்டங்கள் இப்புதை குழிகளிலும் கிடைத்துள்ளன. பெரிய கோலி உருண்டையின் அளவுள்ள மட்பாண்டம் முதல் பல காலன்* தண்ணீர் கொள்ளக்கூடிய பெரிய மட்பாண்டம் ஈருகப் பலவகை மட்பாண்டங்கள் அங்கு இருந்தன. அவை சிவப்பும் கறுப்பும் கலந்த நிறத்தவை; உட்புறத்திலும் வெளியிலும் வழுவழுப்புடையவை.

அவை இருந்த இடங்கள் புதைகுழிகள் என்பதை ஊரார் நம்புவதில்லை. அதனுல் அவர்கள் அவைபற்றித் தாம் கேட்டு வந்த செவி வழிச் செய்திகள் பலவற்றைக் கீழ்வருமாறு கூறுகின்ற

* Gallon.

மா. ரா. அரசு

னர் : (1) சாலிவாகன சகாப்தம் தொடங்கும்போது நெருப்பால் மக்களுக்கு அழிவு நேரும் என்பதை அறிந்து, அவ்வழிவிலிருந்து தப்புவதற்காக இக் குழிகளை அக்கால மக்கள் அமைத்தனர் என்று சிலர் கூறுகின்றனர். (2) அவை பண்டைக் காலத்தில் வாழ்ந்த குள்ள மனிதர்களின் இல்லங் கள் என்று வேறு சிலர் கூறுகின்றனர். (3) அவற் றில் பாண்டவர் வாழ்ந்தனர் என்று பின்னும் சிலர் பேசுகின்றனர். (4) பழங்காலத்தில் வாழ்ந்த வேட ரும் குறும்பரும் கொடிய விலங்குகளின் தாக்குதலி லிருந்து தம் மனைவியரையும் மக்களையும் காக்க அவற்றை அமைத்தனர் என்று மேலும் சிலர் மொழிகின்றனர். (5) 'பண்டைக்கால மக்களுள் மிக்க முதுமை அடைந்தவர் தம் இறப்புக்குமுன் ஓய்வாகத் தங்கியிருந்த இடங்கள் இவை—அதனுற் றுன் ஒவ்வொரு குழியிலும் அவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களும் பிணப்பெட்டியும் வைக்கப் பட்டன' என்று வேறு சிலர் கூறுகின்றனர். (6) இராமன் காலத்தில் வாழ்ந்த மனிதக் குரங்கு களின் இருப்பிடங்கள் அவை என்று மற்றும் சிலர் உரைக்கின்றனர். (7) அவை 'வாலிக்கிலியர்' என்ற ஒருவகை மக்களின் இல்லங்கள் என்று திருக் கோவலூர்த் தலபுராணம் செப்புகிறது.

## விழுப்புரம்

இது விழுப்புரம் வட்டத்தின் தலைநகர். இது பெண்ணை ஆற்றுக்கு வடக்கே ஏறக்குறைய ஆறு கல் தொலைவில் இருக்கிறது. இஃது இரயில் பாதை யால் சிறப்புற்றுள்ள நகரம். இது, திருச்சிராப் பள்ளியிலிருந்து மாயூரம் வழியாகச் சென்னை

வரும் நேர் இருப்புப்பாதையும், திருச்சிராப்பள்ளி யிலிருந்து அரியலூர் வழியாகச் சென்னை வரும் குறுக்கு இருப்புப்பாதையும் சந்திக்கின்ற சந்திப் பாகும். காட்டுப்பாடியிலிருந்து திருவண்ணுமலை, திருக்கோவலூர் வழியாக ஓர் இருப்புப் பாதையும் இச்சந்திப்புக்கு வருகிறது. இங்கிருந்து வளவனூர் வழியாகப் புதுச்சேரிக்குச் செல்லும் இருப்புப் பாதையும் அமைந்திருக்கிறது. இவற்ருல் இதன் சிறப்பினை நன்குணரலாம்.

ஒரு வட்டத்தின் தலைநகர் ஆதலால், வட்டத் திற்குரிய எல்லா அலுவலகங்களும் விழுப்புரத்தில் இருக்கின்றன. இந்நகரம் பல இருப்புப் பாதைகள் சந்திக்கும் இடத்தில் அமைந்திருப்பதால், வாணி கத் தலமாகவும் விளங்குகிறது; நிலக்கடலை வாணி கத்தில் புதுச்சேரியுடன் தொடர்பு கொண்டுள்ளது. இங்கு இப்பொழுது நிலக்கடலை எண்ணெய் தயா ரிக்கும் ஆலைகள் பல வேலை செய்கின்றன.

இவ்வூரில் ஒரு சிவன் கோவில் இருக்கிறது. அதன் சுவர்களில் விசயநகரப் பேரரசரான கிருஷ்ணதேவராயர் காலத்துக் (கி. பி. 1509—30) கல்வெட்டுக்கள் மூன்று இருக்கின்றன- அவற்றுள் திருவதிகை நாட்டுப் பொற்கொல்லர்க்குச் சில வரிகள் நீக்கப்பட்டன என்பதை உணர்த்தும் கல் வெட்டு ஒன்ருகும். கோவிற் கட்டடம், கட்டடக் கலையில் சிறப்புடையதன்று; ஆயினும் கி. பி. 18-ஆம் நூற்ருண்டில் நடைபெற்ற கருநாடகப் போர்களில் ஒரு சிறு கோட்டையாக விளங்கியது. கோவிலுக்குப் பின்புறமுள்ள பூந்தோட்டத்தில் பழைய கோட்டையின் மதிற்சுவர்களின் சிதைவு களை இன்றும் காணலாம். 1752-இல் செஞ்சிக்

கோட்டையைத் தாக்கப் புறப்பட்ட ஆங்கிலேய வீரர்கள் இக்கோட்டையைக் கைப்பற்றினர். பிரெஞ்சுக்காரர் இக்கோட்டையை மீளவும் கைப் பற்றி இதன் பாதுகாப்புக்களை அழித்தனர்.

இது பின்பு 1760-இல் மீண்டும் ஆங்கிலேய ரால் கைப்பற்றப்பட்டது. இது பிரெஞ்சுக்கார ருக்கு எவ்விதத்திலும் உதவலாகாது என்ற கருத் தால் இதனை ஆங்கிலேயர் 1803-ஆம் ஆண்டு அழித்துவிட்டனர். இக்கோட்டைச் சுவர்கள் மண்ணுல் ஆனவை. அவற்றின்மீது பீரங்கிகள் வைக்கப்பட்டிருந்தன.

## திரு ஆமாத்தூர்

இச் சிற்றூர் விழுப்புரத்திற்கு வடமேற்கே மூன்று கல் தொலைவில் இருக்கிறது. இது **பம்பை** என்னும் ஒரு சிற்ருற்றின் வடகரையில் உள்ளது. திருநாவுக்கரசர் பல்லாண்டுகள் சமணராக இருந்து, இறுதியில் சூலைநோயால் துன்புற்றுச் சைவராஞர். அங்ஙனம் அவர் சைவரான இடம் இதுவே என்ற செய்தி இங்குக் கூறப்படுகிறது.

இவ்வூரில் சிவன்கோவில் ஒன்று இருக்கின்றது. கோவிலில் வன்னிமரமும் கொன்றை மரமும் இருக் கின்றன. அம்மன் கோவிலுக்குப் பெரிய கோபுரம் இருக்கிறது. இக்கோவிலிலுள்ள இறைவனைத் திரு **ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர்** என்ற சமயகுரவர் மூவரும் பதிகங்கள் பாடித் துதித்துள்ளனர்.

கி. பி. 15-ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த **இரட்டைப் புலவர்கள் திரு ஆமாத்தூர்க் கலம் பகம்** என்னும் சிறு நூலைப் பாடியுள்ளனர்.

அம்மையை, "முத்தார் நகை அழகுடையாள்" என்று அருணகிரிநாதர் திருப்புகழில் பாராட்டியுள்ளார். புலவர் புராணம் பாடிய தண்டபாணி சுவாமிகள் என்னும் பெரியாரது சமாதி ஊரின் ஒரு புறத்தில் இருக்கிறது. இவ்வூருக்குத் தலபுராணம் உண்டு. இவ்வூர்ச் சிவன் கோவிலில் சோழர்காலக் கல்வெட்டுக்கள் மிகப் பலவாகக் காணப்படுகின்றன.

**வளவனூர்**

இவ்வூர் விழுப்புரத்திற்குக் கிழக்கே ஒரு கல் தொலைவில் உள்ளது. இது விழுப்புரத்திலிருந்து புதுச்சேரி செல்லும் இருப்புப்பாதை அருகில் அமைந்திருக்கிறது. இவ்வூர் ஏரி மிகப் பெரியது. இவ்வூர் வாணிகத்திற்குப் பெயர் பெற்றது. நிலக்கடலை வாணிகம் இங்கு மிகுதி. இங்கு நிலக்கடலையிலிருந்து எண்ணெய் எடுக்கும் ஆலைகள் உண்டு.

'வளவன்' என்பது சோழனைக் குறிக்கும் பெயர்களுள் ஒன்று. 'கிள்ளிவளவன்' என்பது சங்ககாலச் சோழமன்னன் பெயராகும். எனவே, பெண்ணை நாடு சோழர் ஆட்சியில் இருந்தபோது, இவ்வூர் இப்பெயர் பெற்றது போலும்!

# 7. பெண்ணை நாட்டு ஊர்கள்–II

## திருக்கோவலூர்

### தலைநகரம்

திருக்கோவலூர் பெண்ணையாற்றின் தென் கரையில் உள்ளது. இஃது ஒரு வட்டத்தின் தலை நகர். ஒரு வட்டத்திற்கு உரிய அரசாங்க அலுவலகங்கள் யாவும் இங்கு இருக்கின்றன. இதற்குரிய புகைவண்டி நிலையம் ஆற்றின் வடகரையில் இரண்டு கல் தொலைவில் அமைந்திருக்கிறது. புகை வண்டியில் வருவோர் ஆற்றைக் கடந்தே திருக் கோவலூரை அடையவேண்டும். ஆற்றைத் தாண்டிச் செல்லும் துன்பநிலை இருப்பதால்தான், இதற்கு அருகிலுள்ள கள்ளக்குறிச்சி, தியாக துர்க்கம் முதலிய ஊர்கள் திருக்கோவலூருடன் வாணிகம் செய்யாமல், பெண்ணையாற்றுக்குத் தெற்கே சேய்மையிலுள்ள வணிகத்தலமாகிய பண்ணுருட்டியுடன் வாணிகம் செய்கின்றன.

### இயற்கைக் காட்சி

இந்நகரம் இயற்கைக் காட்சிகளின் இடையில் அமைந்திருக்கிறது. பெண்ணையாற்றங்கரையில் உள்ள மிகவுயர்ந்த மரங்கள் இவ்வூரை அழகு செய் கின்றன. பெருமாள் கோவிலின் மிகவுயர்ந்த கோபுரம், அழிந்த கட்டடச் சிதைவுகள் முதலியன இந்நகரின் பழம் பெருமையைப் பறை அறை கின்றன. கடலூரிலிருந்து திருக்கோவலூர் நோக்கி வரும் பிரயாணி இங்குத்தான் பாறைகளையும் குன்றுகளையும் முதலில் கண்டு களிப்பான். காலை

யில் ஆற்று வழியே மேற்றிசையை நோக்கினல், கல்ராயன் மலைகளும், தென்மலைகளும் நீலக்கோடு போல் காட்சி அளிப்பதைக் கண்டு மகிழலாம்; திருவண்ணுமலையின் உயர்ந்த கொடுமுடியும், செஞ்சி மலைகளின் தொலைவுக் காட்சியும் விழிகளுக்கு விருந்தளிக்கும். சுருங்கக்கூறின், இங்கு இயற்கைத்தாய் இன்பமாகக் கொலு வீற்றிருக்கிருள் என்று கூறலாம்.

## மெய்ப்பொருள் நாயனர்

திருக்கோவலூர், முன்பு சொன்னபடி, சங்க காலம் முதலே மலையமான்களின் கோநகரமாக விளங்கி வந்திருக்கிறது. இவ்வூர் பல்லவர் காலத்தில் சமயச்சிறப்புப் பெற்று விளங்கியது. அதனல் சங்ககாலத்தில் வழங்கிய 'கோவலூர்' என்ற பெயருடன் 'திரு' என்னும் அடைமொழி சேர்க்கப்பெற்றுத் திருக்கோவலூர் என்று வழங்கப் பெறலாயிற்று.

பல்லவர் ஆட்சிக் காலத்தில் திருக்கோவலூரை ஆண்ட மலையமான்களுள் ஒருவர் சிறந்த சிவனடியாராக இருந்தார். அவர் பக்தியில் சிறந்திருந்தாற் போலவே வீரத்திலும் சிறந்து விளங்கினர். **முத்தநாதன்** என்ற சிற்றரசன் ஒருவன் அவரிடம் பகைமை கொண்டான்; பலமுறை அவரோடு போரிட்டான்; ஆனல் தோல்வி ஒன்றையே பயனுகக் கொண்டான். அவன் அவரைப் போரில் வெல்ல முடியாமையால், சூழ்ச்சியால் வெல்லக் கருதினன்.

அரசரான சிவனடியார் 'சிவவேடமே மெய்ப்பொருள்' என்று நம்பியவர். அதனல் அவர்

சிவவேடம் பூண்டவரை மிக்க அன்போடும் பக்தி யோடும் வரவேற்று உபசரிப்பது வழக்கம்; அவர் கள் விரும்பிக் கேட்பன எல்லாம் கொடுப்பதும் வழக்கம். சிவவேடம் பூண்டவர் எவர் வரினும்— எந்த நேரத்தில் வரினும்—தடை செய்யாது அவரை அரண்மனையுள் விடவேண்டும் என்று அரசர் தம் வாயிற் காவலர்க்கு ஆணையிட் டிருந்தார்.

முத்தநாதன் இந்த ஆணையை நன்கறிந் திருந்தான். அவன் சிறந்த சிவனடியார்போல வேடம் பூண்டான்; குத்துவாளை ஒரு துணியுள் மறைத்துச் சுருட்டி எடுத்துக்கொண்டு அரண் மனையுள் நுழைந்தான். ஒவ்வொரு வாயிற்படியி லும் இருந்த காவலர் மரியாதையோடு வழிவிட் டனர். அந்தப்புரக் காவலனை **தத்தன்** என் பவன், "சமயம் நோக்கித் தேவரீர் அருள் புரிய வேண்டும்; எமது அரசர் உறங்குகின்றார்," என்று பணிவுடன் பகர்ந்தான். உடனே முத்தநாதன், "நான் அரசர்க்கு உறுதிப்பொருளை அறிவுறுத்த வந்திருக்கிறேன். ஆதலால் நீ என் செலவைத் தடை செய்யாதே," என்று கூறி அறையினுட் புகுந்தான்.

அப்பொழுது அரசரும் அரசமாதேவியும் கட்டிலில் உறங்கிக்கொண்டிருந்தனர். வஞ்சக னை முத்தநாதன் அவர்கள் உறங்கிக்கொண் டிருந்த கட்டிலருகில் சென்றான். அரசமாதேவி அரவம் கேட்டு விழித்தாள்; சிவனடியாரைக் கண் டாள்; உடனே அரசரை எழுப்பினாள். அரசர் வந்தவர் சிவனடியார் என்பதை அறிந்து, தம் தலைமீது கையை உயர்த்தி வணங்கினார்; "அடிய

வரே, உங்கள் வரவால் எனது வாழ்வு சிறப்புற்றது. அடியேன் தங்கட்கு யாது செய்ய வேண்டும்?'' என்று பணிவோடு வணங்கிக் கேட்டார்.

கொடியவனுகிய முத்தநாதன், "உங்கள் நாயகராகிய சிவபெருமான் முன்பு சொல்லிய ஆகமநூல் என்னிடம் இருக்கிறது. இஃது இவ்வுலகில் வேறு எவரிடமும் இல்லை. இதனை உமக்கு இயம்புவதற்காகக் கொண்டு வந்திருக்கிறேன்,'' என்று சொன்னுன். அரசர் அளவற்ற மகிழ்ச்சி அடைந்து, "எனக்கு இதனினும் சிறந்த பேறு வேறு உண்டோ! இறைவன் அருளிச் செய்த ஒப்பற்ற அந்த ஆகமத்தை வாசித்து அருள வேண்டும்'', என்று கூறி வணங்கினுர். "நீரும் நானும் தனியே இருந்தால்தான் இந்த ஆகமத்தை வாசிக்கக் கூடும்,'' என்று பொய்வேடம் பூண்ட முத்தநாதன் மொழிந்தான். உடனே அரசர் அரசியை வேறு இடத்திற்கு அனுப்பினுர்; முத்தநாதனை ஓர் ஆசனத்தின்மீது இருக்கும்படி செய்தார்; அவனுக்கு எதிரில் தாம் தரையில் அமர்ந்தார்; அவனைக் கைகுவித்து வணங்கி, "இனி ஆகமத்தை அருள் செய்ய வேண்டும்,'' என்று வேண்டினுர்.

வஞ்சகக் கொடியனுன முத்தநாதன் புத்தகத்தை அவிழ்ப்பவன் போலத் தான் கொண்டு வந்திருந்த துணியை அவிழ்த்து, அரசர் வணங்கும் சமயம் பார்த்து, அதனுள் மறைத்து வைத்திருந்த குத்துவாளை எடுத்து, அரசர் உடலில் பாய்ச்சினுன். அப்பொழுதும் அரசர் அவனது சிவவேடத்தைப் பணிந்தபடியே இருந்தார்.

முத்தநாதன் தன்னைமீறி உள் நுழைந்த

போதே அவன்மீது ஐயம் கொண்ட தத்தன் என்ற வாயிற் காவலன், மிகுந்த கவலையோடு அறையுள் நடந்தவற்றை வெளியில் இருந்தபடியே கவனித்துக்கொண்டிருந்தான். முத்தநாதன் அரசரைக் குத்தியதைக் கண்டவுடன் பதை பதைத்த தத்தன் உள்ளே பாய்ந்தான்; தன் வாளால் அவனை வெட்ட முற்பட்டான். அவ்வமயம் குருதிப் பெருக்கினால் சோர்ந்து தரையில் விழ இருந்த அரசர், தமது கையை நீட்டி, "தத்தா, இவர் நம்மவர்," என்று கூறித் தடுத்தார்; பின்பு தரையில் வீழ்ந்தார். அவர் உடம்பிலிருந்து குருதி வெளிப்பட்டுக் கொண்டே இருந்தது. தத்தன் அரசரைப் பணிந்து, "நான் யாது செய்ய வேண்டும்?" என்று அரசரைக் கேட்டான். "இவர் எம்பெருமான் அடியவர். ஆதலால் இவர் திரும்பிச் செல்லும் வழியில் எவரும் இவரைத் தாக்காதபடி காவல் புரிந்து இவரைக் கொண்டுபோய்விடு," என்று ஆணையிட்டார்.

உடனே தத்தன் முத்தநாதனை வெளியில் அழைத்துச் சென்றான். செய்தி அறிந்த அரண்மனைக் காவலரும் பிறரும் முத்தநாதனைத் தாக்க வந்தனர். தத்தன் அரசரது ஆணையைத் தெரிவித்து, அவர்களை அகன்று செல்லுமாறு கூறினான். தத்தன், கொலைகாரனை முத்தநாதனை நகரத்திற்கு வெளியே அழைத்துச் சென்று, அவனைப் போகுமாறு விடுத்துப் பின்பு மீண்டு வந்தான்.

அரசர் அவன் திரும்பி வரும் வரையில், சிவனடியார்க்கு என்ன தீங்கு நேரிட்டதோ எனக் கவலை கொண்டிருந்தார். "அடியவர்க்கு எவ்

விதத் தீங்கும் நேராவண்ணம் அவரை அழைத்துச் சென்று நகருக்கு வெளியே விட்டு மீண்டேன்,'' என்று தத்தன் கூறி அரசரை வணங்கினன். அச் செய்தி கேட்ட அரசரது முகம் அன்று மலர்ந்த தாமரை மலர்போல் மலர்ச்சியுற்றது. அவர், "தத்தா, வலியிழந்து உயிர்விடும் நிலையில் உள்ள எனது ஆணைக்கு மதிப்பைத் தந்து நீ இன்று அடியவரைக் காத்த செயல் போற்றத்தக்கது. உனக்கு என் நன்றி உரியது,'' என்று மன மகிழ்ச்சியோடு கூறி அவனைப் பார்த்தார்.

பின்பு அரசர் தம்மைச் சுற்றிலும் கவலையோடு நின்றுகொண்டிருந்த இளவரசர், அமைச்சர், சுற்றத்தார் முதலியவரை நோக்கி, "திருநீற்றினிடம் வைத்த அன்பினைப் பாதுகாத்து உலகத்தில் செலுத்தி வருவீர்களாக,'' என்று கூறினர். பின்பு அவரது உடலிலிருந்து ஆருயிர் பிரிந்தது. 'சிவ வேடமே மெய்ப்பொருள்' என்று கொண்டு சிவனடியாரை வழிபட்ட காரணத்தால், அரசர் **மெய்ப் பொருள் நாயனர்** என்று சுந்தரரால் பாராட்டப் பெற்றர். இந்த அரசரது இவ்வரிய வரலாறு பெரிய புராணத்துள் இடம் பெற்றுள்ளது.

## முதலாழ்வார் மூவர்

பண்டைக் காலத்தில் **பொய்கை ஆழ்வார்** கோவலூரில் ஓர் இடைகழி*யில் தங்கினர். அப்போது தாம் தங்க இடம் வேண்டிப் **பூதத்தாழ்வார்** அங்கு வந்தார். "ஒருவர் இந்த இடைகழியில்

* வீட்டின் முதல் வாயிலுக்கும் இரண்டாம் வாயிலுக்கும் இடைப்பட்ட இடம் இடைகழி அல்லது இடைக்கட்டு எனப் பெயர் பெறும்.

கிடக்கலாம், இருவர் இருக்கலாம்,'' என்று பொய்கையாழ்வார் கூறினர். சிறிது நேரத்திற்குப் பின்பு அதே இடத்திற்குப் பேயாழ்வார் வந்தார். முன்பு இருந்த இருவரும், ''இங்கு ஒருவர் கிடக்கலாம், இருவர் இருக்கலாம், மூவர் நிற்கலாம்,'' என்றனராம். இப்படி மூவரும் நின்றுகொண்டிருந்தபோது, திருமால் பிராட்டியுடனும் சங்கு சக்கரங்களுடனும் அங்குப் புகுந்து அவர்களை நெருக்கினர்.

அப்போது மூவரும் தம்மை நெருக்கி நிற்பவர் யார் என்பதைத் தம் பேரறிவினால் ஆராய்ந்தனர்; அவர் திருமாலே என்பதை உணர்ந்தனர். உடனே அம்மூவருள் முதல்வராகிய பொய்கையாழ்வார்,

''நீயும் திருமகளும் நின்ருயால், குன்றெடுத்துப்
பாயும் பனிமறைத்த பண்பாளா—வாசல்
கடைகழியா வுள்புகாக் காமர்பூங் கோவல்
இடைகழியே பற்றி யினி''

என்று பாடி மகிழ்ந்தார்; பின்பு அப்பெருமான் மீது நூறு பாக்களைக் கொண்ட அந்தாதி நூல் ஒன்று பாடினர்.

பூதத்தாழ்வாரும் இறைவன் அடியார்க்கு அருளும் அருள்திறனை வியந்து அந்தாதி நூல் ஒன்று பாடி மகிழ்ந்தார்.

பேயாழ்வார்,

''திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன்—செருக்கிளரும்
பொன்னுழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
என்னுழி வண்ணன்பால் இன்று''

என்று பாடிப் பரவசம் அடைந்தார்; பின்பு அத்திருமால்மீது மனமுருகி அந்தாதி நூல் ஒன்றைப்

பாடினர். இச்செய்தி ஆழ்வார்கள் வரலாறு கூறும் வைணவ நூலிற் கூறப்பட்டுள்ளது.

**பெருமாள் கோவில்**

கோவலூர் சிறந்த வைணவத்தலம். அங்கு உள்ள பெருமாள் கோவில் மிகப் பெரியது. கோவிலின் சிறப்பு வாயிலுக்கு அருகில் ஒரு வைணவ மடம் இருக்கிறது. அம்மடத்துத் தலைவரே அங்குள்ள வைணவருக்குக் குரு ஆவர். பெண்ணையாற்றங்கரையில் அக்குருமார்களின் சமாதிகள் காட்சி அளிக்கின்றன.

பெருமாள் கோவில் நகரின் நடு நாயகமாக விளங்குகிறது. அதன் கோபுரங்கள் பல கல் தொலைவிலிருந்து பார்த்தாலும் தெரியக்கூடிய அளவில் வானளாவி இருக்கின்றன. கிழக்குத் திருச்சுற்றில் அமைந்துள்ள கோபுரமே மிக்க உயரமானது. இன்றைய கோவிற்பகுதிக்கு வெளியே முந்நூறு அடி நீளமுள்ள பாதை இருக்கின்றது. அதன் இரு பக்கங்களிலும் மண்டபங்கள் இருக்கின்றன. அம்மண்டபங்களில் இன்று பிராமணர் குடியிருக்கின்றனர். பாதையின் இருபுறங்களிலும் மிகப் பெரிய கற்றூண்கள் நிறுத்தப்பட்டுள்ளன. இவை அனைத்தையும் நோக்கும்போது, இந்தப் பகுதியும் பண்டைக் காலத்தில் கோவிலைச் சேர்ந்ததாக இருந்திருத்தல் வேண்டும் என்பது தெரிகிறது.

கோவில் கருவறையில் **திருவிக்கிரமப் பெருமாளின்** திருவுருவம் பூசிக்கப்பெறுகிறது. திருமால் குள்ளராக மகாபலி என்ற அசுர அரசனிடம் சென்று மூன்றடி மண்ணைத் தானமாகக் கேட்டார்.

அவன் கொடுக்க இசைந்ததும் திருமால் நெடுமாலாகித் தமது ஒரு திருவடியால் நிலவுலகத்தையும் மற்றொரு திருவடியால் வானுலகத்தையும் அளந்தார். மூன்றும் திருவடியை வைக்க இடமில்லாமை கண்ட மகாபலி, அதனைத் தன் தலைமீது வைக்கும் படி வேண்டினான். நெடுமால் தமது திருவடியை அவன் தலைமீது வைத்து, அவனைப் பாதலத்தில் அழுத்தினார் என்பது கதை. அந்த நெடுமாலின் தோற்றமே திருவிக்கிரம அவதாரம் என்பது.

இன்று காணப்பெறும் கோவில் விசயநகர அரசர் ஆட்சிக் காலத்தில் பெரிதாக அமைக்கப் பட்டது என்பது அதன் அமைப்பினால் தெரிகிறது. சிங்கத் தூண்களும் அநுமாரை உணர்த்தும் சிற்பங்களும் விசயநகரத்தில் உள்ளவாறே அமைந்துள்ளன. விசயநகர அழிவுகளில் காணப்படும் முறையிலேயே பெண்கள் கோலாட்டம் சிற்பவடிவில் காட்டப்பட்டுள்ளது.

அம்மன் திருமுன் உள்ள மண்டபம் அரிய வேலைப்பாடு கொண்டது. மண்டபத்தின் நீளம் ஐம்பத்தைந்து அடி ; அகலம் முப்பத்து ஒன்றரை அடி. அம் மண்டபம், தில்லையில் சிவகாமி அம்மன் கருவறையின் எதிரில் உள்ள மண்டபம் போன்ற அமைப்புடையது.


பெருமாள் கோவில் தூண்களில் பல சிற்பங்கள் உண்டு. ஆனால் அவற்றில் பல சிதைக்கப்பட்டுள்ளன. கி. பி. 1780-இல் ஹைதர்அலி பெண்ணை நாட்டின்மீது படையெடுத்து வந்தபொழுது தம் படையினருடன் இக்கோவிலில் தங்கி இருந்ததாகவும், அப்படையினரே அச்சிற்பங்களைச் சிதைத்ததாகவும் ஊரார் உரைக்கின்றனர்.

நாயன்மார்களாலும் ஆழ்வார்களாலும் பாடப் பெற்ற சைவ, வைணவக் கோவில்களின் கருவறைகள் பெரும்பாலும் செங்கற்களால் இயன்றவை. அவை பிற்காலச் சோழர் காலத்தில்தான் கற்கட்டடங்களாக மாற்றப்பெற்றன. முதலாம் இராசேந்திர சோழன் காலத்தில் மலையமான் நாட்டை **நரசிம்மவர்மன்** என்ற மலையமான் ஆண்டு வந்தான். அவன் இப் பெருமாள் கோவிலின் கருவறையைக் கற்கட்டடமாக மாற்றினுன் என்று அங்குள்ள கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. மேலும் அவன் திருச்சுற்றையும் கருவறைக்கு எதிரிலுள்ள மண்டபத்தையும் எடுப்பித்தான் என்றும் அக் கல்வெட்டுக் கூறுகின்றது. இக்கோவில் சுவர்களில் சோழ பாண்டியர் கல்வெட்டுக்கள் பலவாகக் காணப்படுகின்றன. கி. பி. 18-ஆம் நூற்ருண்டில் நடைபெற்ற போர்களில் இக்கோவில் ஒரு கோட்டையாகப் பயன்பட்டது.

பல்லவர் காலத்தில் வாழ்ந்த திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர், சுந்தரர் என்ற சைவசமய குரவர் பல சிவன் கோவில்களுக்குச் சென்று தோத்திரப் பாடல்களைப் பாடினர். அவ்வாறே ஆழ்வார்கள் பெருமாள் கோவில்கள் பலவற்றைத் தரிசித்துப் பாக்களைப் பாடியுள்ளனர். இங்ஙனம் பாடல் பெற்ற பெருமாள் கோவில்கள் நூற்றெட்டாகும். அவற்றுள் மிக்க சிறப்புடையவை சில. அவற்றுள் இப்பெருமாள் கோவிலும் ஒன்று. கி. பி. எட்டாம் நூற்ருண்டில் வாழ்ந்த **திருமங்கையாழ்வார்** இத்தலத்தை நேரிற்கண்டு மகிழ்ந்து பாராட்டியுள்ளார்.

## கோவலூர் வீரட்டம்

திருக்கோவலூர் மேலூர் என்றும் கீழூர் என்றும் இரண்டு பிரிவுகளாக அமைந்திருக்கிறது. மேலூரில் மேலே சொல்லப்பெற்ற பெருமாள் கோவில் இருக்கிறது. கீழூரில் ஒரு பெரிய சிவன் கோவில் இருக்கிறது. சிவபெருமான் கொடிய



திருக்கோவலூர் வீரட்டம்

அசுரர்களை எட்டு இடங்களில் கொன்ருர் என்று சைவ நூல்கள் கூறுகின்றன. அந்த இடங்கள் **வீரத் தலங்கள்** (**வீரட்டங்கள்**) எனப்படும். கீழூரில் சிவபெருமான் **அந்தகன்** என்ற அசுரனைக் கொன்ருர். அதனுல் அவ்விடம் வீரத்தலம் (வீரட்டம்) என்று பாராட்டப்படுகிறது.

இக்கோவில் சந்நிதி மேற்குப் பார்த்தது. மேலூரில் உள்ள பெருமாள் கோவில் வைணவருக்குச் சிறந்திருப்பது போலவே, கீழூரிலுள்ள வீரட்டேசுவரர் கோவில் சைவர்க்குச் சிறந்ததாகும். திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் இக்கோவிலை வழிபட்டுப் பதிகங்கள் பாடியுள்ள

னர். இதன் சுவர்களில் பல்லவர், சோழர், இராஷ்டிரகூட அரசனான மூன்றும் கிருஷ்ணன் முதலியவர் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இதன் கண் அரிய சிற்பவேலை காணப்படுகிறது.

## இடைச்சி குன்று

திருக்கோவலூருக்கு எதிரே பெண்ணையாற்றில் ஒரு சிறிய பாறை இருக்கின்றது. ஊரார் அதனை இடைச்சி குன்று என்று கூறுகின்றனர். ஆற்றில் இருந்து அச்சிறிய பாறையின்மீது ஏறச் செங்கற் படிக்கட்டுகள் அமைந்துள்ளன. அப் பாறைமீது ஒரு சிறிய கோவில் கட்டப் பட்டுள்ளது. அக்கோவிலில் சிவலிங்கம் வழிபடப் படுகிறது. கருவறையைச் சுற்றிலும் சிறிய திருச்சுற்று இருக்கிறது. அத்திருச்சுற்றிலிருந்து பெண்ணையாற்றையும் அதன் நாற்புறமும் சூழ்ந் துள்ள இயற்கைக் காட்சிகளையும் கண்குளிரக் கண்டு மகிழலாம்.

சங்க காலத்தில் பறம்பு மலை நாட்டை ஆண்ட **பாரியும் கபிலரும்** சிறந்த நண்பர்கள். கபிலர் அவ்வள்ளல் இறந்த பிறகு அவன் மகளிர் இருவரையும் சிற்றரசர் சிலரிடம் அழைத்துச் சென்று, அவர்களை மணந்துகொள்ளுமாறு வேண்டினர். ஒருவரும் அவர்களை மணக்க விரும்ப வில்லை. இறுதியில் கபிலர் அம்மகளிரைத் திருக் கோவலூர் மறையவரிடம் ஒப்புவித்தார் என்று **புறநானூறு** புகல்கின்றது.

திருக்கோவலூர் மலையமானுக்குப் பாரி மகளிருள் ஒருத்தி மணம் புரியப் பெற்றனள் என்று **தமிழ் நாவலர் சரிதை** செப்புகின்றது.

இப் பிற்செய்தியைத் திருக்கோவலூர் வீரட்டா னேசுவரர் கோவில் கல்வெட்டும் உறுதிப்படுத்து கிறது. அது மேலும், கபிலர் ஒரு பாறைமீது தீ வளர்த்து அதனில் வீழ்ந்து இறந்தார் என் றும் செப்புகின்றது.* "அந்தப் பாறையே இந்த இடைச்சி குன்று. இதன்மீதுள்ள கோவில் கபிலர் நினைவாக எழுப்பப் பெற்றதே," என்று திருக்கோவலூரில் உள்ள பழம் பெரும் புலவர்கள் புகல்கின்றனர்.

---

* "மொய்வைத் தியலு முத்தமிழ் நான்மைத்
தெய்வக் கவிதைச் செஞ்சொற் கபிலன்
மூரிவண் தடக்கைப் பாரிதன் அடைக்கலப்
பெண்ணை மலையர்க் குதவிப் பெண்ணை
அலைபுனல் அழுவத் தந்தரிட் சஞ்செல
மினல்புகும் விசும்பின் வீடுபே றெண்ணிக்
கனல்புகுங் கபிலக் கல்லது புனல்வளர்
பேரெட் டான வீரட் டானம்
அனைத்தினு மனுதியானது."

# 8. பெண்ணை நாட்டு ஊர்கள்–III

## திருவெண்ணெய் நல்லூர்

இது மலட்டாற்றின் தென்கரையில் அமைந்துள்ளது; திருக்கோவலூர்க்குத் தென்கிழக்கில் பதினான்கு கல் தொலைவில் இருப்பது. திருக்கோவலூர் அணைக்கட்டிலிருந்து வரும் கால்வாய்களின் நீரே இவ்வூரைச் சுற்றியுள்ள நிலத்தைப் பண்படுத்துகிறது. இங்கு நிலங்களின் விலை உயர்ந்துள்ளது. இங்கு நெல்லும் கரும்பும் மிகுதியாக விளைகின்றன. சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் **சர்க்கரை** செய்யும் ஆலை ஒன்று பாரி அண்டு கம்பெனியாரால் இங்கு நடத்தப்பட்டு வந்தது. அது 1904-ஆம் ஆண்டில் மூடப்பட்டு விட்டது.

திருவெண்ணெய் நல்லூருக்கு அருகில் **புத்தூர்** என்னும் சிற்றூர் ஒன்று உண்டு. அவ்வூரில் சடங்கவி சிவாசாரியார் என்ற மறையவர் ஒருவர் ஆரூரர் (சுந்தரர்) காலத்தில் வாழ்ந்தார். அவர் மகளைச் சுந்தரர்க்குத் திருமணம் செய்து கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டது. சுந்தரர் திருநாவலூரிலிருந்து தம் பெற்றோருடனும் உறவினருடனும் புத்தூருக்குச் சென்றார். குறித்த நேரத்தில் திருமணச் சடங்குகள் நடக்க இருந்தன.

அவ்வமயம் மிக்க முதுமை அடைந்த வேதியர் ஒருவர் கையில் ஒரு பனை ஓலையை எடுத்துக் கொண்டு திருமண மண்டபத்துள் நுழைந்தார். அம் முதியவர் அங்குக் குழுமியிருந்தவரை நோக்கி, “இங்கு அனைவரும் யான் கூறுவதைக்

கேளுங்கள்,'' என்ருர். அங்கு இருந்தவர்கள் "உங்கள் வரவு நல்வரவாகுக; நீங்கள் சொல்ல வேண்டுவனவற்றைச் சொல்லுங்கள்,'' என்றனர். அப்போது அம்மறையவர் சுந்தரரை நோக்கி, "உனக்கும் எனக்கும் ஒரு வழக்கு இருக்கின்றது. அதனைத் தீர்த்துவிட்டு நீ மணம் செய்துகொள்ள லாம்,'' என்ருர். உடனே சுந்தரர், "அப்படியா! அவ்வழக்கை முடித்த பிறகே நான் மணம் செய்து கொள்வேன். நீர் உமது வழக்கைக் கூறலாம்,'' என்ருர். பெரியவர், "மறையோர்களே! இந்த நாவலூரன் என் அடியவன்,'' என்ருர். உடனே அங்கிருந்தவர்கள், "இவர் என்ன நினைந்து பேசுகிருர்!'' என்று கூறி நகைத்தனர்; சுந்தரரும் நகைத்தனர்; சிலர் வெகுண்டனர்.

முதியவர் சுந்தரரைப் பார்த்து, "உன் தந்தைக்குத் தந்தை இந்த அடிமை ஓலையை எனக்கு எழுதிக்கொடுத்துள்ளான். நீ ஏன் சிரிக்கிருய்?'' என்ருர். சுந்தரர், "பிராமணர் வேருெரு பிராமணர்க்கு அடிமையாதல் நீ சொல்லத் தான் கேட்டோம். நீ பித்தனே?'' என்று கேட்டார். பெரியவர், "நான் பித்தன் ஆயினும் ஆகுக; பேயன் ஆயினும் ஆகுக. நீ என்னை என்ன சொன்னலும் நான் அவற்ருல் நாணேன். நீ என்னை அறிய வில்லையானல், இன்று இங்கு வித்தகம் பேசவேண்டா; பணி செய்யவேண்டும்,'' என்ருர்.

சுந்தரர், "இப்பெரியவரது வடிவம் என் உள்ளத்தைக் கவர்கிறது. ஆனல் அவரது பித்த வார்த்தை சினத்தை உண்டாக்குகிறது. என் பாட்டனர் எழுதிக் கொடுத்த அடிமை ஓலை

இவரிடம் இருப்பதாகக் கூறுகிருரே! அதன் உண்மையை அறிவேன்,'' என்று தம்முள் கூறிக் கொண்டார்; பின்பு முதியவரை நோக்கி, "ஓலையைக் காட்டுக,'' என்ருர். "நான் ஓலையை இந்த அவையில் காட்டுவேன். நீ அதன்படி தொண்டு செய்,'' என்று கிழவர் கூறினுர். அவ்வளவில் சுந்தரர் வெகுண்டு கிழவரைத் தொடர்ந்தார். முதியவர் வைத்திருந்த ஓலையை வலிய வாங்கி, "பிராமணர் அடிமை செய்தல் என்ன முறை?'' என்று கூறிக்கொண்டே அவ்வோலையைக் கிழித்து விட்டார்.

அவ்வளவில் அங்கு இருந்தோர், "உலகில் இதுவரையில் கேட்டறியாத அடிமை முறையைக் கூறுகின்ற பெரியவரே! நீர் எங்கு இருக்கிறீர்? செப்பும்,'' என்றனர். அப்பெரியார், "நான் இப்பொழுது இங்கு இருக்கிறேன். நான் எப்போதும் வெண்ணெய் நல்லூரில் இருப்பவன். இச் சுந்தரன் அறவழி தவறி வலிய வந்து என் கையில் இருந்த ஆவணத்தை வாங்கிக் கிழித்து எறிந்தான்,'' என்ருர். சுந்தரர் அக்கிழவரை நோக்கி, "இவன் பழைய மன்ருடி போலும்!'' என்று தம்முள் நினைந்தார்; அப்பொழுதும் அவரது உள்ளம் அக்கிழவர்பால் சென்றது. அவர் அவ் வேதியரைப் பார்த்து, "நீர் இருப்பது வெண்ணெய் நல்லூர் ஆயின், உமது தவருன இந்த வழக்கை அங்கு எடுத்துப் பேசும்,'' என்று கூறினுர்.

முதியவர், "நீ வெண்ணெய் நல்லூருக்கு வருவது நல்லது. அங்குள்ள தூய நான் மறையோர் முன்பு மூல ஓலையைக் காட்டி நீ

எனக்கு அடிமை என்பதைச் சாதிப்பேன்,'' என்று கூறித் தடி ஊன்றிக்கொண்டு வெண்ணெய் நல்லூரை நோக்கிச் சென்ருர்.

காந்தத்தைச் சேர்ந்த இரும்பைப் போலச் சுந்தரரும் அப்பெரியவரைப் பின்பற்றிச் சென்ருர். இருவரும் வெண்ணெய் நல்லூர் வேதியர் அவை முன் சென்றனர். பெரியவர் அங்கிருந்த மறைய வரை நோக்கி, "மூதறிஞர்களே, இந் நாவலூரன் எனக்கு அடிமை என்பதை உணர்த்தும் ஓலையைக் கிழித்துவிட்டான். இவனை விசாரித்து முறை வழங்குதல் வேண்டும்,'' என்ருர். "மறையவர் அடிமை ஆதல் இந்த உலகத்தில் இல்லை. நீர் சொல்வது வியப்பாக இருக்கிறது,'' என்று அவையோர் கூறினர்.

கிழவர், "இவன் கிழித்த ஓலை இவனது பாட்டன் எழுதிக்கொடுத்தது,'' என்று கூறினுர். அவையோர் சுந்தரரை நோக்கி, "உம் முன்ஞேர் சம்மதித்து எழுதிக்கொடுத்த ஓலையை நீர் வாங்கிக் கிழிப்பது வெற்றியாகுமா? உமது எண்ணம் என்ன?'' என்று கேட்டனர். சுந்தரர் அவர்களைப் பார்த்து, "பழுதறப் படித்தவர்களே, நான் ஆதிசைவன் என்பதை நீங்களே அறிவீர்கள். நான் இப்பிராமணனுக்கு அடிமை என்று இவன் சாதிப்பது மனத்திஞல் உணர முடியாத மாயை யாக இருக்கின்றது. என்ஞல் ஒன்றும் கூறமுடிய வில்லை,'' என்ருர்.

அவையோர் முதியவரை நோக்கி, "இந்நாவ லூரன் உமக்கு அடிமை என்பதை ஆட்சி, ஆவ ணம், அயலார் காட்சி என்னும் மூன்றில் ஒன் றைக் காட்டி மெய்ப்பித்தல் வேண்டும்,'' என்று


மொழிந்தனர். பெரியவர், "முன்னே இவன் கிழித்த ஓலை பழைய ஓலை; அதன் மூல ஓலை என்னிடம் இருக்கின்றது," என்று கூறி, மூல ஓலையைக் காட்டினார். அவையோர் ஏவற்படி கரணத்தான் அதனை வாங்கிக் கீழ்வருமாறு படித்தான் :

"மறையவர் வாழும் திருநாவலூரில் ஆதி சைவ மரபிலே பிறந்த ஆரூரன் என்ற நான் இதன் மூலம் யாவரும் அறிய எழுதி வைக்கும் செய்தியாவது: பெரிய முனிவராய் வெண்ணெய் நல்லூரிலே உள்ள பித்தனுக்கு நானும் என் மரபில் வருபவர்களும் வழிவழியாய்த் தொண்டு செய்து வருவோம் என்பதற்காக உடன்பட்டு இந்த ஓலையை மனமும் செய்கையும் இசைய எழுதிக் கொடுத்தேன். இதற்கு இது என் கையெழுத்து."

இதற்குச் சாட்சியாகக் கையெழுத்து இட்டவர்களின் கையெழுத்துக்களையும் அவையோர் பார்த்து ஏற்றுக்கொண்டனர்; பின்பு சுந்தரரை நோக்கி, "ஆரூரரே, இவ்வோலையை உங்கள் பாட்டனாரது எழுத்தமைந்த ஓலைதானா என்பதைச் சோதித்துப் பார்த்துத் தெரிந்துகொள்ளும்," என்றனர். அப்பொழுது முதியவர் அவையோரை நோக்கி, "இந்த ஆளோலை கண்டு தெளிதற்கு இவன் தகுதி அற்றவன். இவனது பாட்டன் எழுதிய வேறு கைச்சாத்துக் கிடைக்குமாயின், அதை வரவழைத்து, இந்த ஓலையின் கையெழுத்துடன் அதனை நீங்கள் ஒத்துப் பார்த்துத் தீர்ப்புக் கூறுங்கள்," என்றார்.

உடனே அவையோர் தங்கள் பாதுகாவலில் வைக்கப்பட்டிருந்த ஓலைகளை ஆராய்ந்து, ஆரூர

ரது பாட்டனூர் தாமே எழுதிய வேறு ஓலையை எடுத்தனர்; அதில் இருந்த எழுத்தை மூலஓலை எழுத்துடன் ஒத்துப்பார்த்தனர். "இரண்டு எழுத்துக்களும் ஒன்றுபோலவே இருக்கின்றன. இனி நாம் செய்யக்கூடுவது ஒன்றும் இல்லை. ஆரூரர் இப்பெரியவருக்கு ஏவல் செய்வதே முறையாகும்," என்று முடிவு கூறினர். ஆரூரர், "உங்கள் முடிவுக்கு யான் இசைகிறேன்," என்றூர்.



திருவெண்ணெய் நல்லூர்: சிவன் கோவில்

அவையோர் முதியவரைப் பார்த்து, "நீர் இருப்பது எங்கள் வெண்ணெய் நல்லூரே ஆயின், இவ்வூரில் உமது வீட்டைக் காட்டும்," என்றனர். பெரியவர் நகைத்து, "நீங்கள் இன்னும் என்னை அறியவில்லையாயின், என்னுடன் வாருங்கள்; எனது வீட்டைக் காட்டுவேன்," என்று கூறி, அவ்வூரில் உள்ள 'திருஅருள்துறை' என்ற திருக்கோவிலுள் புகுந்தார். அவருடன் சென்ற அவை

யோர் அவரைக் காணவில்லை ; ஆதலால் எல்லோ ரும் திகைத்து நின்றனர்.

அப்போது ஆரூரர் மட்டும் கூட்டத்திலிருந்து பிரிந்து, கோவிலுள் நுழைந்து அவரை அழைத் தார். அவ்வளவில் சிவபெருமான் உமை அம்மை யோடு இடப வாகனத்தில் அவருக்குக் காட்சி அளித்தார் ; " நீ முன்பு நமக்கு அடியவன் ; இம் மண்ணுலகில் உனது வாழ்க்கை துன்பப்பட லாகாது என்பதற்காகவே நாம் உன்னைத் தடுத்து ஆட்கொண்டோம் ; நீ மறுத்து நம்மிடம் வலிந்து பேசியதால் ' வன்றொண்டன் ' என்ற பெயர் பெற் ருய். நமக்கு அன்பினுலே சிறந்த அர்ச்சனை நம்மைத் துதிக்கும் பாடல்களே ஆகும். ஆதலால் நீ இவ்வுலகில் நம்மைத் துதித்துத் **தமிழ்ப் பாக் களைப்** பாடுவாயாக," என்று கூறியருளினுர்.

சுந்தரர் சிவபெருமானது பேரருளை வியந்து மகிழ்ச்சிக் கண்ணீர் விட்டார் ; " பெருமானே, உன் குணங்களாகிய பெருங்கடலிலே யான் எதை அறிந்து என்ன சொல்லிப் பாடவல்லேன் !" என்று கூறி நின்ருர். அப்பொழுது சிவபெரு மான், " நீ முன்பு மணப்பந்தலிலே என்னைப் **பித்தன்** என்று சொன்ருய். ஆதலால் என் பெயர் ' பித்தன் ' என்றே வைத்துப் பாடுவாயாக," என்ருர். அது கேட்டு உள்ளம் உருகிய சுந்தரர் மகிழ்ச்சிக் கண்ணீர் வழியப்

" பித்தா பிறை சூடீ "

என்று தொடங்கித் திருப்பதிகம் பாடினுர்.

இதுவே சுந்தரர் பாடிய முதல் திருப்பதிகம். இது திருவெண்ணெய் நல்லூரில் பாடப் பெற்ற தால், திருவெண்ணெய் நல்லூர் சைவவுலகில்

தனிச் சிறப்புப் பெற்றதாகக் கருதப்பெற்று வரு கிறது. சடங்கவி சிவாசாரியார் மகளது திரு மணம் நின்றுவிட்டது. அந்த அம்மை சிவபூசை யிலே தன் வாழ் நாட்களைக் கழித்தாள்.

புத்தூர், சுந்தரர் மணம் செய்துகொள்ள வந்த காரணத்தால், '**மணம் வந்த புத்தூர்**' எனப் பெயர் பெற்றது. இது கி. பி. 12-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த சேக்கிழார் கூறும் செய்தி. ஆயின், சிவபெருமான் சுந்தரரைத் தடுத்து ஆட் கொண்டதால் திருமணம் தவிர்ந்தது. எனவே, அவ்வூர் '**மணம் தவிர்ந்த புத்தூர்**' என்று இன் றும் வழங்கப்படுகிறது. இவ்வூர் பண்ணுருட்டிக்கு மேற்கில் திருவெண்ணெய் நல்லூருக்குப் போகும் வழியில் நான்கு கல் தொலைவில் உள்ளது. திரு வெண்ணெய் நல்லூருக்குக் கிழக்கே ஒன்றரைக் கல் தொலைவில் 'தடுத்தாட்கொண்ட ஊர்' என்ற ஒரு சிற்றூர் இருக்கிறது.

கோவிலில் 'வழக்கு வென்ற அம்பலம்' என ஒரு பெரிய மண்டபம், சுந்தரர் தடுத்தாட் கொள் ளப்பெற்ற வரலாற்றை நினைவூட்டிக்கொண்டு இருக்கிறது. பிற கோவில்களைப் போலவே இக் கோவிலும் கோட்டைக்குரிய பாதுகாப்புக்களைப் பிற்காலத்தில் பெற்றிருந்தது. ஆங்கிலேயர் கி. பி. 1760-இல் இக்கோட்டையைக் கைப்பற் றினர்.


சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினன்கனுள் தலைமணியாக விளங்கும் **சிவஞானபோதம்** என் பதை இயற்றிய **மெய்கண்டார்** என்ற பெரியார் கி. பி. 13-ஆம் நூற்றுண்டில் இவ்வூரில்தான் வாழ்ந் திருந்தார். அவரை நினைவூட்டும் கோவில் ஒன்று

ஊரின் நடுவே அமைந்திருக்கிறது. அக்கோவில் திருஆவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்தது. அங்கு ஆண்டுதோறும் மெய்கண்டார் குருபூசை சிறப்பாக நடைபெற்று வருகிறது.

கம்பரை ஆதரித்த **சடையப்ப வள்ளல்** இவ்வூரில் பிறந்து வளர்ந்தவர் என்று செவிவழிச் செய்தி கூறுகிறது.

**திருநாவலூர்**

இது பண்ணுருட்டிக்கு மேற்கே கள்ளக் குறிச்சி செல்லும் பாதையில் பத்துக்கல் தொலைவில் அமைந்துள்ள சிற்றூர். இது சுந்தரமூர்த்தி சுவாமிகள் பிறந்த இடம். இவ்வூர் பல்லவர் காலத்



திருநாவலூர் : சிவன் கோவில்

தில் திருமுனைப்பாடி நாட்டின் தலைநகராய் இருந்தது என்பது முன்னரே கூறப்பட்டதன்றோ? சுந்தரர் இந்த ஊரில் பிறந்ததால்தான் **'நாவலூரன்'** என்று பெயர் பெற்றார். அவர் கோவிலுக்கு எதிரில் இருந்த வீட்டில் பிறந்தார் என்று

ஊரார் இன்றும் உரைக்கின்றனர். இங்கு ஆண்டு தோறும் சுந்தரர் பிறந்த நாள் விழாவும் அவர் திருக்கயிலை சென்ற நாள் விழாவும் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றன.

இவ்வூர்க்குத் தெற்கே அரைக்கல் தொலைவில் **கெடிலம்** என்னும் ஆறு பாய்கிறது. இங்குள்ள சிவன் கோவில் சுந்தரர் பாடல் பெற்றது. கோவி லில் நாவல் மரம் இருக்கின்றது. அதனால் இவ்வூர் **நாவலூர்** என்று பெயர் பெற்றது. சுந்தரர் பிறந்த சிறப்புடைய ஊரானதாலும், சமயச் சிறப்புடைய ஊரானதாலும், இது ' திரு ' என்னும் அடைமொழி பெற்றுத் ' திருநாவலூர் ' என்று அழைக்கப்பட லாயிற்று.

திருநாவலூர்ச் சிவன் கோவிலில் சுந்தரர் தந்தையாரான சடையனார் என்பவர் அர்ச்சகராக இருந்தார். அவர் திருவாரூர்ச் சிவன் கோவிலில் தலைமை அர்ச்சகராயிருந்த ஞான சிவாசாரியர் என்பவர் மகளாரான இசை ஞானியார் என்ற அம்மையாரை மணந்துகொண்டார். நாவலூரர் என்று அழைக்கப்பெற்ற சுந்தரர் இவ்விருவருக் கும் பிறந்தவர் ஆவர்.

திருநாவலூரை ஆண்ட **நரசிங்க முனையரை யர்** சுந்தரரைத் தம் பிள்ளைபோல் அரசச் சிறப் புடன் வளர்த்து வந்தார். அதனால் சுந்தரர் ' நாவலூர் மன்னன் ' என்றும் அழைக்கப்பட்டார்.

நரசிங்க முனையரையர் சிறந்த போர் வீரர்; அருள் மிகுந்த அரசர்; மிகச் சிறந்த சிவபக்தர்; திரு ஆதிரை நாளில் சிவனுக்குச் சிறந்த முறை யில் பூசனை செய்தார்; ஒவ்வொரு சிவனடியார்க் கும் உணவும் நூறு பொன்னும் வழங்கினர். அவர்

இறக்கும் வரையில் இத்திருத் தொண்டைச் செய்து வந்தார் என்று பெரிய புராணம் பேசுகின்றது.

திருநாவலூர்ச் சிவன் கோவிலுள் மற்றொரு சிறு கோவில் இருக்கிறது. முதற் பராந்தக சோழன் மகனை **இராசாதித்தன்** அச்சிறு கோவிலைக் கி. பி. 10-ஆம் நூற்றுண்டில் எடுப்பித்தான் என்று அங்குள்ள கல்வெட்டுக் கூறுகிறது. இச்செய்தி முன்னரும் கூறப்பட்டுள்ளது. இராசாதித்தன் எடுப்பித்த கோவிலுள் சுந்தரர் திருவுருவமும் அவர் மனைவியரான பரவையார், சங்கிலியார் என்பவர் திருவுருவங்களும் பூசிக்கப் பெறுகின்றன.

## சேந்தமங்கலம்

இவ்வூர் பண்ணுருட்டிக்குத் தென்மேற்கில் பன்னிரண்டு கல் தொலைவில் இருக்கிறது; திருநாவலூருக்குத் தென்மேற்கே நாலு கல் தொலைவில் உள்ளது. இவ்வூரைச் சுற்றிலும் பழைய மண் கோட்டையின் சுவர்ப் பகுதிகள் ஆங்காங்குக் காணப்படுகின்றன. கோட்டையைச் சுற்றி அகழி இன்றும் இருக்கின்றது. ஊரின் நடுவில் பெரிய சிவன் கோவில் இருக்கின்றது. அதன் சில பகுதிகள் இடிந்தும் பழுதுபட்டும் இருக்கின்றன. பல சிற்பங்கள் அழிக்கப்பட்டுள்ளன. கோவிற் சுவர்களில் பல்லவர், பாண்டியர், கிருஷ்ணதேவராயர் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவ்வூர் கி. பி. 13-ஆம் நூற்றுண்டில் பெருவீரனாக விளங்கிய **கோப்பெருஞ்சிங்கன்** என்பவனது தலைநகரமாகும். அவன் தன் பேரரசனாகிய மூன்றும் இராசராசனைச் சிறைபடுத்தி இக்கோட்டையுள் வைத்திருந்த பெருவீரன்.

**திருத்துறையூர்**

இது மலட்டாற்றின் வடகரையில் அமைந் திருக்கிறது. திருவெண்ணெய்நல்லூர் மலட்டாற் றின் தென்கரையில் இருக்கிறது. ஆயின், சுந்த ரர், திருவெண்ணெய்நல்லூர் பெண்ணையாற்றின் தென்கரையில் இருப்பதாகவும், திருத்துறையூர் பெண்ணையின் வடகரையில் இருப்பதாகவும் பாடி யுள்ளார். இன்று பெண்ணை வேருகவும் மலட்டாறு பெண்ணையாற்றின் கிளையாருகவும் இருக்கின்றன. சுந்தரர் காலத்தில் இன்றைய மலட்டாறு பெண்ணை யாறு எனப் பெயர் பெற்றது போலும்!

சுந்தரர் இறைவனுல் தடுத்து ஆட்கொள்ளப் பட்ட பிறகு திருவெண்ணெய் நல்லூரில் பதிகம் பாடித் திருநாவலூரை அடைந்தார்; பின்பு திருத் துறையூர் சென்று, அங்குக் கோவில் கொண்டுள்ள சிவபெருமானைத் தமக்குத் தவநெறி அருள் செய்ய வேண்டும் என்று ஒரு திருப்பதிகம் பாடினர்.

**திருத்துறையூர்** ஒரு சிற்றூர். சிவஞான சித்தியார் என்னும் சைவ சித்தாந்த சாத்திரத் தைச் செய்த அருள் நந்தி சிவசாரியார் இவ்வூரில் பிறந்து வாழ்ந்து முத்தி பெற்றவர். இவருக்கும் சுந்தரரைத் தடுத்தாட்கொண்ட இறைவனுக்கும் தனித்தனிச் சிறு கோவில்கள் சிவன் கோவிலுக்கு வெளியே திருக்குளத்திற்கு அருகில் உள.

“ விண்ணுர்ந்தன மேகங்கள் நின்று பொழிய
மண்ணுரக் கொணர்ந்தெற்றியோர் பெண்ணை வடபால்
பண்ணுர்மொழிப் பாவையர் ஆடுந் துறையூர்
அண்ணுவுனை வேண்டிக்கொள் வேன்தவ நெறியே ”.

என்பது சுந்தரர் திருப்பாடல்.


# 9. பெண்ணை நாட்டு ஊர்கள் – IV

**திருவதிகை**

இவ்வூர் பண்ணுருட்டிக்கு ஒரு கல் தொலைவில் இருக்கிறது; கடலூரிலிருந்து பண்ணுருட்டி செல்லும் பாதையில் பதினொன்கு கல் தொலைவில் இருக்கிறது. இது கெடில ஆற்றின் வடகரையில் அமைந்திருக்கிறது. தகடூரை ஆண்ட அதிகைமான்கள் ஆட்சிக்குட்பட்ட ஊராக இஃது இருந்ததால், 'அதிகை' எனப் பெயர் பெற்றதாகலாம் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். கி. பி. 5-ஆம் நூற்றுண்டில் இவ்வூர் பாணராஷ்டிரத்தைச் சேர்ந்திருந்தது என்று நூல்கள் கூறுகின்றன. எனவே, அக்காலத்தில் இது பாணர்கள் ஆட்சியில் இருந்திருக்கலாம். கி. பி. 7-ஆம் நூற்றுண்டில் இவ்வூர் பல்லவ ஆட்சியில் இருந்தது.

திருவதிகை நிலங்களில் ஆங்காங்குச் **சிவலிங்கங்கள்** காணப்படுகின்றன. கோவில் திருச்சுற்றிலேயே இருபத்தொரு சிவலிங்கங்கள் இருக்கின்றன. **சிவன்கோவிலின்** பெரிய கோபுரவாயில் நிலைகளில், சிதம்பரம் மேலைக்கோபுர வாயில் நிலைகளில் செதுக்கப்பட்டுள்ளவை போன்ற **நடனச் சிற்பங்கள்** காணப்படுகின்றன. கருவறை தேர் போலப் பதுமைகளால் அலங்கரிக்கப் பெற்றும் நிழல் நிலத்தில் சாயாதபடியும் கட்டப்பட்டுள்ளது. சிவபெருமான் திருக்கோவலூரில் அந்தகாசுரனைக் கொன்றதால் அவ்வூர் '**வீரட்டானம்**' எனப்பட்டது. அதுபோலவே சிவபெருமான் முப்புரங்

களை எரித்த தலமாதலால், திருவதிகையும் வீரத் தலங்களில் (வீரட்டங்களில்) ஒன்ருயிற்று.



அதிகை வீரட்டம்

**அப்பர் சைவரான வரலாறு**

பண்ணுருட்டிக்கும் திருநாவலூருக்கும் இடையில் **திருஆமூர்** என்ற சிற்றூர் இருக்கிறது. கி. பி. ஆரும் நூற்ருண்டின் இறுதியில் அவ்வூரில் வேளாளர் குடியில் **மருள்நீக்கியார்** (திருநாவுக்கரசர்) என்பவர் பிறந்தார். அவர் தமக்கையார் **திலகவதியார்** என்புவர். திலகவதியாருக்குக் கலிப்பகையார் என்ற வீரரைத் திருமணம் செய்து முடிக்க ஏற்பாடு ஆயிற்று. ஆயின், திருமண நாளுக்குமுன் அவ்வீரர் போரில் இறந்துபட்டார். திலகவதியார் திருஆமூரை விட்டுத் திருவதிகையை

அடைந்தார் ; அங்கிருந்த மடம் ஒன்றில் தங்கிச் சிவத்தொண்டு செய்துகொண்டு இருந்தார்.

திருநாவுக்கரசர் சமண சமயத்தைத் தழுவினுர் ; சமண நூல்களைப் பழுதறப் படித்தார் ; ‘ தருமசேனர் ’ என்ற பட்டத்தைப் பெற்ருர் ; பல ஆண்டுகள் சமண சமயத்தில் சிறப்புற்று விளங்கினுர். ஒருமுறை அவருக்குச் சூலைநோய் என்னும் கொடிய வயிற்றுவலி உண்டானது. சமணர்களுடைய மந்திர தந்திரங்களால் அவ்வயிற்றுவலி போகவில்லை.. இறுதியில் திருநாவுக்கரசர் திருவதிகையில் இருந்த தம் தமக்கையாரிடம்* செய்தி சொல்லியனுப்பினுர் ; பின்பு அவ்ரே சமணர்க்குத் தெரியாமல் தம் சமண வேடத்தைக் களைந்து திருவதிகையை அடைந்தார் ; தம் தமக்கையார் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினுர். அம்மையார் இறைவனைத் தொழுது திருநீற்றை அளித்தார். அத்திருநீற்றை அணிந்துகொண்டு தமக்கையாருடன் கோவிலுட் சென்று, திருவதிகைப் பெருமானைப் பணிந்து,

“ கூற்ருயின வாறு விலக்ககிலீர் ”

என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடி முடித்தார். இதுவே திருநாவுக்கரசர் பாடிய முதல் திருப்பதிகமாகும். உடனே சூலைநோய் நீங்கினது.

இங்ஙனம் திருநாவுக்கரசர் சைவராஞுர் என்ற செய்தியைக் கேட்ட சமண முனிவர்கள் பல்லவப் பேரரசஞுன முதலாம் மகேந்திரவர்மனிடம் முறையிட்டனர். அவனும் சமணன் ஆதலால் அவர்கள்

---

* கோவிலுக்கு எதிரில் திலகவதியார் திருமடம் அழிந்துபட்ட நிலையில் இருக்கிறது.

விருப்பப்படி திருநாவுக்கரசரைக் கொல்லத் துணிந்தான். அவனது ஏவலால் அவருக்கு விடம் கலந்த உணவு தரப்பட்டது; அவர் நீற்றறையில் தள்ளப் பெற்றார்; யானையின் காலால் இடறப்பெற்றார். இவற்றால் அவர் இறவாமை கண்ட மன்னன், அவரைக் கல்லோடு கட்டிக் கடலில் எறியச் செய்தான். திருநாவுக்கரசர் அச்சோதனையிலிருந்து பிழைத்துக் கரையேறினார்.

அப்பொழுதுதான் அரசனது மனம் மாறுதல் அடைந்தது. அவனும் சமண சமயத்தைத் துறந்தான். திருப்பாதிரிப்புலியூரில் இருந்த சமணப் பள்ளிகளையும் பாழிகளையும் இடித்தான்; அவற்றின் சிதைவுகளைக் கொண்டு திருவதிகையில் ஒரு சிவன் கோவிலைக் கட்டினான். அவனுக்குக் **குண பரன்** என்ற பெயரும் உண்டு. அவன் கட்டிய கோவில் 'குணபர ஈசுவரம்' என்று பெயர் பெற்றது. அக்கோவில் அழிந்துபட்ட நிலையில் இன்றும் திருவதிகையில் இருக்கின்றது.

இவ்வாறு அரசன் சைவனாக மாறியதாலும் திருநாவுக்கரசரது சமயப் பிரசாரத்தாலும் தொண்டை நாட்டில் சைவ சமயம் தழைத்தோங்கி வளரலாயிற்று.

திருநாவுக்கரசர் திருவதிகையில் சைவராக மாறினார்; அங்குள்ள கோவிலில் உழவாரத் தொண்டு செய்தார். திருநாவுக்கரசர் காலத்திலேயே வாழ்ந்த **திருஞானசம்பந்தர்** திருவதிகையைத் தரிசித்துத் திருப்பதிகம் பாடினார். சுந்தரர், திருநாவுக்கரசர் உழவாரத் திருப்பணி செய்ததை நினைந்து, திருவதிகையை மிதிக்கவும் அஞ்சி, அண்மையில் இருந்த சித்தவட மடத்தில் தங்கினார்

என்று பெரிய புராணம் பேசுகின்றது. இத்தகைய சிறப்புக்களால் திருவதிகை சிறந்த சிவத்தலமாகச் சைவர்களால் கருதப்பட்டது. அதனால் பல்லவ அரசர்கள் திருவதிகைச் சிவன் கோவிலில் பல திருப்பணிகள் செய்தனர். அவர்களுக்குப் பின்பு பேரரசர்களாக விளங்கிய சோழர்கள் பல திருப் பணிகள் செய்தனர். முதற் குலோத்துங்க சோழ னது சேனைத் தலைவனான காலிங்கராயன் என்ப வன் திருவதிகைக் கோவிலில் திருநாவுக்கரசருக் குத் தனிக்கோவில் கட்டினான்; வேறு பல திருப் பணிகளும் செய்தான்.

சோழர்க்குப் பின் ஏற்பட்ட விசயநகர ஆட்சிக் காலத்தில் திருவதிகை, திருவதிகை நாட்டிற்குத் தலைநகராய் விளங்கியது. பிற கோவில்களைப் போலவே திருவதிகைக் கோவிலும் கோட்டைக் குரிய பாதுகாப்புக்களைப் பெற்றிருந்தது. கி. பி. 18-ஆம் நூற்றாண்டில் திருவதிகை ஆர்க்காட்டு நவாபின் ஆட்சிக்கு உட்பட்டது. 1750-இல் டியூப்ளே அக்கோவிலைக் கைப்பற்றிக்கொண்டார்; சுற்றுப் பக்கத்திலுள்ள ஊர்களில் வரிவசூல் செய் தார்; அக்கோவிலில் ஐம்பது பிரெஞ்சு வீரரையும் நூறு சிப்பாய்களையும் வைத்திருந்தார். ஆர்க் காட்டு நவாபான முகமதுஅலி ஆங்கிலேயருடன் திருவதிகையைக் கைப்பற்ற வந்தார். திருவதி கைக்கு வடக்கே எட்டுக் கல் தொலைவில் **பெண்ணை யாற்றின்** வடகரையில் பிரெஞ்சுப் படைகள் பாது காப்பு மிகுந்த ஓரிடத்தில் தங்கியிருந்தன. டியூப்ளே முகமது அலியைப் போரில் தோற்கடித் தார். நவாபு 1752-இல் திருவதிகைக் கோவிலை எளிதில் கைப்பற்றிக்கொண்டார். அடுத்த ஆண்

டில் பிரெஞ்சுக்காரரும் மகாராட்டிரரும் அக் கோவிலைத் தாக்கினர். அவர்களது படைபலம் மிக்கிருந்ததால், கோவில் அவர்கள் கைப்பட்டது. 1760-இல் அக்கோவில் மீண்டும் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டது.

இவ்வாறு 18-ஆம் நூற்றுண்டுப் போர்களினுல் அக்கோவில் தன் சிறப்பை இழந்தது ; பல ஆண்டு கள் கவனிப்பாரற்ற நிலையில் கிடந்தது ; இதனைச் சுற்றிலும் காடுகளும் புதர்களும் வளர்ந்துவிட்டன. இறுதியில் சைவ நன்மக்களால் புதுப்பிக்கப்பட்டு, இன்று அழகு ஒளிரக் காட்சியளிக்கின்றது.

இக்கோவிலில் 96 கல்வெட்டுக்கள் இருக்கின் றன. கோவிலைச் சுற்றிலும் நான்கு மாடவீதிகள் இருந்தன என்பது கல்வெட்டுக்களால் தெரிகிறது. கி. பி. 1536-இல் **உத்தண்ட வேலாயுத பாரதி** என்பவர் திருவதிகைச் சிவபெருமான்மீது **திரு வதிகைக் கலம்பகம்** என்னும் நூலைப் பாடினுர். அவருக்குக் கோட்டையில் (கோவிலைச் சுற்றிலும் அக்காலத்தில் கோட்டை இருந்தது) பிராமணர் தெருவில் ஒரு மனையும், இரண்டு மா நன்செய் நிலமும், ஒரு மா புன்செய் நிலமும் பரிசாக வழங் கப்பட்டன என்று ஒரு கல்வெட்டுக் கூறுகின்றது.

சிவன் கோவிலுக்குப் பின்னுள்ள நிலப்பகுதி **வடகயிலாசம்** என்று கிராமக் கணக்கு ஏடுகளில் இன்றும் குறிக்கப்படுகின்றது. ஆகவே, வீடுகள் இல்லாமல் இருக்கும் அந்தப் பகுதி முன்பு திருவதி கையின் ஒரு பகுதியாக இருந்திருத்தல் வேண்டும் என்பது தெரிகிறது.

திருவதிகை சோழர் காலத்திலும், பிற்காலத் திலும் திருநாவுக்கரசர் பிறந்த ஆமூர் நாட்டைச்

சேர்ந்த ஒரு நகரமாகவே இருந்து வந்தது என்பது, "ஜயங்கொண்ட சோழ மண்டலத்துத் திருமுனைப்பாடி கீழாமூர் நாட்டு அதிராசமங்கல்யபுரம்" என்னும் கல்வெட்டுக் குறிப்பால் அறியக் கிடக்கிறது.

**பண்ணுருட்டி**

இவ்வூர் திருவதிகைக்கு ஒரு கல் தொலைவில் உள்ளது. இது கடலூரில் இருந்து விழுப்புரம் செல்லும் இரயில் பாதையில் அமைந்திருக்கிறது; திருச்சிராப்பள்ளிக்குச் செல்லும் பெருவழியில் உள்ளது; மன்னார்குடி, கடலூர், திருக்கோவலூர் இவற்றுக்குச் செல்லும் பாதைகளின் சந்திப்பில் அமைந்துள்ளது. இந்நகரத்தில் மிகப்பெரிய அளவில் வாணிகம் நடைபெறுகிறது. இது கள்ளக்குறிச்சி, திருக்கோவலூர், கடலூர் வட்டங்களில் விளையும் நிலக்கடலையில் பெரும்பகுதியைக் கடலூருக்கு அல்லது புதுச்சேரிக்கு ஏற்றுமதிக்காக அனுப்புகிறது.

இவ்வூரில் நிலக்கடலை எண்ணெய் மிகுதியாகத் தயாரிக்கப்படுகிறது. அந்த எண்ணெய் இரங்கோனுக்கும் நிலக்கடலைப் பிண்ணாக்கு மலேயாவுக்கும் அனுப்பப்படுகின்றன. கள்ளக்குறிச்சி வட்டத்தில் கரும்பிலிருந்து செய்யப்படும் வெல்லத்தின் பெரும் பகுதி பண்ணுருட்டியில் விலையாகிறது. கடலூர் வட்டத்தில் விளையும் முந்திரியும் கொய்யாப்பழமும் இங்கு நன்கு விலையாகின்றன. பண்ணுருட்டிக்கு அண்மையில் புதுப்பேட்டை, அங்கிசெட்டிபாளையம் என்னும் சிற்றூர்களில், தென் ஆர்க்காடு மாவட்டத்துப் பெண்கள் உடுத்துக்கொள்ளும்

சிவப்புச் சேலைகள் நெய்யப்பெறுகின்றன. இவையும் பண்ணுருட்டியில் விலையாகின்றன.

பண்ணுருட்டியில் கிடைக்கும் களிமண் தரத்தில் மிகவுயர்ந்தது. அதனால் இங்குச் செய்யப்படும் செங்கற்கள் இம்மாவட்டத்திலேயே முதலிடத்தைப் பெறுகின்றன. தென் இந்திய இரயில்வே அதிகாரிகள் தங்கள் கட்டடங்களுக்காகும் செங்கற்களைத் தயாரிக்கப் பலரை இங்கு அமர்த்தியுள்ளனர்.

கெடில ஆற்றின் தென் கரைக்கு அருகில் பதுமைகள் செய்யத்தக்க மென்மையான—நயமான களிமண் கிடைக்கிறது. இவ்வூர் வேட்கோவர் இம்மண்ணைக் கொண்டு அழகிய பதுமைகள் செய்கின்றனர். பண்ணுருட்டிப் பதுமைகளும் விளையாட்டுப் பொருள்களும் தமிழ்நாட்டில் பெயர் பெற்றவை. இவை காய்ச்சப் பெற்றுப் பல நிறங்கள் பூசப்பெற்றதும், கண்ணைக் கவரும் பேரழகு பெற்று விளங்குகின்றன.

## நெல்லிக்குப்பம்

இது கடலூரிலிருந்து செல்லும் இருப்புப் பாதை அருகில் கடலூருக்கு ஏழரைக்கல் மேற்கில் அமைந்துள்ளது. இவ்வூர் மக்கள் தொகையில் நான்கில் ஒரு பகுதியினர் முஸ்லிம்கள்; வெற்றிலைக் கொடிக்கால்களை வைத்து, வெற்றிலை வாணிகம் செய்கின்றனர். பாரி அண்டு கம்பெனியார் வைத்து நடத்தும் சர்க்கரை தயாரிக்கும் ஆலையே இந்நகரின் சிறப்புக்குச் சிறந்த காரணம். இந்த ஆலையில் கரும்பைக்கொண்டு சர்க்கரை தயாரிக்கப்படுகிறது. திருநெல்வேலியிலிருந்து மிகுதியாக

வரவழைக்கப்படும் பனஞ்சாற்றிலிருந்தும் சர்க்கரை தயாரிக்கப்படுகிறது.


இங்குத் தயாரிக்கப்படும் சர்க்கரை சென்னை மாநிலத்தில் மட்டும் அன்றி, இந்திய நாட்டின் பிற பகுதிகளிலும் நன்கு விலையாகிறது. பாரி அண்டு கம்பெனியார் இம்மாவட்டத்தில் கரும்பைப் பயிராக்குவோர்க்குப் பல சமயங்களில் முன் பணம் கொடுத்து உதவுகின்றனர். இதனால் அப்பயிரிடுவோர் தங்கள் நிலத்தில் விளைந்த கரும்பை ஆலைக்குக் கொண்டு செல்கின்றனர். அதில் ஒரு பகுதி உடனே பிழியப் பெறுகிறது; பிழியப் பெற்ற சாறு அளக்கப் பெறுகிறது; பிறகு அது பாகாகக் காய்ச்சப் பெறுகிறது. அப்பாகு நிறுக்கப்பெறுகிறது. அந்த எடையைக் கொண்டு விளைவுக்குரிய பணம் கம்பெனியாரால் தரப்படுகிறது.

அந்த ஆலையில் நூற்றுக்கணக்கானவர் வேலை செய்கின்றனர். அந்த ஆலை சென்ற நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஏற்பட்டது; சென்ற நூறு ஆண்டுகளாகப் பல்லாயிரக் கணக்கான தொழிலாளரைக் காத்து வருகிறது.

## திருப்பாதிரிப்புலியூர்

இது கடலூருக்கு வடக்கில் மூன்று கல் தொலைவில் கெடில ஆற்றின் தென்கரையில் இருக்கின்றது. இவ்வூர் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் **பாடலிபுரம்** என்று பெயர் பெற்றிருந்ததாகச் சமண நூல்கள் கூறுகின்றன. இவ்வூரில் சமணர் கோவிலும் பெரிய மடமும் அக்காலத்தில் இருந்தன. வாதத் திறமை வாய்ந்தவரும் தங்கள் சமய

நூல்களைப் பழுதறப் படித்தவருமான சமண முனிவர் பலர் இவ்வூர் மடத்தில் வாழ்ந்திருந்தனர்.



திருப்பாதிரிப்புலியூர் : சிவன் கோவில்

திருநாவுக்கரசர் சமணரான பின்பு இம்மடத் திற்றுன் தங்கியிருந்தார். அவர் சைவரான பின்பு பல்லவ வேந்தனும் சைவனுனன். அவனுல் இவ் வூரில் இருந்த சமணர் கோவிலும் மடமும் இடிக் கப்பட்டன என்று பெரிய புராணம் கூறுகிறது.

பல்லவ மன்னனுல் கல்லோடு கடலில் எறியப் பட்ட திருநாவுக்கரசர்,

“ சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.”

என்ற பாடலை முதலாகக் கொண்ட பதிகத்தைப் பாடித் திருப்பாதிரிப்புலியூருக்கு அருகில் கடலி லிருந்து கரை ஏறினர். இங்ஙனம் கரை ஏறிய

இடம் 'கரை ஏறவிட்ட குப்பம்' என்று இன்றும் சொல்லப் பெறுகிறது.

ஆண்டுதோறும் சித்திரைத் திங்கள் அநுஷ நட்சத்திரத்தில் திருநாவுக்கரசர் கரையேறிய நிகழ்ச்சி விழாவாகக் கொண்டாடப்படுகிறது. அன்று திருப்பாதிரிப்புலியூர்ச் சிவன் கோவிலிலிருந்து சிவபெருமானது திருவுருவச் சிலையும், திருநாவுக்கரசரது திருவுருவச் சிலையும் இங்குக் கொண்டு வரப்படுகின்றன. இவ்விழா மிகவும் சிறப்பாக நடந்துவருகின்றது.*

பின்பு திருநாவுக்கரசர் இவ்வூரில் உள்ள சிவன் கோவிலை அடைந்தார்.

"ஈன்ருளு மாயெனக் கெந்தையு மாயுடன் தோன்றினராய்
மூன்ருய் உலகம் படைத்துகந் தான்மனத் துள்ளிருக்க
ஏன்ருன் இமையவர்க் கன்பன் திருப்பா திரிப்புலியூர்த்
தோன்ருத் துணையாய் இருந்தனன் தன்னடி யோங்க
ளுக்கே."

என்று தொடங்கி ஒரு திருப்பதிகத்தையும் பாடிச் சிவபெருமானை வணங்கினுர்.

இவ்வூர்ச் சிவன் கோவில் மிகப் பெரியது. சிவ பெருமானுக்குத் தனிக் கோவிலும் அம்மனுக்குத் தனிக் கோவிலும் பெரிய அளவில் அமைந்துள்ளன. இக்கோவில் திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர் பாடல்கள் பெற்றது. இதில் சோழர்

---

* கடலூரில் உள்ள உப்பங்கழியின் கிளை ஒன்று பழைய காலத்தில் வண்டிப் பாளையம் வரையில் பரவியிருந்தது. அக் கிளை இன்று வண்டிப் பாளையம் வரையில் வரவில்லை. முன்பு அது பரவியிருந்த இடம் இன்று வயல்களாக மாறிவிட்டது. அந்த இடங்களில் மூன்றடிக்குக் கீழ் மணலும், சிப்பி ஓடுகளும் பிற கடற் பொருள்களும் இன்றும் கிடைக்கின்றன.

பாண்டியர் கல்வெட்டுக்கள் பலவாகக் காணப்படு கின்றன. இவ்வூரில் ஞானியார் திருமடம் இருக் கின்றது. இப்பதி இன்று கடலூர்ப் புதுப்பட்ட ணம் என்ற பெயர் கொண்ட பேரூரின் ஒரு பகுதி யாக இருக்கிறது. கெடில ஆற்றுக்கு எதிர்க் கரையில் உள்ள மஞ்சக்குப்பமும் புதுப்பாளையமும் பேரூரின் மற்ற இரு பகுதிகளாகும்.

**மஞ்சக்குப்பம்.**

இது பெண்ணையாற்றின் தென்கரையில் உள் ளது. இது முதலில் டச்சுக்காரருக்குச் சொந்தமா யிருந்தது; பின்பு ஆங்கிலேயர் கைப்பட்டது. பதி னெட்டாம் நூற்றாண்டுப் போர்களில் இவ்வூர் மிக வும் பாதிக்கப்பட்டது. கெடில ஆறு கடலோடு கலக்கும் இடத்தில் வடகரையில் புதுப்பாளை யத்தை அடுத்து **செயின்ட் டேவிட் கோட்டை** ஆங்கிலேயரால் கட்டப்பட்டது. அப்போது மஞ் சக் குப்பத்தைச் சேர்ந்த சில பகுதிகள் அக்கோட் டையைச் சூழ்ந்த பாதுகாப்பு இடங்களாக விளங் கின. இன்று அந்த இடங்களில் அரசாங்க அலு வலகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

செயின்ட் டேவிட் கோட்டை இருந்த இடம் இன்றும் மேடாகக் காணப்படுகிறது. அதனைச் சுற்றிலும் அகழி இருந்தமைக்கு உரிய அடையா ளங்கள் இன்றும் இருக்கின்றன. கோட்டை இருந்த மேட்டில் உப்பனுற்றை அடுத்து ஒரு வள மனை இருக்கின்றது. அதன் வாயிற்சுவரில், "இது கி. பி. 1746 முதல் 1752 வரையில் கிழக்குக் கரை யில் ஆங்கிலேயர்க்குச் சொந்தமான இடங்களுக் குத் தலைநகராய் இருந்தது. இதன் கோட்டைப்

பாதுகாப்புக்கள் பிரெஞ்சுக்காரரால் அழிக்கப்பட்டு விட்டன. 1785-இல் இவ்விடம் ஆங்கிலேயருக்கே உரிமையாயிற்று,''† என்னும் வாசகம் கொண்ட கல்வெட்டுக் காணப்படுகிறது.

இவ்வளமனைக்கு எதிரில் கோட்டை இல்லம் (Fort House) என்னும் பெயருடன் பெரிய வளமனை ஒன்று காணப்படுகிறது. அது மாந்தோப்புக்கு இடையில் அமைந்துள்ளது. கோட்டை அமைந்திருந்த இடம் நாற்புறமும் நீரரண் கொண்டது என்பதையும் வாணிகத்திற்கு ஏற்ற இடம் என்பதையும் இவ்விடத்தை நேரில் காண்பவர் எளிதில் அறிதல் கூடும்.

இக்கோட்டை இருந்த இடத்திற்கு நேர் தெற்கில் கடற்கரையில் கலங்கரை விளக்கமும் மீன் பிடிப்பவர் குப்பங்கள் மூன்றும் கடலூரில் அமைந்திருக்கின்றன. நேர் வடக்கில் தேவனாம்பட்டினம் அமைந்திருக்கிறது.

மஞ்சக்குப்பத்திற்கு நேர் எதிரில் பெண்ணையாற்றுக்கு வடக்கில் **பாகூர்** என்னும் சிற்றூர் அமைந்துள்ளது. பல்லவர் காலத்தில் அங்கு ஒரு வடமொழிக் கல்லூரி இருந்தது என்பது முன்னரே கூறப்பட்டது அன்றோ?

## கடலூர்

இது கடலைச் சார்ந்துள்ள ஊராதலின் 'கடலூர்' எனப் பெயர் பெற்றது. இதற்குக் 'கூட

† "This was Capital of the English possessions on the Coromandal Coast from 1746—1752. Fortifications demolished by the French and site restored to the English in 1785."

லூர்' என்றும் பெயர் உண்டு; கெடில ஆறும் உப்பனாறும் கடலில் கூடுகின்ற இடத்தில் அமைந்துள்ள காரணத்தினால் இப்பெயர் பெற்றது. இது 'பழைய கடலூர்' நகரம் என்று இப்போது அழைக்கப்படுகிறது. இவ்வூர் சிதம்பரத்திலிருந்து விழுப்புரம் செல்லும் இரயில் பாதை அருகில் இருக்கின்றது. இங்கிருந்து விருத்தாசலத்திற்கு இரயில் பாதை செல்கிறது.

இவ்வூருக்குக் கிழக்கே உப்பனாறு பாய்கிறது. அதற்கும் கடலுக்கும் இடையில் சோனாங்குப்பம்*, சிங்காரத் தோப்பு, கோரி என்னும் மீன் பிடிப்பவர் சிற்றூர்கள் மூன்றும், கலங்கரை விளக்கமும் இருக்கின்றன. அக்கலங்கரை விளக்கம் கடலில் பன்னிரண்டு கல் தொலைவு வரை வெளிச்சம் தர வல்லது. இங்குக் கடற்கரை ஆழமில்லாததால் கப்பல்கள் கரைக்குச் சில கல் தொலைவிலேயே கடலில் தங்கிவிடும். கரையாளர்கள் படகுகளின் உதவியால் கப்பலில் வந்துள்ள பொருள்களை இறக்கிக் கரைக்குக் கொண்டு வருவர். இக்கடல் வாணிகத் தொடர்பான அலுவலகங்களும் பொருள்களை வைத்துப் பாதுகாக்கும் கிடங்குகளும் உப்பனாற்றை நோக்கியபடி அமைந்துள்ளன.

---

* சோனாங்குப்பம் என்பது சோனகர் குப்பம் என்பதன் திரிபு; ஒரு காலத்தில் அராபியர் குடியேறி இருந்த குப்பம் ஆதலால் சோனகர் குப்பம் எனப் பெயர் பெற்றது. அவர்கள் வைத்திருந்த அழகிய தோப்பே இன்று சிங்காரத் தோப்பு என்று சொல்லப்படுவது. அடுத்துள்ள கோரி என்னும் சிற்றூர் சோனகர் காலத்தில் சோனகர் உடல்களைப் புதைக்கும் இடமாக இருந்தது. இம்மூன்றும் இன்று மீன் பிடிப்பவர் சிற்றூர்களாக அடுத்தடுத்து இருந்து வருகின்றன.

இந்நகரத்தின் தெற்கே உப்பளங்கள் உள்ளன. இங்கு உப்பெடுக்கும் தொழில் நடைபெறுகிறது. இவ்வூரில் பாரி அண்டு கம்பெனியார் அலுவலகமும், கிடங்கும் இருக்கின்றன. 1760-இல் கட்டப் பெற்ற உரோமன் கத்தோலிக்கர் கோவிலும், கிரைஸ்ட் சர்ச்(சு) என்னும் கோவிலும் இங்கு இருக்கின்றன. கிரைஸ்ட் சர்ச்(சு) என்னும் கோவிலிலும் அதற்குப் பின்னுள்ள இடுகாட்டிலும் செயின்ட் டேவிட் கோட்டையில் பணியாற்றிய உயர் அலுவலரும் நடுநாட்டுப் போர்களில் வீரம் காட்டி உயிர் விட்ட வீரர்களும் புதைக்கப் பட்டுள்ளனர்.

கடலூரில் இருந்த பாதுகாப்புக்கள் எல்லாம் 1803-இல் அழிக்கப்பட்டுவிட்டன. கம்பெனியார் காலத்தில் பயன்படுத்தப் பெற்ற கட்டடம் என்ற முறையில் சொல்லத் தக்கது, இன்று பாரி அண்டு கம்பெனியார் கிடங்காகக் பயன்படுத்தி வரும் கட்டடமேயாகும். இவ்வூரில் செயின்ட் டேவிட் பள்ளி 1717-இல் திறக்கப்பட்டது. அது இன்றளவும் கல்வித் தொண்டு ஆற்றி வருகிறது. அதன் இன்றைய பெயர் எஸ். பி. ஜி. உயர்நிலைப் பள்ளி என்பது. கடலூரில் கிளைவ் தெரு என்று ஒரு தெரு அமைந்திருக்கிறது. இப்பெயர், கிளைவ் பிரபுவையும், 18-ஆம் நூற்றாண்டுப் போர்களையும் வரலாறு படித்தவர்க்கு நினைவூட்டிக்கொண்டிருக்கின்றது.

இவ்வூர் ஏற்றுமதி இறக்குமதிக்குப் பெயர் போனது. பண்ணுருட்டி முதலிய வாணிக இடங்களிலிருந்து அனுப்பப்படும் நிலக்கடலை, நிலக்கடலை எண்ணெய், பிண்ணாக்கு முதலிய பொருள்

கள் இங்கு ஏற்றுமதி செய்யப் பெறுகின்றன. பாரி கம்பெனி, சிந்தியா கம்பெனி, செல்வராஜ் கம்பெனி என்பவை ஏற்றுமதி இறக்குமதி வாணி கத்தைக் கவனிக்கின்றன.

இவ்வூரில் **சமண வேளாளர் தெரு** என்று ஒரு தெரு இருக்கிறது. அத் தெருவில் சமணர் சிலர் வாழ்கின்றனர். அவர்கள் வழிபடும் சிறிய கோவில் ஒன்று அங்கு இருக்கிறது. அக்கோவிலில் உள்ள தீர்த்தங்கரர் திருவுருவங்கள் கண்களையும் கருத்தையும் ஈர்க்கத்தக்க வேலைப்பாடும் பொலிவும் பெற்று விளங்குகின்றன.

# 10. பெண்ணை நாட்டு நாகரிகம்

## கல்வி

### சங்ககாலம்

சங்ககாலத்தில் வாழ்ந்த முடிமன்னர், அரச மாதேவியர், சிற்றரசர் மகளிர், கொல்லர், மருத்துவர், ஆடை வணிகர், கூல வணிகர், பாடினி, குயத்தி, போன்றவர் கவி பாடும் ஆற்றல் பெற்றிருந்தனர் என்பதைச் சங்கநூல்களால் அறிகின்றோம். இவர்தம் பாடல்கள் சொற்செறிவும் பொருட்செறிவும் மிகுந்தவை; பதினெட்டு நூற்றாண்டுகளாகத் தமிழ்மக்களால் பாராட்டப்பட்டு வருபவை.

புலவர் பலர் ஓர் அரசனிடம் சென்று பாடுகின்றனர்—அவன் அப்பாட்டின் பொருளையும், பாடிய புலவரது புலமையையும் நன்கு தெளிந்து பரிசளிக்கிறான் எனின், அவ்வேந்தன் கல்வி அறிவு பெற்றவனாகத்தானே இருத்தல் வேண்டும்! அங்ஙனமே, கபிலர் நப்பசலையார் போன்ற சங்கத்துச் சான்றோர் பாடல்களைக் கேட்டுப் பாராட்டிப் பரிசளித்த மன்னர் கல்வி அறிவிற் சிறந்தவர் என்று கொள்வதே ஏற்புடையது.

மைசூர் நாட்டு அரையம் என்ற ஊரை ஆண்ட இருங்கோவேள் முன்னிலையில் கபிலர் இரண்டு பாடல்களைப் பாடியுள்ளார். நன்னன்மீது மலைபடுகடாம் பாடப்பட்டது—நல்லியக்கோடன்மீது சிறுபாணாற்றுப் படை பாடப்பட்டது—இவற்றைப் பாடிய புலவர் இருவர் அச்சிற்றரசரால் சிறப்பிக்கப் பெற்றனர் என்ற விவரங்களை அறிய, அச்

சிற்றரசர் இவ்விரு நீண்ட பாடல்களின் உட் பொருளை உணர்ந்துதானே புலவர்க்குப் பரிசளித் திருத்தல் வேண்டும்? இங்ஙனமே மலையமான் களும் புலவர்கள் தம்மீது பாடிய பாடல்களின் பொருளை உணர்ந்துதானே அப்புலவர்களைச் சிறப்பித்திருத்தல் வேண்டும்? எனவே, சான் றோரால் பாடப்பெற்ற இக் குறுநிலமன்னர் கல்வி யறிவிற் சிறந்திருந்தனர். என்று கொள்வதே ஏற்புடையது.

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழிலும் வல்ல புலவர்—பாணர்—கூத்தர் என்பவரை உவப் போடு வரவேற்று அவர்கள் மனம் மகிழும்படி வேண்டியன நல்கிய இப்பெருமக்கள், தம் தாய் மொழியின் வளர்ச்சியில் மிக்க கருத்துடையராய் இருந்தனர் என்பது ஐயமற விளங்குகிறதன்றோ? இவ்வாறு கல்வி, கேள்வி, தாய்மொழிப்பற்று, சான் றோர்பால் பெருமதிப்பு இவற்றையுடைய இப்பெரு மக்களது ஆட்சியின்கீழ் இருந்த பொதுமக்கள் தாய்மொழிக் கல்வியில் பயிற்சி பெற்றிருந்தனர் என்று கூறுதல் பொருந்தும்.

## இடைக் காலம்

பல்லவர் காலத்தில் திருப்பாதிரிப் புலியூரில் பெரிய **சமணர் மடம்** ஒன்று இருந்தது. அங்குக் கல்வி கேள்விகளிலும் வாதத்திறனிலும் வல்ல சமண முனிவர்கள் இருந்தனர். திருநாவுக்கரசர் அவர்களிடம் சமயநூல்களைக் கற்றுத் 'தரும சேனர்' என்ற பட்டத்தைப் பெற்றுச் சிறப்புற்றார். அம் முனிவர்கள் **பாலி மொழியிலும், வடமொழி யிலும், தமிழ் மொழியிலும்** வல்லவர்கள்.

கி. பி. 9-ஆம் நூற்றுண்டில் பெண்ணையாற்றின் வடகரையில் உள்ள பாகூரில் **வட மொழிக் கல்லூரி** இருந்தது என்பது முன்னரே கூறப்பட்டுள்ளது. அக்கல்லூரியில் பலவகைச் சாத்திர நூல்கள் கற்பிக்கப்பட்டன என்று பட்டயம் பகர்கின்றது. அக்காலத்தில் நாடாண்ட பல்லவ மன்னர்கள் வடமொழியிலும் தமிழ் மொழியிலும் வல்லவர்கள்; இவ்விரு மொழிகளிலும் வல்ல புலவர்களை ஆதரித்தனர். பெண்ணை நாட்டைச் சேர்ந்த திருநாவுக்கரசரும் சுந்தரரும் ஏறத்தாழ நாலாயிரம் பாடல்கள் பாடியுள்ளனர்.

**பிற்காலம்**

தலபுராணங்கள் எழுதப்பட்ட பிற்காலத்தில் நடு நாட்டுச் சிவத்தலங்களாகிய திருவதிகை, திருத்துறையூர், திரு நாவலூர், திருக்கோவலூர், திரு ஆமாத்தூர் முதலிய தலங்களைப்பற்றிய புராணங்கள் ஏற்பட்டுள்ளன. இவை பெண்ணை நாட்டின் இலக்கிய வரிசையில் இடம் பெறத்தக்கவை. இவ்வாறு தல புராணம் பாடும் புலவர் பெருமக்கள் பெண்ணை நாட்டில் பின் நூற்றுண்டுகளில் வாழ்ந்தனர்.

கல்வி நலம் சிறந்துள்ள இக்காலத்தில் பெண்ணை நாட்டுப் பேரூர்களில் உயர்நிலைப் பள்ளிகள் ஏற்பட்டுள்ளன; சிற்றூர்களில் தொடக்கநிலைப் பள்ளிகளும், நடுநிலைப் பள்ளிகளும் கல்வித் தொண்டு செய்கின்றன. திருப்பாதிரிப்புலியூரை அடுத்த **வண்டிப் பாளையம்** என்னும் சிற்றூரில் செங்குந்தர் மரபில் தோன்றிய

பலர் இன்று மலேயாவிலும் தமிழ் நாட்டு ஊர்களி லும் தமிழ்ப் பேராசிரியராகவும் தமிழாசிரியராகவும் இருந்து தமிழ்த் தொண்டு செய்துவருகின்றனர். மலேயாப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரிய ராக இன்று பணியாற்றி வரும் பேராசிரியர் **அரசன் கண்ணனூர்** இவ்வண்டிப் பாளையத்தைச் சேர்ந்தவரே யாவர்.

காலஞ் சென்ற **ஞானியார் சுவாமிகள்** வட மொழி, தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழி களிலும் சிறந்த புலமை பெற்றவர்; மிகச் சிறந்த சொற்பொழிவாளர். அவரது மாணவியாகத் திருப் பாதிரிப்புலியூரில் பயின்று அவ்வூரிலேயே தமிழா சிரியையாகப் பணியாற்றிய **பண்டிதை அசலாம் பிகை** அம்மையார் '**காந்தி புராணம்**' என்னும் பெருநூலைப் பாடிப் புகழ் பெற்றவர்.

பல நூறு செய்யுட்கள் செய்யும் ஆற்றல் பெற்ற தமிழ்ப் புலவர்கள் இன்றும் பெண்ணை நாட்டில் இருக்கின்றனர். அவருள் திருக்கோவ லூர்ப் புலவர் **வடிவேல் முதலியார்** என்பவர் குறிப்பிடத்தக்கவர். அவருடைய பாக்களுள் இரண் டினை இங்குக் காண்க:

## நாட்குறிப்புச் (டைரி) செய்யும் நலன்கள்

*" சென்ற நிகழ்ச்சி தெரிவிக்கும்; செய்யாமல்*
*நின்ற நிகழ்ச்சி நினைவூட்டும்;—என்றுமே*
*ஐயமின்றிச் செய்கை யறியக் கருவியுமாம்*
*கையில் குறிப்பிருந்தக் கால்".*

மூல ஓலையைப் பாதுகாப்பில் வைத்துவிட்டுப் படி ஓலையைக் கொண்டுவருவதற்குக் காரணம் :

*" முன்னம் ஒருவன் முறியோலை கீறியிட்ட*
*அன்ன செயலை யறிந்தும்*—இன்னுந்*
*தனிப்பிரதி யன்றியொன்றைத் தான்கொணரு வேனோ*
*இனிதேற்றுக் கொள்வீர் இதை."*

## தொழிலும் வாணிகமும்

### விளைவு

ஆற்றுப் பாய்ச்சல் மிகுதியாயுடைய நிலங்களில் சம்பா முதலிய நெல் வகைகள் பயிர் செய்யப்படுகின்றன. பல ஏக்கர் நன்செய் வயல்களில் கரும்பு பயிர் செய்யப்படுகின்றது. புன்செய் நிலங்களில் வேர்க்கடலை மிகுதியாய்ப் பயிராகிறது. புகையிலை, மிளகாய், கேழ்வரகு, சோளம், கம்பு முதலியன பயிராகின்றன.

### தொழில்கள்

நெல்லிக்குப்பத்தில் சர்க்கரை செய்யும் தொழில் சிறப்பாக நடைபெற்று வருகிறது; பல வகை ஆடைகளை நெய்யும் நெசவுத் தொழில் பல பேரூர்களிலும் சிற்றூர்களிலும் நடைபெறுகின்றது. நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், இலுப்பெண்ணெய், வேர்க்கடலை எண்ணெய் ஆட்

---

* வேதியராக வந்த சிவபெருமான் சுந்தரர் தமக்கு அடிமை என்று எழுதப் பெற்ற பனையோலையைக் கையில் வைத்திருந்தார். அதைச் சுந்தரர் வாங்கிக் கிழித்துவிட்டார். இச் செய்தி ‘ திருவெண்ணெய் நல்லூர் ’ என்னும் தலைப்பின்கீழ்த் தெளிவாகக் கூறப்பட்டுள்ளமை காண்க.

டும் தொழிலும் மிகுதியாக நடைபெறுகிறது. செங்கல் செய்யும் தொழிலும் மண் பொம்மை கள் செய்யும் தொழிலும் முன் சொன்னவாறே பண்ணுருட்டியில் உயர்ந்த முறையில் நடந்து வருகிறது. கடலூரில் படகு செய்யும் தொழில் நடைபெறுகிறது. கடற்கரையோர ஊர்களில் மீன் பிடிக்கும் தொழிலும், மீன் உப்புப்படுத் தும் தொழிலும் செம்மையாய் நடைபெறுகின்றன. சில ஊர்களில் பாய் பின்னுதல், கண்ணுடி வளையல் செய்தல், சிறிய அளவு பித்தளைப் பாத்திரங்கள் செய்தல் முதலிய சிறு தொழில்கள் நடக்கின்றன. கடலூர் போன்ற பல இடங்களில் உள்ள கடற்கரை ஓரங்களில் உப்பு எடுக்கும் தொழில் ஓரளவு நடக் கிறது. சில ஊர்களில் சுண்ணும்பு தயாரிக்கும் தொழிலும் நடத்தப்படுகிறது.

## வாணிகம்

சவுக்கு, சாயப்பொருள்கள், சர்க்கரை, அரிசி, முந்திரிக்கொட்டை, தேங்காய், பொம்மைகள், தோல், நிலக்கடலை, புகையிலை, மிளகாய், உப்பு, உலர்ந்த மீன் முதலியன இந்தியாவின் பல பகுதி களுக்கும் அயல்நாடுகளுக்கும் ஏற்றுமதியாகின் றன. வேர்க்கடலை எண்ணெய் சிறப்பாக இரங் கூனுக்கும் வேர்க்கடலைப் பிண்ணுக்கு ஜாவாவுக் கும் ஏற்றுமதியாகின்றன. நெல்லிக்குப்பத்தில் தயாரிக்கப்பெறும் அஸ்கா சர்க்கரையும் வெள்ளைச் சர்க்கரையும் நடு நாட்டுக் கைலி ஆடைகளும் எண்ணெய் வகைகளும் மலேயாவுக்கும் பிற நாடு களுக்கும் ஏற்றுமதி ஆகின்றன.

நெல்லிக்குப்பத்து ஆலையில் தூய்மை பெறுவதற்காகப் பல இடங்களிலிருந்து பழுப்புச் சர்க்கரை இறக்குமதியாகிறது. புகைவண்டிகளுக்குத் தேவையான நிலக்கரி வங்கத்திலிருந்து கொண்டு வரப்படுகிறது. கல்கத்தாவிலிருந்து சணலும், மலேயாவிலிருந்து பாக்கும், யாழ்ப்பாணத்திலிருந்து பனைமரத் துண்டங்களும் இறக்குமதியாகின்றன. கப்பல்களில் ஏற்றுமதி இறக்குமதி வேலைகளைக் கவனிக்கக் கடலூரில் சில கம்பெனிகள் இருக்கின்றன. அவற்றுள் பாரி அண்டு கம்பெனி மிகச் சிறந்தது.

**சமயநிலை**

இன்றுள்ள தமிழ் நூல்களுள் **தொல்காப்பியம்** என்னும் இலக்கண நூல் காலத்தால் முற்பட்டது. தமிழகம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்று நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தது. குறிஞ்சி நிலத்துக்கு முருகனும், முல்லை நிலத்துக்குக் கண்ணனும், மருத நிலத்துக்கு இந்திரனும், நெய்தல் நிலத்துக்கு வருணனும் தெய்வங்கள் என்று தொல்காப்பியர் குறித்துள்ளார்.

கண்ணனை வழிபடும் சமயமே **வைணவ சமயம்.** சிவலிங்கங்கள் இந்த நாட்டில் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக வழிபாடுபெற்று வருகின்றன. சிவலிங்கத்தை வழிபடும் சமயமே **சைவ சமயம்.** எனவே, சைவமும் வைணவமும் தமிழகத்திற்கே உரிய சமயங்கள் ஆகும். **சமணம்** வட இந்தியாவிலிருந்து தமிழகத்திற்கு வந்த புதிய சமயம். அது சமண முனிவர்களால், தமிழகத்

தில் நுழைக்கப்பட்டது. **பௌத்தமும்** வட இந்தியா விலிருந்து வந்த புதிய சமயமாகும். சமணமும் பௌத்தமும் ஏறத்தாழக் கி. மு. மூன்றும் நூற்ருண்டில் தமிழகத்தில் நுழைக்கப்பட்டன. இந் நான்கு சமயங்களைப் பற்றிய குறிப்புக்களையும் செய்திகளையும் சங்க நூல்களில் காணலாம்.

நடு நாட்டில் திருக்கோவலூர், திரு இடையாறு, திருவெண்ணெய் நல்லூர், திருத்துறையூர், திரு அதிகை, திரு ஆமாத்தூர், திருநாவலூர் முதலியவை பாடல்பெற்ற சிவத்தலங்கள். திருக்கோவலூர் மிகச் சிறந்த வைணவத் தலம். திருப்பாதிரிப்புலியூர் பெயர்பெற்ற சமணத்தலம். தென் ஆர்க்காடு மாவட்டத்தில் சில சிற்றூர்களில் இன்றும் சமணர்கள் பெருந்தொகையினராய் வாழ்கின்றனர். சிற்ருமூர், கடலூர் முதலிய வூர்களில் சமணர் கோவில்கள் இருக்கின்றன.

கருநாடக நவாபுகளின் ஆட்சிக் காலத்தில் **இசுலாம்** பெண்ணை நாட்டில் பரவியது. அதன் பயனுக இன்று ஒவ்வோர் ஊரிலும் முஸ்லிம்கள் இருக்கின்றனர். நெல்லிக்குப்பம் போன்ற சில ஊர்களில் முஸ்லிம்கள் பெருந்தொகையினராய் இருக்கின்ருர்கள்.

மேனுட்டுப் பாதிரிமார்களின் உழைப்பினுல் **கிறித்தவம்** பெண்ணை நாட்டில் பரவி இருக்கிறது. இன்று பேரூர்களிலும் சிற்றூர்களிலும் இச் சமயத்தைச் சேர்ந்தவர் வாழ்ந்து வருகின்றனர். பௌத்த முனிவரையும் சமண முனிவரையும் போலவே கிறித்தவப் பாதிரிமாரும் இலவசப் பள்ளிகளையும் மருத்துவ மனைகளையும் ஏற்படுத்தித் தமிழ் மக்களுக்குக் கல்வித் தொண்டும் மருத்து

வத் தொண்டும் புரிந்தனர். இத்தொண்டுகளினால் ஈர்க்கப்பட்ட தமிழ் மக்கள் இயேசுப் பெருமான் போதித்த அன்பு மதத்தைத் தழுவிக் கிறித்தவர் ஆயினர்.

இன்று பெண்ணை நாட்டில் சைவம், வைண வம், சம்மணம், இசுலாம், கிறித்தவம் என்னும் ஐந்து சமயங்கள் இருக்கின்றன. இவ்வைந்து சமயங்களைக் குறிக்கும் திருக்கோயில்களும் விளங்குகின்றன. இக்கோவில்களில் ஆண்டு தோறும் விழாக்கள் குறைவற நடைபெறுகின்றன.

## கலைகள்

### கலை

மனிதனது உள் உணர்ச்சியிலிருந்து பொங் கித் ததும்பித் தானாக வெளிப்படும் ஆற்றலே **கலை** என்பது. அவ்வாற்றல் சிலரிடம் காவியமாக வெளிப்படும்; சிலரிடம் ஓவியமாக வெளிப்படும்; வேறு சிலரிடம் கண்ணையும் கருத்தையும் ஈர்க்கும் கட்டடமாக வெளிப்படும்; மற்றும் சிலரிடம் அற் புத வேலைப்பாடமைந்த சிற்பமாக வெளிப்படும்; மேலும் சிலரிடம் ஐம்புலன்களையும் ஒன்றச் செய் யும் இன்னிசையாக வெளிப்படும்; பின்னும் சில ரிடம் விழிகட்கு விருந்தளிக்கும் நடனமாகக் காட்சியளிக்கும்; இவையன்றிச் சிலரிடம் நாடகக் கலையாகவும் தோற்றமளிக்கும். இவை யாவும் **கலைகள்** என்றே பெயர் பெறும்.

சமயம் என்பது உள் உணர்ச்சியின் பயனாய்த்

தோன்றுவது. கலைகளும் உள் உணர்ச்சியின் பயனாய் வெளிப்படுவனவயோகும். ஆதலாற்றான் கலைகளும் சமயமும் தம்முள் தொடர்புடையன என்று சொல்லலாம்.

**கட்டடக் கலை**

பாடல்பெற்ற கோவில்களுள் திருக்கோவலூர்ப் பெருமாள் கோவிலும், திரு அறையணி நல்லூர்ச் சிவன் கோவிலும், திருவதிகைச் சிவன் கோவி லும் கட்டடக் கலையில் சிறந்து விளங்குவன. வானளாவிய கோபுரங்கள், வேலைப் பாடமைந்த மண்டபங்கள், தேர் போன்ற அமைப்புடைய திரு வதிகை விமானம் ஆகியவை பெண்ணை நாட்டுக் **கட்டடக் கலைக்குச்** சிறந்த சான்றுகளாகும்.

**சிற்பக் கலை**



புத்தர் சிலை

கோவில் தூண்களில் உள்ள உருவச் சிற்பங் களும், சுந்தரர் திருநாவுக்கரசர் புத்தர் போன்ற


பெரியார்களைக் குறிக்கும் தனி உருவச் சிற்பங் களும், திருவதிகை விமானத்தில் உள்ள சுதைச் சிற்பங்களும், திருவதிகைக் கோவில் பெரிய கோபுர வாயில் நிலையில் செதுக்கப்பட்டுள்ள நடனச் சிற் பங்களும் பெண்ணை நாட்டுச் சிற்பக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும்.

## இசைக் கலை

திரு ஆமாத்தூர், திருக்கோவலூர், திருவெண் ணெய் நல்லூர் முதலிய ஊர்களிலுள்ள பெரிய கோவில்களில் சோழர் காலத்தில் திருமுறைப் பாடல்களும் ஆழ்வார் பாசுரங்களும் பண்ணோடு பாடப்பட்டு வந்தன என்பதைக் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. இங்ஙனம் பாடுவதற்கென்றே இசைவாணர் பலர் அமர்த்தப்பெற்றிருந்தனர். அவர்களுக்கு நிலங்கள் விடப்பட்டிருந்தன. இவற்றை நோக்க, சமயத்தைச் சார்ந்தே பெண்ணை நாட்டில் இசைக் கலையும் சிறப்புற வளர்ந்து வந்தது என்பது அறியப்படும்.

## நடனக் கலை

சிதம்பரம் மேலைக் கோபுர வாயில் நிலையிலும் திருவண்ணாமலைச் சிவன் கோயில் கோபுர வாயில் நிலையிலும் செதுக்கப்பட்டுள்ள நடனச் சிற்பங் கள் பரத முனிவரால் குறிக்கப்பெற்ற நடன வகை களைத் தெரிவிப்பனவாகும். அவற்றைப் போலவே திருவதிகைப் பெரிய கோபுர வாயில் நிலையிலும் நடன வகைகள் பல சிற்ப வடிவில் காட்டப்



நடனச் சிற்பங்கள்

பட்டுள்ளன. இவை பெண்ணை நாட்டு நடனக் கலை வளர்ச்சியை நன்கு தெரிவிப்பனவாகும்.

**நாடகக் கலை**

திருப்பாதிரிப்புலியூர்க்குப் பூம்புலியூர், கன்னிவனம் என்ற பெயர்களும் உண்டு. முதற் குலோத்துங்கன் காலத்தில் **பூம்புலியூர் நாடகம்** என்ற ஒன்று செய்யப்பட்டது; செய்தவருக்குப் பரிசு தரப்பட்டது. அது திருப்பாதிரிப்புலியூரைப் பற்றியது. அம்மன் கன்னிகையாக இருந்து சிவனை வழிபட்டமை, அப்பர் சமணராய் இருந்தமை, பின் சைவரானமை, சமணருடைய கொடுமைகட்கு ஆளானமை, பிறகு கடலில் மிதந்து கரை சேர்ந்து அவ்வூர்க் கோவிலில் பதிகம் பாடினமை, மகேந்திரன் அங்கிருந்த சமணப் பள்ளியை இடித்துக் குணபர ஈசுவரம் கட்டியமை போன்றவற்றைக் காட்சிகளாகக் கொண்ட நூலாக அஃது இருக்கலாம். அது நடிக்கப்பெற்றமைக்குச் சான்று இல்லை

யாயினும், சமயப் பற்று மிக்கிருந்த அக்காலத்த் அது நடிக்கப்பட்டது எனக் கருதுதல் தவருகாது.

இப் பூம்புலியூர் நாடகத்தைச் செய்தவர் பா சமய கோளரி மாமுனி என்பவர். இப் பெரியா **கன்னிவன புராணம்** என்னும் செய்யுள் நூலையும் பாடியுள்ளார். இவ்விரு நூல்களும் இப்பொழுது கிடைக்கவில்லை.

**அமைதியுள்ள வாழ்க்கை**

பெண்ணை நாட்டில் சைவர், வைணவர், சமணர், முஸ்லிம்கள், கிறித்தவர் ஆகிய பல சமயத்தினரும் வாழ்கின்றனர். பல ஊர்களில் இச் சமயத்தினரின் கோவில்களும் இருக்கின்றன. சமயத்தால் வேறுபட்டிருப்பினும் இவர் அனைவரும் தமிழரே; இவர்தம் தாய்மொழி தமிழே; ஆதலின் இவர்கள் இந்த உண்மையை உணர்ந்து, சமயப் பூசல்களுக்கு இடந்தராது, மனவொற்றுமையோடு எல்லாத் துறைகளிலும் கலந்து உறவாடுகின்றனர். இதனுல் சமுதாயத்தில் அமைதி நிலவுகின்றது என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

ஆர். கே. நூலகம்
மா. ரா. அரசு
சென்னை-600001